வீரவநல்லூர் குமாரசுவாமி தேசிகர் இயற்றிய

# குமாரசுவாமியம்

## மூலகாண்டம்

1. காவிய இயற்படலம்
2. தினாதி நாமோதயப் படலம்
3. நட்சத்திர சரித்திரப் படலம்

(மூலமும் - உரையும்)



### காப்பு

போதுஇடம் ஆகிய வேதியன் நாதபுராதனன், மால் முதலோர்
ஈது இடம் ஆய்வருவார் எனில் யாவும் விடாது இயல்பு ஆக நவில்
சோதிடமே திடம் ஆக நடாவு "குமார சுவாமியம்" யான்
ஓதிடவே, எனது ஓர் அகம் வாழ்பவன் ஆனை சகோதரனே

இதன் பொருள் : செந்தாமலை மலரின் கண் வீற்றிருக்கும் பிரம தேவனும், சப்தாட்டம பரமரூப அநாதியான உருத்திர மூர்த்தியும், மகாவிஷ்ணுவும், மகேஸ்வரனும், சதாசிவனும் இந்த பூமியின் கண் வந்து ஜனிப்பார்களேயாகில், அவர்களுடைய ஆயுர்த்தாயம் கிரியா கமனம் முதலிய யாவற்றையும் வழுவாது உள்ளவாறு சொல்லும் ஜோதிடத்தைச் சொல்லா நின்ற "குமாரசுவாமியம்" என்னும் நூலை யான் சொல்லும் பொருட்டு எனது ஒப்பற்ற இருதய கமலத்தின்கண் நீங்காமல் எழுந்தருளியிருப்பவன் விக்னேஸ்வர சகோதரனான சுப்பிரமணியக் கடவுள்.

### நூற்பயன்

அவ்வை, அவட்கு இளையவன் "எண் எழுத்து இருகண்" தெய்வத்
நூல் ஆகாது எனினும் மெய்த்தொண்டற்கு உளது எவ்வளவு உண்டு
இவ்உலகர்க்கு உரைத்தது சத்தியம் எனும் மார்க்கண்டற்கு
இறப்பு இருப்பு என்றைக்கும் ஒன்று என்று இசைத்தது கேட்டிருந்தும்
கவ்வை இல் பாக்கிய காலத்து அயர்த்தவனாகிலும் துர்க்
காலம் அறிந்து, அதைக் கடத்தக் கடவுளர்க்கும் கடவாத்
தெவ் அடு வேலாயுத தற்பரகுரு தேசிகனைச்
சிந்தை செயில் அவன் எமனாந்தகன் சகத்து இந்திரனே

இதன் பொருள் : ஔவையானவள் "எண்ணும் எழுத்தும் கண்எனத் தகும்" என்றும், திருவள்ளுவர் நாயனார், "எண்

என்ப ஏனை எழுத்து என்ப இவ்விரண்டும் கண்என்ப வாழும் உயிர்க்கு" என்றும், "தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன் "மெய்வருத்தக் கூலிதரும்'' என்றும் லோகோபகாரமாகச் சொல்லியிருப்பதனுள்,

'தெய்வத்தால் ஆகாது எனினும்' என்ற வாக்கியத்தை சத்தியமாகக் கொண்டு முயற்சி பண்ணின மார்க்கண்டேயருக்கு என்றும் பதினாறு வயதாக ஞானரூபியாகிய பரமசிவன் திருவுளம் பற்றி அருளிய சரிதத்தைக் கேட்டிருந்தும், துன்பமே தெரியாத பாக்ய காலத்தில், அவ்வித முயற்சியை மறந்திருந்தானாகிலும் ஆபத்காலத்தை இந்நூலால் அறிந்து அதைக் கடக்கும் பொருட்டு, சகல தேவர்களாலும் வெல்லுதற்கு அரிய சத்துரு சங்காரனான வேலாயுதக் கடவுளைத் தியானம் பண்ணுவானாகில், அவனே யமனாந்தகன் என்றும் பூலோக இந்திரன் என்றும் சொல்லப்படுவான்.

நூற்பயன் முற்றிற்று

## மூலகாண்டம்
## காவிய இயற்படலம்

பூங்கமலத் தேவன் அருள் பொன்கடத்து உற்பவித்த
பொதியவரைக் குறுமுனி செந்தமிழ் பொருள் கேட்பதற்கா
ஓங்கிய சந்தாசலச் செந்தூர்க்கு இவன் எத்தினமும்
உற்றிடும் அத்தினத்தில் ஒரு தினத்தில் இவன் உளத்தில்
தாங்கிய சோதிடத்து இயல் சொல் குருநாத தேவ
சகாய திருவுளம் இரங்கத் தக்கது எனக்கு எனும் முன்
தேங்கமழ்வாய் மலர்ந்து தினம் முதல் பேர் சொற்றனன், "அத்
திரிதரு புத்திரி" எனும் அத்திரிபுரை புத்திரனே.

இதன் பொருள் : அழகிய கமலாசனனான பிரமதேவன்





தந்தருளிய பொன்போலும் பிரபையுடைய கும்போதயனான பொதியவரையின்கண் வீற்றிருக்கும் அங்குட்டப்பிரமாண வடிவமாகிய அகத்தியனானவன் செவ்விதாவிய தமிழ் நூல்களின் பொருள்களைக் கேட்கும் பொருட்டு மிகுதியும் வளர்ந்தோங்கிய சந்தன சயிலத்தையுடைய திருச்செந்தூர்க்குச் சதா காலமும் வந்து கொண்டிருப்பான். இப்படி வரும் தினங்களில் ஒருநாள் சகல லோக சம்பிரதாயங்களையும் சோதிடத்தினாலேயேதான் தெரிய வேண்டுமென்று தன்னுடைய இருதயத்தில் உதயமான படியால் தனது குரு சன்னிதானத்தில் வந்து, என் குருநாத! தேவ சகாயா! என்று அநேகமாகிய தோத்திரம் செய்து "சோதிட நூலை'' அடியேனுக்குத் திருவுளமிரங்கி உபதேசித்தருள வேண்டுமென்று இவன் விண்ணப்பம் செய்யா முன்னம் வாசனை கமழா நின்ற செவ்வாம்பலைப் போலும் அழகினையுடைய திருவாய் மலர்ந்து முதலில் நட்சத்திரம் முதலாவனைக்கெல்லாம் உரிச்சொல் உரைத்தனன் பர்வதராஜன் தந்த புத்திரியாகிய பராசக்திக்குப் புத்திரனாகிய சுப்ரமண்யக் கடவுள்.

காவிய இயற்படலம் முற்றிற்று

அரும்பொருட் சொற்கள் :

| | |
|---|---|
| பூங்கமலத் தேவன் | பிரமன் |
| பொன்கடம் | பொன்போன்ற கும்பம் |
| குறுமுனி | அகத்தியன் |
| சொற்றனன் | சொன்னான் |
| அத்திரிதருபுத்திரி | மலைராஜன் மகள் |
| திரிபுரை | முப்புரம் எரித்தவள், பார்வதி, பராசக்தி |

காப்புச் செய்யுளில் கூறியிருக்கும் ஓர் உண்மை என்னவெனில், கடவுள் முதல் யாராயிருந்தாலும் இந்த பூமியில் வந்து பிறப்பால்களேயானால் மனிதனுக்கு நேரும் இன்ப

துன்பங்கள் அத்தனையும் அவர்கள் அனுபவித்தே தீரவேண்டும் என்பதே இயற்கை நியதி. இது பூமியின் தத்துவமாகும்.

நூற்பயன் என்பது ஒரே செய்யுள். இதில் விதியை முன்கூட்டி, இந்த ஜோதிடக் கலையின் மூலம் தெரிந்து அதற்குரிய கடவுளை, குறிப்பாக முருகனை முறையோடு வழிபட்டு வந்தால் நமக்கு நேரும் துன்பங்களிலிருந்து விடுபட முடியும் என்பது உறுதிப்படுத்திக் கூறுகிறது.

காவிய இயற்படலம் என்பதும் ஒரே செய்யுள். இது முருகன் அகத்திய முனிவருக்கு ஜோதிடத்தை எப்படி போதித்தார் என்பதை விளக்குகிறது.

இந்த மூன்று செய்யுட்களிலிருந்து தெரிய வருவது என்னவென்றால் இந்தக்கலை மனித வாழ்க்கையைப் பண்படுத்தி உயர் வாழ்க்கை அடைய வழிகாட்டும் ஓர் அற்புத விஞ்ஞான நுண்கலையாகும் என்பதைத் தெற்றென விளக்குகிறது.

இந்தக் கலை காட்சிப் பொருளாகிய உருவம், வண்ணம் இவைகளைக் கொண்டும், கண்ணுக்குத் தெரியாத கருத்துப் பொருள் இவைகளைக் கொண்டும், காற்று, குளிர், வெப்பம் ஆகிய உணர்ச்சிப் பொருள்களைக் கொண்டும், பலவகைப் பொருள்களின் ஓசையைக் கொண்டும் மனிதனின் இன்பதுன்பங்களை விளக்க வந்த நுண்கலைக் கருவியாகும்.



அடுத்து நட்சத்திரப் பரியாயப் பெயர்களைக் கவனிப்போம்.

## தினாதி நாமோதயப் படலம்

## நட்சத்திரப் பரியாய நாமம்

இரலை - பரிப்பேர்; அடுப்பின் பேர் ; எரிப்பேர் ; பார், தே-
ரின்பேர்; மான்தலைப்பேர்; யாழ் இறைப்பேர்; வேய், கடைப்பேர்;
குரு, மதி, தைப்பேர்; பனிப்பேர்; நுகப்பேர்; ஆகு, உமைப் பேர்;
குளப்பேர்; உத்தமன்பேர்; வத்திரப்பேர்; கோகனகம்

திரிசுடர்ப்பேர்; முறப்பேர்; புல் பேர்; அளிப்பேர்; திதிபுத்
திரர்பேர்; நீர்ப்பேர்; முடிப்பேர்; மால்பேர்; வீப்பேர்; செக்கு
உருஇனப்பேர்; நாழிப்பேர்; அரசு முரசுப்பேர்;
ஓடப்பேர்; - அசுவினி தொட்டு உரைப்பதும் இப்பேரே.

**இதன் பொருள் :**

1. அசுபதி - இரலை, பரிப்பேர்

இரலையின் பெயரும் பரியின் பெயரும் என்று பொருள்.

இரலை - கருமான், தலைமான், புல்வாய், கிள்ளை, கொக்கு, ஆன்மானின் பெயர்கள். அவை - கலை, வச்சயம்

பரி - குதிரையின் பெயர்கள்

அவை - துரகம், பாடல், கிள்ளை, பாய்மா, துரகதம், வாசி, உன்னி தூசி, கந்தருவம், கற்கி (கல்கி), அரி, அயம், இவுளி, மா, அசுவம், புரவி, கோரம், குரகதம், கோணம், கொக்கு, கொய்யுளை, சடிலம், கோடை கனவட்டம், அத்திரி, துரங்கம், கந்துகம், கோடகம், வயமா, சென்னி, ஐப்பசி, ஏறு, தேசி, முன்னாள், மருத்துவநாள், தலைநாள் என்பனவாகும்.

2. பரணி - அடுப்பின் பேர்

அட்டுதல், சுசிதலம், காமரம், சுல்லி, குமுதம், உத்தானம், பயம், காடு, கிழவோன், பூதம், தாழி, சேறு, போதம், முக்கூட்டு, தாசி, பகலவன், தராசு, கங்குல், பாகு, தருமன் நாள் என்பனவாகும்.

3. கார்த்திகை - எரிப்பேர்

அளக்கர், அளகு, இறால், நாவிதன், வாணன், தழல், ஆரல், அறுவாய், நெருப்பு, அழல், உதாசனன், தேயு, வசு, உதகவன், தனஞ்செயன், தழலி, கனலி, எழுநா, அனலி, முளரி, அனல் அழலி, கனல், அரி, கருநெறி, சுசி, ஒளி, தபனன், சுடர், சிகி, சோதி, தூமகேது, வன்னி, சுவலன், பாவகன், சித்திரபானு, அங்காரகன், ஞெகிழி, அயவாகனன், காற்றின் சகாயன், அறுமீன், அங்கி நாள், எரிநாள் என்பனவாகும்.

4. ரோகிணி. - பார் - தேரின் பேர்

இதற்கு பாரின் பெயரும், தேரின் பெயரும் என்று பொருள்.

பார் - மண்ணுலகு, அவனி, வையகம், அகலிடம், காசினி, புவனி, புடவி, பூதலம், பூமி, புவனம், படி, புவி, பொழில், பூ, சகம், மேதினி, தரைதாலம், சாந்தை, யுகம், தாரணி, லோகம், தரணி, தலம், நீர்வரைப்பு, தராதலம், மகாதலம், நிலம், பிருதிவி, தரம், நிலை, ஞாலம், அசலை, பூவலயம், அளக்கர், மண்டலம், பவனம், அகட்டிநடு, பாலம் விபுலம், கோத்திரை, குவலயம், கு, கோ, நேமி, தாத்திரி, திணை, வேலாவலயம, சக்கரம், பொறை, நகம், பாரி, வசுந்தரை, வசுமதி, வசுதை என்பவனாகும்.

தேரின் பேர் - தேர், சகடு, பண்டி, சதி, உருள், விமானம், ஊற்றால், உரோணி, உருளி, கால், ஆழி, பரிதி, உந்தி, திகிரி, சில்லி, பிரமன்நாள் என்பனவாகும்.

5. மிருகசீரிஷம் - மான்தலைப்பேர்

மிருகவதனம், மான்முகம், மாழ்கு, மார்கழி, நரிப்புறம், மும்மீன், பாலை, வெய்யோன், ஐந்தானம், மதி, பேராளன், இந்திரன், மான்தலை, மதிநாள், விது, திங்கள் நாள் என்பனவாகும்.

6. திருவாதிரை - யாழ், இறைப்பேர்

இதற்கு யாழின் பெயரும் இறையின் பெயரும் என்று பொருள்.





யாழ் - தந்தி, வீணை, கின்னரம், கலம், கோட்டம், கோடவதி, கருவி, வில், விளஞ்சி என்பவனாகும்.

இறைப்பேர் - இதற்கு சிவபெருமான் பெயர் முழுவதும் வரும். இதில் குறிப்பாக வரும் பெயர்கள் - அரசன், உருத்திரன், ஈசுரன், சதாசிவன், நக்கன், இறைவன், சங்கரன், சம்பு, சிவன், புரந்தகன், பூதநாதன், பசுபதி, வாமதேவன், நீலகண்டன், கபாலி, உமாபதி, ஆதி, தற்பரன், ஞானமூர்த்தி. அரன்நாள் என்பவனாகும்.

7. புனர்பூசம் - வேய், கடைப்பேர்

இதற்கு வேயின் பெயரும், கடையின் பெயரும் என்று பொருள்.

வேய்ப்பேர் - மூங்கில், அமை, அம்பு, ஓங்கல், கண், கழை, கரும்பு, காம்பு, கிளை, கீசகம், சந்தி, சபம், சானகி, தட்டை, தண்டு, திகிரி, துளை, தும்பு, வெதிர், விண்டு, பணை, நெடில் வரை, வேணு என்பவனாகும்.

கடைப்பேர் - அங்காடி, ஆவணம், ஆபணம் என்பனவாகும்.

இதுவன்றி பொதுவாக - புனர்தம், புனிதம், பிண்டி, அதிதி நாள் என்பனவாகும்.

8. பூசம் - குரு, மதி, தைப்பேர்

இதற்கு குருப்பெயரும், மதிப்பெயரும், தைப்பெயரும் என்று பொருள்.

குருப்பேர் - ஆசிரியன், போதகன், ஆசான், ஐயன், குரவன், உபாத்தியாயர் என்பனவாகும்.

தைப்பேர் - பூசம், தை மாதத்தைக் குறிப்பதால் தை என்று பெயர்.

மதிப்பேர் - புத்தி, அறிவு, விவேகம் என்பனவாகும்.

பொதுவாக, காற்குளம்

குருநாள் - கொடிறு, வண்டு, போது, குடம், தரா என்பனவாகும்.

9. ஆயில்யம் - பணிப்பேர்

பணி, கெளவை, ஆயில், பாம்பு, அகி, கட்செவி, புயங்கம், சேடன் (சேஷன்), உரகம், கஞ்சுகி, காலிலி, குண்டலி, சர்ப்பம், நாகம், அரவின்நாள் என்பனவாகும்.

10. மகம் - நுகப்பேர்

நுகம், நாஞ்சில், கலப்பை, வேள்வி, கொடுநுகம், வேட்டுவன், வாய்க்கால், மாசி, எழுவாயெழுஞ்சனி, ஆதியெழுஞ்சனி, முதலில் எழுஞ்சனி, ஏர், ஞெமிலி, எழிலி, மாகம், பிதிர்நாள் என்பனவாகும்.

11. பூரம் - ஆகு, உமைப்பேர்

இதற்கு ஆகுவின் பெயரும் உமையின் பெயரும் என்று பொருள்.

ஆகு - பெருச்சாளி, எலி, களிமம், சிகரி, இடும்பன், களதம், துந்துளம், மூடிகம் (மூஷிகம்), உந்துரு என்பனவாகும்.

உமை - கவுரி, துர்க்கை, பகவதி, அன்னை, மாதா, பரை, சிவை, பார்வதி, பவானி, சக்தி, நாரி, அம்பிகை, பகவதிநாள் என்பனவாகும்.

பொது - இடையெழுஞ்சனி, இடைச்சனி, கணை, நாவிதன் என்பனவாகும்.

12. உத்திரம் - குளப்பேர்

குளம், ஏரி, தடாகம், வாவி, கேணி, கயம், ஓடை, குழி, ஜலதரம், சுனை, தடம், பொய்கை, மடு, குட்டம் (குட்டை), குண்டம், ஆலி என்பனவாகும்.

பொது - ஆன், பங்குனி, பர்ற்குனி, மானேறு, பாற்குனம், கடையெழுஞ்சனி, கதிர்நாள், மாரிநாள், செங்கதிர் நாள் என்பனவாகும்.

13. அஸ்தம் - உத்தமன்பேர்

பிரபலன், ஆரோகி, களிறு, ஐமீன், ஐவிரல், என்று,





காமரம், கௌத்துவம், நவ்வி, அருக்கன், கன்னி, கை, வெயில், கனலி நாள், அங்கி நாள் என்பனவாகும்.

14. சித்திரை - வத்திரப்பேர்

வத்திரம் (வஸ்திரம்), ஆடை, நீவி, அறுவை, சுவை, செவ்வி, தச்சன், அம்பரம், கலை, தூசி, கூறை என்பனவாகும். மேலும் நெய், மீன்

பொது - பயறு, நேர்வான், தானை, நடுநாள், துவஷ்டா நாள் என்பனவாகும்.

15, சுவாதி - கோகனகம், திரிசுடர்ப்பேர்

இதற்கு கோகனகத்தின் பெயரும் திரிசுடரின் பெயரும் என்று பொருள்.

கோகனகம் - கமலம், சிவப்புத் தாமரை (செந்தாமரை) இரக்தோற்பலம் என்பனவாகும்.

திரிசுடர் - சுடர், தீபம், விளக்கு, துளக்கம், மரக்கால் என்பனவாகும்.

பொது - காற்று, பதுமம், துணி, வீழ்க்கை, வெறுங்கம், அனில்நாள் என்பனவாகும்.

16. விசாகம் - முறப்பேர்

முறம், முற்றில், சுளகு, சேட்டை, வைகாசி, காற்று, காற்று நாள் என்பனவாகும்.

17. அனுஷம் - புல்பேர்

புல், பனை, நீலம், தாழி, போந்தை, பெண்ணை, தாளி, தேள், மித்திர நாள் என்பனவாகும்.

18. கேட்டை - அலிப்பேர்

துளங்கொளி, வல்லாரை, வேதி, எரி, அழல், சேட்டை, மன்னன், அலி, கீடம், அதம் (சம்முகமன்), வாளி, இந்திரன் நாள் என்பனவாகும்.

19. மூலம் - திதிபுத்திரர் பேர்

அசுரர், இராக்கதர், அவுணர், தேட்கடை, குருகு, கொக்கு,

சிலை, அன்றில், ஆனி - வில், ஆவணி, அசுரநாள் என்பனவாகும்.

20. பூராடம் - நீர்ப்பேர்

நீர், புனல், பயம், அறல், கோ, உடைகுளம், கம், முற்குளம், பொய்கை, வாவி, நீர்நாள் என்பனவாகும்.

21. உத்திராடம் - முடிப்பேர்

முடி, முதல், மூர்த்தம், ஆனி, ஆடி, கடைக்குளம், ஊர்தி, மணி, தானம், குளம், கூவல், விசுவநாள் என்பனவாகும். கவியில் பல இடங்களில் ஆன் என்பது உத்திராடத்தைக் குறிக்கிறது.

22. திருவோணம் - மால்பேர்

சீதரன், மால், மாயன், மாதவன், உலக்கை, முக்கோல், சிரவணம், சோணை, வயிரம், நள்ளு, மாயோன்நாள் என்பனவாகும்.

23. அவிட்டம் - வீப்பேர்

வீ - புள், பறவை, ஆவணி, காகப்புள், காக்கை, தோகை, வசுநாள் என்பனவாகும்.

24. சதயம் - செக்கு உரு இனப்பேர்

செக்கு, காணம், ஆலை, சுண்டன், போர், குன்று, மறலி, எமன், வருணன் நாள் என்பனவாகும்.

25. பூரட்டாதி - நாழிப்பேர்

நாழி, குஞ்சம், படி, முற்கொழுங்கோல், ஞாளி, புரட்டை, பரதன் நாள் என்பனவாகும்.

26. உத்திரட்டாதி - அரசு, முரசுப்பேர்

இதற்கு அரசின் பெயரும் முரசின் பெயரும் என்று பொருள்.

அரசு - கோலன், மன்னன், கோன் என்பதாகும்.

முரசு - பறை, நீபம் என்பனவாகும்.

பொது - சீர், அறிவன், இயம், பிற்கொழுங்கோல், அறிவன் நாள் என்பனவாகும்.





27. ரேவதி - ஓடப்பேர்

ஓடம், நாவாய், தோணி, டாதை, கலம், ஈறு, குலம், சூலம், தொழு, பஃறி, தாலம், கடைமீன், மரக்கலம், இரவிநாள், கடைநாள், பெருநாள், புருடநாள் என்பனவாகும்.

இந்த இருபத்தேழு நட்சத்திரங்களில் சில முக்கிய அம்சங்கள் :

| | |
|---|---|
| 1. அசுவினி | ஐப்பசி |
| 2. கார்த்திகை | கார்த்திகை |
| 3. மிருகசீரிஷம் | மார்கழி |
| 4. பூசம் | தை |
| 5. மகம் | மாசி |
| 6. உத்திரம் | பங்குனி |
| 7. சித்திரை | சித்திரை |
| 8. விசாகம் | வைகாசி |
| 9. மூலம் | ஆனி |
| 10. உத்திராடம் | ஆடி |
| 11. அவிட்டம் | ஆவணி |
| 12. பூரட்டாதி | புரட்டாசி |

இந்தப் பன்னிரண்டு நட்சத்திரங்களில் பௌர்ணமி உண்டாகி மாதங்களின் பெயர்களைத் தருகின்றன.

அடுத்து குளம் என்ற பெயரில் நான்கு நட்சத்திரங்கள் உள்ளன.

| | |
|---|---|
| குளம் | உத்திரம் |
| உடைகுளம் அல்லது முற்குளம் | பூராடம் |
| கடைக்குளம் | உத்திராடம் |
| காற்குளம் | பூசம் |

கோல் - என்ற பெயரால் மூன்று நட்சத்திரங்கள் - அவை.

| | |
|---|---|
| முற்பொழுங்கோல் | பூரட்டாதி |
| பிற்கொழுங்கோல் | உத்திரட்டாதி |
| முக்கோல் | திருவோணம் |

சனி - என்ற பெயரால் மூன்று நட்சத்திரங்கள் - அவை,

| | |
|---|---|
| ஆதிச்சனி - முற்சனி - எழுவாயெழுஞ்சனி | மகம் |
| இடைச்சனி - இடையெழுஞ்சனி | பூரம் |
| கடைச்சனி - கடையெழுஞ்சனி | உத்திரம் |

மீன் - என்ற பெயரால் நான்கு நட்சத்திரங்கள். அவை,

| | |
|---|---|
| 1. அறுமீன் | கார்த்திகை |
| 2. மும்மீன் | மிருகசீரிஷம் |
| 3. ஐம்மீன் - கைம்மீன் | அஸ்தம் |
| 4. கடைமீன் | ரேவதி |

மீன் - என்று ஒரு நட்சத்திரம். அது - சித்திரை

பூரத்திரையம் என மூன்று. அவை பூரம், பூராடம், பூரட்டாதி.

உத்திரத் திரையம் என மூன்று. அவை உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி. இவையே முக்குளம் எனப்படும்.

மேலும் முக்கியமான ஒரு சிறப்புப் பெயரைக் குறிக்க அதன் நாள் என்று ஒருவகை வருவதைக் கவனிக்கவும்.

| | |
|---|---|
| 1. மருத்துவநாள் | அசுவினி |
| முன்னாள் | |
| தலைநாள் | |
| 2. தருமன் நாள் | பரணி |
| 3. அங்கிநாள் | கார்த்திகை |
| எரிநாள் | |
| 4. பிரமன்நாள் | ரோகிணி |
| 5. மதிநாள் | மிருகசீரிஷம் |





| | |
|---|---|
| 6. அரன்நாள் | திருவாதிரை |
| 7. அதிதிநாள் | புனர்பூசம் |
| 8. குருநாள் | பூசம் |
| 9. அரவின்நாள் | ஆயில்யம் |
| 10. பிதிர்நாள் | மகம் |
| 11. பகவதி நாள் | பூரம் |
| 12. மாரிநாள் | உத்திரம் |
| கதிர்நாள் | |
| செச்கதிர்நாள் | |
| 13. கனலி நாள் | அஸ்தம் |
| அங்கிநாள் | |
| 14. துவஷ்டாநாள் | சித்திரை |
| நடுநாள் | |
| 15. அனில நாள் | சுவாதி |
| 16. காற்று நாள் | விசாகம் |
| 17. மித்திரநாள் | அனுஷம் |
| 18. இந்திரன் நாள் | கேட்டை |
| 19. அசுரநாள் | மூலம் |
| 20. நீர்நாள் | பூராடம் |
| 21. விசுவநாள் | உத்திராடம் |
| 22. மாலோன்நாள் | திருவோணம் |
| 23. வசுநாள் | அவிட்டம் |
| 24. வருணன்நாள் | சதயம் |
| 25. பரதன்நாள் | பூரட்டாதி |
| 26. அறிவன் நாள் | உத்திரட்டாதி |
| 27. இரவிநாள் | ரேவதி |
| பெருநாள் | ரேவதி |
| புருடநாள் | ரேவதி |
| கடைநாள் | ரேவதி |

சில நட்சத்திரங்களின் காரணப் பெயர்களின் பலன்களை சிறிது கவனிப்போம்.

குளம் - உத்திரம். குளம் என்றால் நீர்நிலை என்று பொருள். அந்தக் குளம் நீர் இல்லாமலும் இருக்கலாம்.

ஜாதகருக்கு இந்த உத்திரம் நாலாம் பாவமாகவரில் சௌகரியமுள்ளவர்.

ஆறு, எட்டு, பன்னிரண்டாகவரில் - செல்வ நிலை குறையும்.

பூசம் -- காற்குளம், ஜாதகரின் காரியம் சரியாக நிறைவேறுவதில்லை.

பூராடம் உடைகுளம், ஜாதகரின் செயல் பூர்த்தியடையும் நேரத்தில் "வெண்ணெய் திரண்டு வரும்போது தாளி உடைந்தது" என்பது போல் காரியம் கெட்டுவிடும்.

உத்திராடம் கடைக்குளம். எல்லாக்குளத்திற்கும் நீர் நிறைந்து மிச்சமிருந்தால் இந்தக் குளம் நிரம்பும்.

ஜாதகருக்கு எதுவும் முதலில் கிடைக்காது.

கோல். இது அளப்பது. பூரட்டாதி, உத்திரட்டாதி, திருவோணம் ஆகிய இம்மூன்று நட்சத்திர ஜாதகர்கள் எதையும் நன்றாகக் கணக்கிட்டு திட்டமிட்டு செய்வார்கள்.

முதற்சனி - மகம். இடைச்சனி - பூரம். கடைச்சனி - உத்திரம். இந்த ஜாதகர் கட்டுண்ட பிரச்சினைகளில் மாட்டிக் கொள்வார்.

நாள் என்பதை யாருக்கு நாள் என்று கூறப்பட்டுள்ளதோ, அவர்களின் குணம், நடவடிக்கை, செயல் ஆகிய இவைகளை பாவ காரகத்தின் மீது ஏற்றி ஜாதகருக்குக் கூறவும்.

குறிப்பு - இந்த நாள் என்பதை பற்றித் தனி நூலாக அடுத்த வெளியீடாக வரும்.





## கிரகாதிபர் பரியாய நாமமும் அவர் புதல்வர் நாமமும்

பதுமன், இனன், பருதிப்பேர்; சசி, ஆம்பலின்மான்
பம்இறைப்பேர்; சேய், பவுமன் பார்மகன் பாலகன்பேர்;
விதுதனையன் மால் புதன்பேர்; வேதியன், பொன் குருப்பேர்;
வெள்ளி, புகந்பார்க்கவன் பேர்; அசிதன், எமன், நீலன்
கதிர் சுதன் பேர்; பணி, சிசி மற்று இருவரின்பேர்; காலன்
கலைக்யான பாதன், கரேசன் பிரகரன் பேர்;
இதம் இல் எமகண்டன் பேர்; விட கடிகை, குளிகன்
இன்அமிர்தம், மிருத்து இவர்கள் புதல்வர்கள் இப்பேரே - 2

(இந்த ஆசிரியர் கிரகங்களுக்கு குறிப்பிட்ட சில பெயர்களை மட்டும் கவியில் கொடுத்துள்ளார். நாம் மற்ற பரியாயச் சொற்களை நிகண்டு, அகராதிகள் மூலமாகப் பூரணமாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.)

பொருள் :

1. பதுமன், இனனன் பருதிப்பேர்
பதுமன், இனன் - சூரியன் பேர்
2. பம் - நட்சத்திரம்
இறை - அதிபதி
பம்மிறை - நட்சத்திர அதிபதி
சந்திரன்
சந்திரனுக்குப் பெயர் - சசி
ஆம்பீலின்மான
3. பாலகன் பேர் - செவ்வாயின் பேர்
சேய், பவுமன், பார்மகன்
4. புதன் பேர்
விதுதனையன், மால்

5. குருவின் பேர்

வேதியன், பொன்

6. பார்க்கவன்பேர் - சுக்கிரன் பேர்

வெள்ளி, புகர்

7. கதிர்சுதன் பேர் - (சூரியன் மகனாகிய சனியின் பேர்)

அசிதன், எமன், நீலன்

8. பணி - சிகி மற்று இருவர் பேர்

ராகுவின் பேர் - பணி

9. கேதுவின் பேர் - சிகி

காலன் எனத் தொடங்கி, புதல்வர்கள் இப்பேரே என்பதை சூரியன் முதல் வரிசைப்படுத்த வேண்டும். அவை,

| | |
|---|---|
| 1. சூரியன் புதல்வன் | காலன் |
| 2. சந்திரன் புதல்வன் | கலைக்யானபாதன் |
| 3. செவ்வாய் புதல்வன் | கரேசன் |
| 4. புதன் புதல்வன் | அர்த்தப்பிரகரன் |
| 5. வியாழன் புதல்வன் | எமகண்டன் |
| 6. சுக்கிரன் புதல்வன் | விடகடிகை |
| 7. சனி புதல்வன் | குளிகன் |
| 8. ராகுபுதல்வன் | அமிர்தகடிகை |
| 9. கேது புதல்வன் | அவமிருத்து |

இதில், புதன் புதல்வன் அர்த்தப்பிரகரன் என்பதைச் சுருக்கி, பிரகரன் என்று கொடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பு : கிரகபுத்திரர்கள் என்பது உருவமுள்ள கிரங்கள் அல்ல. காலன், அர்த்தப் பிரகரன், எமகண்டன், குளிகன் இவை நான்கும் கிழமையின்படி ஒரு குறித்த நேரமாகும்.

கலைக்யானபாதன் ஜன்ம நட்சத்திரத்தின் 64-வது கால்.

விடகடிகை - அமிர்தகடிகை என்பது, குறித்த





நட்சத்திரத்தில் இத்தகையாவது நாழிகையிலிருந்து நான்கு நாழிகை நேரம்.

அவமிருத்து என்று குறிக்கப்பட்ட நட்சத்திர பாதமே அவமிருத்தும் கரேசனும் ஒரு குறிப்பிட்ட நேரமேயாகும்.

## சூரியன் முதல் கேது முடிய ஒன்பது கிரங்களுக்கு குமார சுவாமியத்தில் சொல்லப் படாத பரியாயப் பெயர்களும் - அதன் பொருளும்.

சூரியன் பரியாயப் பெயர்கள்

| | |
|---|---|
| 1. அண்டயோனி | முட்டையில் தோன்றியவன் |
| 2. அரி | வெற்றி - ஒளியுடையவன் |
| 3. அரியமா | பிதிர் தேவைக்குரியவன் |
| 4. அழலவன் | வெப்பமுடையவன் |
| 5. அனலி | அக்கினியுடையவன் |
| 6. ஆதவன் | வெயில் தருவோன் |
| 7. ஆதித்தன் | அதிதிக்குப் பிறந்தவன் |
| 8. ஆயிரஞ்ஜோதி | ஆயிரம் சுடர்களையுடையவன் |
| 9. இனன் | தலைவன், செல்பவன் |
| 10. உதயன் | விடியலை உண்டாக்குபவன் |
| 11. எலல | நாளை உண்டாக்குவோன் |
| 12. எல்லை | பகற்பொழுதை உண்டாக்குவோன் |
| 13. என்று | நிரந்தரமானவன் |
| 14. என்றூழ் | வெயில் தருவோன் |
| 15. ஏழ்பரியோன் | 7 குதிரை பூட்டிய தேருடையவன் |
| 16. ஒளியோன் | ஒளியுள்ளவன் |

17. கதிரவன் கதிர்களையுடையவன்
18. கனலி தகதக என்னும் நெருப்புப் போன்றவன்
19. கிரணமாலை கதிர்களை மாலையாக அணிந்தவன்
20. சண்டன் கோபக்காரன்
21 சவிதா அழகுடையோன்
22. சான்றோன் அறிவுக்கதிபதி
23. சித்திரபானு ஆகாய அழகன்
24. சுடரோன் சுடருடையோன்
25. சூரன் வீரமுடையவன்
26. செங்கதிரோன் சிவப்பு நிறக்கதிர்களை உடையவன்
27. ஜோதி தீப்போன்றவன்
28. ஞாயிறு முதலில் தோன்றியவன்
29. தபனன் நெருப்பையுடையவன்
30. தரணி நீரைத் தருபவன்
31. இரவி உயிருக்கதிபதி, உயிர்
32. இருள்வலி இருளை அகற்றுபவன்
33. ஒளி ஒளியுடையவன்
34. திவாகரன் பகலை உண்டாக்குபவன்
35. தினகரன் நாளை உண்டாக்குபவன்
36. தினமணி பகலுக்கு ஒளி தருவோன்
37. நபோமணி ஆகாய ஒளி
38. பகலோன் பகலை உண்டாக்குபவன்
39. பகல் வெளிச்சம் தருவோன் (பகலுக்கு)
40. பங்கயன் தாமரைப்பூவை விரியச் செய்பவன்
41. பதங்கன் கால்மறைந்துள்ளவன்
42. பருதிகை வட்டவடிவமானவன்





43. பர்க்கன் வீரியமுள்ளவன்
44. பனிப்பகை பனிக்கு விரோதியானவன்
45. பானு அழகுடையோன்
46. மார்த்தாண்டன் இறந்து பிறந்தவன்
47. மித்திரன் நட்புக்குரியவன்
48. விகரத்தனம் அதிகாரத்தை வலிதாக்க கவர்ந்தவன்
49. விண்மணி ஆகாய ஜோதி
50. விரிச்சிகன் நிமித்தம் கூறுவோன்
51. விரோசனன் அக்கினியாவன்
52. வெஞ்சுடர் வெம்மையான சுடருடையவன்
53. வெயில் வெயில் தருவோன்
54. வெய்யோன் வெப்பமுடையோன்
55. மணி ஒளிபொருந்திய அழகுடையவன்
56. தேரோன் தேரையுடையவன்
57. அருக்கன் நெருப்பையுடையோன்
58. கனலோன் தகதக என்னும் ஒளியுடையோன்
59. பாஸ்கரன் ஒளியுடையோன்
60. அலநி மலரை மலர்விப்போன்
61. திமிராரி இருளுக்குப் பகைவன்
62. ஆதபன் வெயில் தருவோன்
63. பொழுது பகல் உண்டாக்குபவன்
64. எல்லி இருளை நீக்குவோன்
65. சாயாபதி சாயாதேவிக்குக் கணவன்

## சந்திரன் - பரியாயப் பெயர்கள்

1. அமுத கதிரோன் அமுத கதிர்களையுடையவன்
2. அம்புலி இயற்பெயர்

| | |
|---|---|
| 3. அரி | மென்மையானவன் |
| 4. அநிச்சிகன் | ஒளிக்கதிருடையோன் |
| 5. அலவன் | கடகராசிக்குத் தலைவன் |
| 6. ஆலோன் | மகிழ்ச்சியளிப்போன் |
| 7. இந்து | நீர்-குளிர்ச்சியுடையோன் |
| 8. இமகரன் | பனியுண்டாக்குவோன் |
| 9. இராக்கதிர் | இரவில் ஒளி தருவோன் |
| 10. இனன் | இரவுக்குத் தலைவன் |
| 11. உடுபதி | நட்சத்திரங்களுக்குத் தலைவன் |
| 12. உடுவேந்தன் | நட்சத்திரங்களுக்கு அரசன் |
| 13. அல்லோன் | இரவுக்குத் தலைவன் |
| 14. கலாநிதி | கலைகளையுடையவன் |
| 15. கலையினன் | கலைகளையுடையவன் |
| 16. களங்கன் | குற்றமுடையவன் |
| 17. குபேரன் | தனமுடையவன் |
| 18. குமுதநண்பன் | குமுதமலருக்கு நண்பன் |
| 19. குரங்கி | நோயுடையோன் (க்ஷயரோகம்) |
| 20. சசி | குளிர்ச்சியான ஒளியுள்ளோன் |
| 21. சீதன் | குளிர்ச்சி பொருந்தியவன் |
| 22. சுதாகரன் | பிள்ளைப் பேறுண்டாக்குவோன் |
| 23. சோமன் | அமுதம் தருவோன் (பிறன் மனைவிக்கு) |
| 24. தண்சுடர் | குளிர்ந்த சுடருடையோன் |
| 25. தண்ணவன் | குளிர்ச்சி பொருந்தியவன் |
| 26. தாராபதி | நட்சத்திரங்களுக்குத் தலைவன் |
| 27. தானவன். | மிருதுவானவன் |
| 28. திங்கள் | திங்கள் எனும் கிழமைக்கு அதிபதி |





| | |
|---|---|
| 29. தெவ்வு | போர் உண்டாக்குபவன் |
| 30. நிசாகரன் | இரவை உண்டாக்குவோன் |
| 31. நிசாபதி | இரவுக்குத் தலைவன் |
| 32. நிலவு | குளிர்ந்த ஒளியுடையோன் |
| 33. பசுங்கதிர் | குளிர்ந்த கதிருடையோன் |
| 34. மதி | புத்திக்கு அதிபதி |
| 35. மதியம் | பௌர்ணமியை உண்டாக்குவோன் |
| 36. மானேந்தி | மான்போல் மிருகச் சின்னம் உடையவன் |
| 37. முயற்கூடு | முயற்கூடு போன்ற உருவமுடையவன் |
| 38. நிலா | ஒளியுடையோன் குளிர்ச்சி |
| 39. விது | கற்பூர நிறத்தவன் |
| 40. வீபத்து | தண்ணொளி தருவோன் |
| 41. வெண்கதிரோன் | வெண்மையான ஒளியுடையோன் |
| 42. வேந்தன் | அரசன் (நட்சத்திரங்களுக்கு) |
| 43. குழவி | இளம்பிறையை உடையவன் |
| 44. பிறை | கலைகளில் பகுதியை உடையவன் |
| 45. பனிக்கதிர் | பனிபோல் ஒளியுடையோன் |

**செவ்வாயின் பரியாயப் பெயர்கள்**

| | |
|---|---|
| 1. அங்காரகன் | நெருப்புப் போன்றவன் |
| 2. அரத்தன் | இரத்தம்போல் சிவப்பானவன் |
| 3. அழலோன் | வெப்பமுடையவன் |
| 4. அழல் | வெப்பமுடையவன் |
| 5. அறிவன் | அறிவுடையோன் |
| 6. ஆரல் | பித்தம் உண்டாக்குபவன் |
| 7. உதிரன் | இரத்தத்துக்கு அதிபதி |

8. குசன் — மரம்போல் மாறியவன்
9. குருதி — இரத்தத்துக்கு அதிபதி
10. செந்தீவண்ணன் — செந்தீ நிறத்தவன்
11. சேய் — குழந்தை போன்றவன்
12. நிலமகன் — நிலத்துக்கு மகன்
13. பௌமன் — நிலத்திற்பிறந்தவன்
14. மங்கலன் — மங்கல வார்த்தைக்கு உரியவன்
15. வக்கிரன் — கொடுமை செய்வோன்
16. உலோசிதன் — சிவப்பு நிறமுடையவன்

**புதன் பரியாயப் பெயர்கள்**

1. அநாரு — முடத்தன்மையுடையவன்
2. அருணன் — செந்நிறமாக உதிப்பவன்
3. அனுவழி — பிறன் மனைவிக்கு பிறந்தவன்
4. கணக்கன் — கணக்குக்கு அதிபதி
5. சவுமன் — சிற்ப சாஸ்த்திரத்துக்குரியவன்
6. சாமன் — நீல நிறத்தோன்
7. சிந்தைகூரியன் — சிந்திக்கும் ஆற்றல் படைத்தவன்
8. புதன் — புத்தியுள்ளோன்
9. சௌமியன் — சிற்பசாஸ்திரத்துக்குரியவன்
10. தூதுவன் — தூது செல்பவன்
11. தேர்ப்பாகன் — தேரோட்டுபவன்
12. நற்கோள் — சுபகிரகத்தில் ஒருவன்
13. நிபுணன் — கெட்டிக்காரன்
14. பச்சை — பச்சை நிறமுள்ளோன்
15. பண்டிதன் — பாண்டித்யம் படைத்தவன்





16. பாகன் — தேரோட்டி
17. புந்தி — அறிவுடையோன்
18. புலவன் — புலமை பெற்றவன்
19. மதிமகன் — சந்திரனுக்கு மகன்
20. மாலவன் — கருநிறத்தோன்
21. மால் — கருநிறத்தோன்
22. மேதை — சிறந்த நுண்ணறிவாளன்

**குருவின் பரியாயப் பெயர்கள்**

1. அந்தணன் — சிறந்தவன், உயர்ந்தோன்
2. அமைச்சன் — மந்திரி
3. அரசன் — ஆட்சி புரிவோன்
4. ஆசான் — போதிப்பவன்
5. ஆண்டளப்பான் — வருடத்தையுண்டாக்குபவன்
6. குரு — ஆசிரியன்
7. சிகண்டிசன் — சிகண்டியின் புத்திரன்
8. ஜீவன் — உயிர்த்தன்மையுடையவன்
9. சுரகுரு — தேவர்களுக்கு ஆசிரியன்
10. தாராபதி — தாரைக்குக் கணவன்
11. தெய்வமந்திரி — தேவர்களுக்கு மந்திரி
12. நற்கோள் — சுபகிரகங்களில் ஒருவன்
13. பிருகஸ்பதி — பொன்மயமானவன்
14. பீதகன் — பொன் நிறம் உடையவன்
15. பொன் — பொன்னுக்கு அதிபதி
16. மறையோன் — வேதங்கள் கற்றோன்
17. வேந்தன் — அரசுத் தன்மையுடையவன்

| | | |
|---|---|---|
| 18. | வேதன் | வேதங்கள் கற்றோன் |
| 19. | மந்திரி | மந்திரித் தன்மையுடையோன் |
| 20. | தேவமந்திரி | தேவர்களுக்கு மந்திரி |

**சுக்கிரன் பரியாயப் பெயர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | அசுரமந்திரி | அசுரர்களுக்கு ஆலோசகன் |
| 2. | அநாவிலன் | தெளிவுடையோன் |
| 3. | ஆசான் | ஆசிரியன் (அசுரர்களுக்கு) |
| 4. | உசனன் | தருமநூல் இயற்றுபவன் |
| 5. | ஒள்ளியோன் | வெள்ளை நிறமுடையவன் |
| 6. | கவி | காவிபாடும் திறமையுடையவன் |
| 7. | காப்பியன் | காவியம் இயற்றுவதில் நிபுணன் |
| 8. | சிதன் | வெள்ளை நிறத்தோன் |
| 9. | சுங்கன் | களவுடையோன் (காமத்தில்) |
| 10. | தயித்திய மந்திரி | அசுரர்களுக்கு மந்திரி |
| 11. | நற்கோள் | சுபகிரகங்களில் ஒருவன் |
| 12. | பளிங்கு | கண்ணாடிபோல் வெண்மையானவன் |
| 13. | பார்க்கவன் | உப புராணங்களுக்கு அதிபதி |
| 14. | பிரசுரன் | நூல் வெளியிடுவோன் |
| 15. | பிருகு | பிரமாவின் மானசீக புத்திரன் |
| 16. | புகர் | அழகுடையவன் |
| 17. | புயல் | நீர் உடையவன் |
| 18. | மழைக்கோள் | மழையை உண்டாக்குபவன் |
| 19. | வெள்ளி | கிழமையை உண்டாக்குபவன் |
| 20. | சைத்தியன் | குளிர்மையுடையவன் |





**சனியன் பரியாயப் பெயர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | அந்தணன் | முனிவர் தன்மையுடையோன் |
| 2. | அந்தன் | சூரிய மண்டலத்தில் கடைசியில் இருப்பவன் |
| 3. | கதிர்மகன் | சூரியனுக்கு மகன் |
| 4. | கரியவன் | கரிய நிறத்தோன் |
| 5. | காரி | கரிய நிறத்தோன் |
| 6. | கீழ்மகன் | தாழ்ந்த குணமுடையோன் |
| 7. | சந்தில் | இடுப்புக் குறையுடையோன் |
| 8. | சவுரி | கூந்தல்போல் கரியவன் |
| 9. | சாவகன் | ஜெபம் புரிபவன் |
| 10. | தமனியன் | இரும்புக்கு அதிபதி |
| 11. | நீலன் | நீலநிறத்தோன் |
| 12. | நோய்முகன் | துன்பத்திற்கு இடம் தருபவன் |
| 13. | பங்கு | முடமானவன் |
| 14. | மந்தன் | மெதுவாகச் செல்பவன் |
| 15. | முடவன் | முடமானவன் (நொண்டி) |
| 16. | முதுமகன் | மூத்தவன் |
| 17. | மேற்கோள் | சூரியமண்டலத்தின் கடைசி கிரகமானவன் |
| 18. | சுன் | வெறுமையானவன் |
| 19. | அசிதன் | கரியன் |

**ராகுவின் பரியாயப் பெயர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | கரும்பாம்பு | கருநிறமான பாம்பு |
| 2. | தமம் | இருள் நிறத்தோன் |
| 3. | மதிப்பகை | சந்திரனுக்குப் பகை |
| 4. | மதியுணி | சந்திரனை மறைப்பவன் |
| 5. | கருப்பு | கறுப்பு நிறத்தோன் |

கேதுவின் பரியாயப் பெயர்கள்

| | |
|---|---|
| 1. செம்பாம்பு | செந்நிறப் பாம்பு |
| 2. சிகி | நெருப்புப்போல் கொடியவன் |
| 3. கொடி | கொடிபோல் வளைபவன் |
| 4. செம்மை | செந்நிறமுடையோன் |
| 5. கதிர்ப்பகை | சூரியனுக்குப் பகை |
| 6. மதியுணி | சந்திரனை மறைப்பவன் |

பொதுவாக நட்சத்திரத்துக்குப் பெயர்கள்

1. மீன், 2. உடு, 3. தாரை, 4. தாரா, 5. தாரகை, 6. ஜ்யோதிஷ், 7. பம், 8. ருட்சம் என்பனவாகும்.

கிரகங்களின் பரியாயப் பெயர்களின் உட்பொருளை பாவகாரகமாக்கி, ஜாதகர் மீது ஏற்றிக் கூறுங்கள். சில அபூர்வப் பலன்கள் கிடைக்கும்.

உதாரணமாக சூரியனுக்கு மித்திரன் என்ற ஒரு பெயர் இருக்கிறது (நட்பு) பாவகத்தில் நான்காமிடம் நட்பு. சூரியன் நான்கில் இருக்கில் ஜாதகருக்கு உயர்ந்தோர் நட்பு எளிதில் ஏற்படும். இதை சூரியன் நின்ற பாவகிரத்தையும், நட்சத்திர காரகத்தையும் இணைத்துக் கொண்டால், அந்த நட்பு எந்த இனம், எப்படிப்பட்டவர் என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

சந்திரனுக்கு உடுபதி அதாவது நட்சத்திரங்களுக்குத் தலைவன். பத்தாம் பாவம் தலைமையைக் குறிக்கும். பத்தில் எனப்படும் சந்திரன் இருந்தால் ஏதேனும் ஒன்றுக்கு ஜாதகர் தலைவராவார்.

செவ்வாய்க்கு அறிவுடையோன் என்ற பெயருண்டு. அறிவுக்கு இரண்டாமிடம். இரண்டில் செவ்வாய் இருக்கில் சிறந்த அறிவாளியாவார். மற்றவைகளை சிந்தியுங்கள்.





## இராசிகளின் பரியாயப் பேர்; இராசி முதலியவற்றின் பொதுப்பேர்

வருடை, இனப்பேர்; விடைப்பேர்; யாழ், கதை தொந்துவம் ஆம்;
மைதுனராசிப்பேர்; கார்; கொண்டல், அலவன் பேர்;
மிருகசுப்பேர்; மாதின் பேர்; துலைப்பேர்; தேள்பேர்;
வில்பேர்; மான்தலை, கலைப்பேர்; வெறும் குடப்பேர்; மீன்பேர்;
ஒருமுதல் பேர்க்கு ஈது; இடம், பாவகம், பவனம் பொதுப்பேர்;
உடுத்தினம் நாள்பேர் ஆம்; வாரம் கிழமைக்கு உளது ஆம்;
முருகு அவிழ் தென் மலைய, திதிப்பேர்க்கு அது ஆம் என்ன
மொழிந்தனன் மும்முதற்கும் ஒரு முதற்கும் ஒரு முதலே (3)

இக்கவியில் 'வருடை' என்று தொடங்கி, ஒரு முதல் பேர்க்கு ஈது முடிந்திருப்பது மேஷம் முதல் மீனம் வரை இராசிகளின் பரியாயப் பெயர் என்று பொருள்.

ஐந்தாவது வரியில் 'இடம்' எனத் தொடங்கி, பவனம் என்பது வரை இராசிகளின் பொதுப் பெயர் என்று பொருள்.

ஆறாவது வரியில் "வாரம் கிழமைக்கு உளது ஆம்" என்பது வாரத்தின் பெயர்கள் என்று பொருள்.

ஏழாவது வரியில் "திதிப்பேர்க்கு அது ஆம்" என்பது திதிகளுக்கு உள்ள பெயர்களே ஆகும். பரியாயப் பெயர்கள் இல்லை என்று பொருள்.

இனி, இராசிகளின் பரியாயப் பெயர்களை கவனிப்போம்.

1. மேஷ ராசிக்கு - வருடை இனப்பேர் என்கிறார். வருடை என்பது ஆடு.

ஆகையால், இதன் பரியாயப் பெயர்களாகும். அவை வருமாறு;

ஆடு, அசம் (அஜம்), அருணன், உடு, ஒரு, துருவை, துள்ளல், புருவை, வெறி, செம்மறி, மோத்தை, வெள்ளை,

வருடை, மேஷம் (மேடம்), கடா, மை, மறி, கொறி, சாகம், தகர், மேழகம் என்பனவாகும்.

**2. ரிஷப ராசிக்கு** - விடைப்பேர் என்கிறார். விடை என்பது எருது. ஆகையால் இதன் பரியாயப் பெயர்களாகும். அவை வருமாறு.

இடபம், இறால், எருது, ஏறு, குண்டை, சே, நந்தி, பசு, பாண்டில் பாறல், புல்லம், பூணி, பெற்றம், மூரி, விடை, கூளி, கொட்டியம், கோ, நூபம், பகடு, போத்து என்பனவாகும்.

**3. மிதுன ராசிக்கு** - யாழ், கதை, தொந்துவம் ஆம் மைதுன ராசிப்பேர் என்கிறார்.

யாழ் என்பது வீணை, கதை என்பது தண்டாயுதம். தொந்துவம் என்பது பெருவயிறு.

ஆகையால், இதன் பரியாயப் பெயர்களைக் கவனிப்போம். அவை வருமாறு:

யாழ், வீணை, கலம், கின்னாரம், கோடாவதி, கோட்டம், தண்டு, மாடகம், வல்லகி, விபஞ்சிகம் என்பனவாகும்.

கதை - கதாயுதம், தடி என்பவனவாகும்.

தொந்துவம் - தொப்பை வயிறு, தொந்தி, பெருவயிறு என்பனவாகும்.

மேலும் இரட்டை, சய மகள், பாடவள், பாடவை, விழைவு என்பன பொதுவாகும்.

**4. கடக ராசிக்கு** - கார், கொண்டல், அலவன் பேர் என்கிறார்.

கார் - நீர், மேகம் என்பனவாகும். கொண்டல் - மேகம், காற்று என்பனவாகும். அலவன் - என்பது நண்டு.

இதன் பரியாயப் பெயர்கள் :

அலவன், கள்வன், குளிர், சேக்கை, ஞெண்டு நண்டு, நள்ரு, மதி என்பனவாகும்.





**5. சிம்மராசிக்கு** - மிருகரசுப்பேர் என்கிறார்.

மிருகரசு என்பது சிம்மம். ஆகையால், இதற்கு சிம்மத்தின் பரியாயப் பெயர்களாகும். அவையாவன :

அரி, அரிமா, ஆளி, ஐயானனம், கண்டீரவம், காளி, கேசரி, கொடும்புலி, கோளரி, சீயம், பஞ்சானனம், அறுகு, வயப்போத்து, பூட்சை, மிருகராசன், வயமா, மடங்கல், முடங்குளை, வயப்புலி, புலி, பஞ்ச நகாயுதம் என்பனவாகும்.

**6. கன்னிராசிக்கு** - மாதின்பேர் என்கிறார்.

கன்னி என்பது பெண் ஆகையால், இதற்குப் பெண் பெயர்களாகும். அவையாவன :

அங்கனை, அணங்கு, அரிவை, ஆடவள், ஆட்டி, இளம் பிடி, இளையாள், காந்தை, காரிகை, கோதை, சிறுமி, சுந்தரி, சுரிகுழல், தெரிவை, தையல், நல்லாள், நாரி, நுண்ணிடை, பாவை, பிணா, பூவை, பெண்டு, பெதும்பை, பேதை, மககுஉ, மகள், மங்கை, மாது, வஞ்சி, வனிதை என்பனவாகும்.

**7. துலாராசிக்கு** - துலைப்பேர் என்கிறார். துலை - தராசு. ஆகையால் இதற்குத் தராசின் பரியாயப் பெயர்களாகும். அவையாவன :

துலை, நிறை, நிறுப்பான், சீர்கோல், தூக்கு, வாணிகன், கட்டளை, தராசு என்பனவாகும்.

8. விருச்சிக ராசிக்கு - தேள் பேர் என்கிறார். அதாவது தேளின் பெயர்கள் என்பதாகும். அவையாவன :

துட்டன், தெறுக்கால், நளி, பறப்பன், விருச்சிகம், விடமுள் என்பனவாகும்.

**9. தனுசு ராசிக்கு** - வில்பேர் என்கிறார். அவையாவன:

தனுசு - வில், தனுசு, கார்முகம், கொக்கரை, கொடுமரம், கோதண்டம், சராசனம், சாடம், சானகம், சிந்து, வாரம், சிலை, தடிதவர், முனி, வேணு என்பனவாகும்.

10. மகர ராசிக்கு - மான்தலைப்பேர் என்கிறார்.

அவையாவன :

கலை, சுறா, தை, மான் என்பனவாகும்.

11. <u>கும்ப ராசிக்கு</u> - வெறும் குடப்பேர் என்கிறார். அவையாவன :

குடம், கரீரம், சாடி, குடங்கர், கும்பம், கடம், கலசம், தாழி, குடந்தம், குணம், தசம்பு, இறங்கர், இடங்கர், இடக்கர், குரும்பை, சால் என்பனவாகும்.

12. மீனராசிக்கு - மீன் பேர் என்கிறார். அவையாவன :

கெண்டை, சலசரம், சலாலம், மச்சம், மீனம், மீன், அண்டசம் என்பனவாகும்.

அடுத்து இராசிகளின் பொதுப்பெயர். அதாவது, இராசிக்கு இடம், பாவக, பவனம் என்பனவாகும்.

உடுத்தினம் நாள் பேர் ஆம்

அவை, உடுத்தினம், நாள், மேலும் தாரா, தாரகை, விண்மீண், உற்கை, கணம், சுக்கை, பம் என்பனவாகும்.

<u>வாரம் கிழமைக்கு உள்து ஆம்</u>

ஞாயிறு முதல் சனி முடிய வாரம் என்றும் கிழமையென்றும் பெயர் வரும். அதாவது,

| | |
|---|---|
| ஞாயிற்றுக்கிழமை | ஆதிவாரம் |
| திங்கட்கிழமை | சோமவாரம் |
| செவ்வாய்க்கிழமை | மங்கல வாரம் |
| புதன்கிழமை | புதவாரம் |
| வியாழக்கிழமை | குருவாரம் |
| வெள்ளிக்கிழமை | சுக்கிரவாரம் |
| சனிக்கிழமை | சனி வாரம் |

என வரும்.

திதிப்பேர்க்கு அது ஆம்

அதாவது, பிரதமை முதல் பௌர்ணமி ஒன்று வளர்பிறையிலும், மறுபடியும் பிரதமை முதல்





அமாவாசையென்று தேய்பிறையிலும் திதிகளின் பெயர் அதுவாகவே இருக்கும்.

பன்னிரண்டு ராசிக்கும் சொல்லப்பட்ட சின்னங்களின் குணங்களையும், செயல்களையும், பாவகத்தின் மீது ஏற்றி, ஜாதகரின் குணம், நடத்தை இவைகளைக் கூறலாம்.

உதாரணமாக தனுசு ராசியை எடுத்துக் கொள்வோம். இதன் சின்னம் அரைக்கு மேல் புருடனாக கையில் பிடித்த வில்லுமாகி, அரைக்குக் கீழ் குதிரை உருவமாக இருப்பது.

இதைப் பத்தாம் பாவகம் என்று வைத்துக் கொள்வோம். இது, ராஜ்ய ஸ்தானம் ஆகையால், ஜாதகர் போர் வீரனாகவும், அதைச் சார்ந்த பணி புரிபவராகவும் இருப்பார். இத்தோடு பாவாதிபதி குருவின் தன்மையையும், குரு லக்கினத்திற்கு எந்த பாவகத்தில் இருக்கிறதோ, அந்த பாவ காரகத்தையும் குரு இருந்த நட்சத்திர காரகத்தையும் இணைத்துக் கொண்டால், இன்னும் சிறப்பான பலன்கள் நம்மைத் தேடிவரும்.

இதேபோல் ஒவ்வொரு லக்கினத்திற்கும் அந்தந்த சின்னங்களின் தன்மைகளையும் லக்கினாதிபதியாகிய கிரக காரத்தையும், லக்கினம் இருந்த நட்சத்திரத்தின் தன்மைகளையும் லக்கினாதிபதி இருந்த பாவத்தின் தன்மைகளையும், நட்சத்திர பாதங்களின் தன்மைகளையும் (அதாவது நவாம்ச ராசி நாதர்களின் தன்மைகளையும் இணைக்கப் பழகுங்கள். ஏராளமான அதிசயப் பலன்கள் கிடைக்கும்.

## யோக கரண நாமம்

தலத்து யோகப்பேர்; - விஷ்கம்பம், பிரிதி, ஆயு,

சௌபாக்யம், சோபன், அதிகண்ட, கர்மம், திருதி,

அலச்சூல், கண்டம், விருத்தி, துருவம், வியாகாதம்,

அரிஷணம், வச்சிரம், சித்தி, விதிபாதம், வரியான்,

பெலப்பரிகம், சிவம், சித்தம், சாத்ய, சுப, சுப்ரம்,

பிரமம், ஐந்த்ரம், வைதிருதிப் பேர்; - பவம், பாலவம், கட
வுலத், தைதுலம், கஜம், வணிஜம், பத்ரை, சகுன், நாற்கால்
உாக, கிருமிக்கரணம் பவமுதல் நேர்க்கு உளதே

இக்கவியில் யோகம் இருபத்தேழும், கரணம் பதினொன்றும் கூறப்பட்டுள்ளது.

**யோகம் இருபத்தேழு :**

| | இதன் பொருள் |
|---|---|
| 1. விஷ்கம்பம் நடுக்கம் உண்டாக்குவது | கம்பம் |
| 2. பிரிதி ப்ரீதி என்பதன் மரூஉ | அன்பு, பிரியம் |
| 3. ஆயு ஆயுஷ்மான் என்பதன் கடைக்குறை | வாழ்நாள் |
| 4. சௌபாக்யம் சுகத்தை அளிப்பது | புண்ணியம் |
| 5. சோபன் சோபனம் என்பதன் கடைக்குறை | நலம் |
| 6. அதிகண்டம் பெருந்திமை தருவது | மாகண்டம் |
| 7. கர்மம் நற்செயல் புரிவது | அறம் |
| 8. திருதி உதவி புரிவது | துணை |
| 9. அலச்சூல், சூலம் மனம் புண்ணாக்குவது | சூலம் |
| 10. கண்டம் விபத்தை உண்டாக்குவது | கண்டம் |
| 11. விருத்தி வளர்ச்சி தருவது | ஆக்கம் |





| | |
|---|---|
| 12. துருவம் தலைமை பெறுவது | நிலை |
| 13. வியாகாதம் விஷத்தன்மை உண்டாக்குவது | அரவு |
| 14. அரிஷணம் மிகு மகிழ்வு தருவது | எக்களிப்பு |
| 15. வஜ்ரம். வேதனை தருவது | வேல் |
| 16. சித்தி வெற்றியுண்டாக்குவது | வல்லமை |
| 17. வியதீபாதம் கொலையாளியாக்குவது | கொலை |
| 18. வரீயான் புண் உண்டாதல் | அடிபடுதல் |
| 19. பரிகம் தாழ்மையுண்டாக்குவது | தாழ்வு |
| 20. சிவம் நற்காட்சி காண்பது | காட்சி |
| 21. சித்தம் மனோதிடம் கொள்வது | திறம் |
| 22. சாத்யம் புகழ் பெறுவது | புகழ் |
| 23. சுபம் பாதுகாப்பாக இருப்பது | காவல் |
| 24. சுப்ரமம் மனத்தெளிவு பெறுவது | தெளிவு |
| 25. பிராம்யம் ஏதேனும் ஒன்றை உண்டாக்குவது | பிரம்மா |
| 26. ஐந்திரம் | |

| | |
|---|---|
| பதவி எய்தல் | இந்திரன் |
| 27. வைதிருதி | |
| விகார உணர்ச்சி கொள்ளுதல் | பேய் |

இந்த யோகம் இருபத்தேழில் கம்பம், கண்டம், அதிகண்டம், சூலம், வியாகாதம், வச்சிரம், விதீபாதம், பரிகம், வைதிருதி ஆகிய ஒன்பதும் தீது - மற்றவை நல்லனவாகும்.

இந்த ஒன்பதிலும் கம்பயோகம் வந்து மூன்று நாழிகை கழித்து நின்ற நாழிகை நல்லது, சூலயோகம் வந்து, ஐந்து நாழிகை கழித்து நின்ற நாழிகை நல்லது. கண்டயோகமும், அதிகண்ட யோகமும் வந்து, ஆறு நாழிகை கழித்து நின்ற நாழிகை நல்லது: வியாகாத யோகம் வந்து ஒன்பது நாழிகை கழித்து நின்ற நாழிகை நல்லது.

அடுத்து கரணம் பதினொன்று :

| | | |
|---|---|---|
| 1. பவம் | பவம் | சிங்கம் |
| 2. பாலவம் | பாலவம் | புலி |
| 3. கௌலவம் | கௌலவம் | பன்றி |
| 4. தைதுலம் | தைதுலம் | கழுதை |
| 5. கஜம் | கரஜை | யானை |
| 6. வணிஜம் | வணிஜை | காளை |
| 7. பத்ரை | பத்திரை | கோழி |
| 8. சகுன் | சகுனி | பக்ஷி |
| 9. நாற்கால் | சதுஷ்பாதம் | நாய் |
| 10. உரகம் | நாகவம் | பாம்பு |
| 11. கிருமி | கிம்ஸ்துக்னம் | புழு |

இங்கு ஒரு முக்கிய ஒற்றுமையைக் கவனிக்கவும். அதாவது, நட்சத்திர தெய்வமும், திதி தெய்வமுமம் இணைவது.





| | |
|---|---|
| 1. அசுவினி<br>சுக்லபட்ச நவமி | சரஸ்வதி |
| 2. பரணி<br>பூர்வபட்சப் பிரதமை | துர்க்கை |
| 3. கார்த்திகை<br>அபரபட்ச திருதியை | அக்கினி |
| 4. ரோகிணி<br>சுக்லபட்ச திரயோதசி | பிரம்மா |
| 5. மிருகசீரிஷம்<br>சுக்லபட்ச திரிதியை | சந்திரன் |
| 6. திருவாதிரை<br>சுக்லபட்ச சதுர்த்தசி | உருத்திரன் |
| 7. புனர்பூசம்<br>அபரபட்ச பஞ்சமி | தேவர்கள் |
| 8. பூசம்<br>அபரபட்ச தசமி | வியாழன் |
| 9. ஆயில்யம்<br>அபரபட்ச அஷ்டமி | சேஷன் |
| 10. மகம்<br>அபரபட்ச துவாதசி | சுக்கிரன் |
| 11. பூரம்<br>சுக்லபட்ச ஏகாதசி | பார்வதி |
| 12. உத்திரம் | |
| 13. அஸ்தம்<br>சுக்லபட்ச சப்தமி | சூரியன் |
| 14. சித்திரை<br>சுக்லபட்ச துதியை | விஸ்வதேவன் |
| 15. சுவாதி<br>சுக்லபட்ச அஷ்டமி | லட்சுமி |

| | |
|---|---|
| 16. விசாகம் | |
| சுக்லபட்ச சஷ்டி | சுப்ரமண்யன் |
| 17. அனுஷம் | |
| அபரபட்ச துதியை | வாயு |
| 18. கேட்டை | |
| சுக்லபட்ச பஞ்சமி | தேவேந்திரன் |
| 19. மூலம் | |
| அபரபட்ச சதுர்த்தி | அசுரர் |
| 20. பூராடம் | |
| பௌர்ணமி | வருணன் |
| 21. உத்திராடம் | |
| சுக்லபட்ச சதுர்த்தி | விக்னேஸ்வரன் |
| 22. திருவோணம் | |
| சுக்லபட்ச துவாதசி | விஷ்ணு |
| 23. அவிட்டம் | |
| 24. சதயம் | |
| அபரபட்ச நவமி | எமன் |
| 25. பூரட்டாதி | |
| அபரபட்ச பிரதமை | குபேரன் |
| 26. உத்திரட்டாதி | |
| 27. ரேவதி | |

குறிப்பு : நட்சத்திர தேவதைகள் நான்காவது கவியில் சொல்லப்பட்டிருக்கிறது. திதி தேவதைகள் திதி சரித்திரப் படலத்தில் முதல் கவியில் கூறப்பட்டுள்ளது.

நட்சத்திர தேவதையும், திதி தேவதையும் ஒன்று போல் வரும். இருபத்து மூன்று திதிகள் சுக்கிலபட்சம், அபரபட்சம் இரண்டிலும் வருகின்றன. நட்சத்திர தேவதையும் திதி தேவதையும் ஒன்றாக வருமேயானால் அதற்கு ஒரு பெரிய முக்கியத்துவம் கிடைக்கும். இதை இணைக்க சுலபமாக இருக்கும்





பொருட்டு இதை நட்சத்திர சரித்திரப் படலத்தில் எடுத்துக் கூறியுள்ளேன்.

உதாரணமாக பூரட்டாதி நட்சத்திர தேவதை குபேரன். அபரபட்ச பிரதமை திதி குபேரன். குபேரன் சிவ பெருமானுக்கு நண்பன். திருமால் ஸ்ரீநிவாசப் பெருமாளாகி திருமணம் செய்யும் காலத்தில் திருமணச் செலவுக்குப் பணம் கொடுத்தவன். ஆகையால் இம்மாதிரியான செயல்களும் குணங்களும் ஜாதகருக்குப் பொருந்தும். அதே சமயம் இது ஆறு, எட்டு, பன்னிரண்டாம் பாவமாகவரில் பிறரிடம் பணம் பிடுங்கு பவராகவும், லோபியாகவும் இருப்பார். மேலும் வியாழக் கிழமையாகவும், மார்கழி அல்லது பங்குனி மாதமாகவும் வருமேயானால், ஜாதகர் குபேர சம்பத்தில் குபேரனேயாவார்.

இதேபோல் ஒன்று போல் வரும் நட்சத்திர தேவதையையும் திதி தேவதையையும் இணைத்துப் பலன் கூறுங்கள். பல்வேறு அதிசயப் பலன்கள் உங்களிடம் தேடிவந்து உங்கள் மூளையில் பதியும்.

குறிப்பு : நட்சத்திர தேவதையும், திதி தேவதையும் ஒன்று போல் எல்லா மாதங்களிலும் வராது. இது எந்த மாதத்தில் வரும் என்பதை - நட்சத்திர சரித்திரப் படலம் முடிந்தபின் தனியாகக் கூறியுள்ளேன். பிறகு கவனிக்கவும்.

இங்கு உதாரணமாகக் காட்டியது ஆவணி மாதத்தில் வரும். நான் உதாரணம் காட்டிய மாதத்தில் வராது. எப்படி இணைப்பது என்பதற்காகக் கூறியுள்ளேன்.

## பாவக நாமம்

முதல், ஓரை, கல்யம், முடி, லக்கினம், மெய்ஆம்; கோ
முகம், குடும்பம், வித்தை, பொன், ஊண், மொழிதல், நுதல், புருவம்
பதம் ஈதல் முதலிய ரட்சகம், நாசி, பல், நா
பாத்திர பண்டம் முதல் ஆம்; அணி, வல், பராக்கிரமம்,

கதை, கேள்வி, செவி, கனிட்டம், ஆம்; களம், இல், நீர், ஆய்
காலி, உறவு, ஆள், சுகம், வா கனம், அணை, கை, கலை ஆம்;
சுதன், ஆர், உள், நிறம், இறைஆம்; சோரம், ரிணம், விரணம்,
சுத்து, உதரம், ரிபு, நோய், ஈ துடன் முதல் ஆறதற்கே (5)

இக்கவியில் ஒன்று முதல் ஆறு பாவகங்களுக்குப் பரியாயப் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. எங்கு "ஆம்" என்று முடிகிறதோ, அந்த இடம் பாவகத்தின் பரியாயப் பெயர்கள் முடிந்து விட்டன என்று பொருள்.

இதைக் கவனியுங்கள். முதல் பாவகம் முதல் என்று தொடங்கி மெய் ஆம் என்றும், இரண்டாம் பாவகம் கோ என்று தொடங்கி பண்டம் முதல் ஆம் என்றும், மூன்றாம் பாவகம் அணி என்று தொடங்கி கனிட்டம் ஆம் என்றும், நான்காம் பாவகம் களம் என்று தொடங்கி கலை ஆம் என்றும், ஐந்தாம் பாவகம் சுதன் என்று தொடங்கி இறை ஆம் என்றும், ஆறாம் பாவகம் சோரம் என்று தொடங்கி நோய் ஈதுடன் முதல் ஆறதற்கே என்று கூறியுள்ளார்.

ஆகையால் லக்கின பாவ நாமங்கள்:

லக்கினம், முதல், ஓரை, கல்லியம், முடி, மெய் என்பனவாகும்.

இரண்டாமிடத்துக்கு : கோ (வலது நேத்ரம்), முகம், குடும்பம், வித்தை (கல்வி), பொன் (தனம்), ஊண் (உணவு), மொழிதல் (வாக்கு), நுதல் (நெற்றி), புருவம், பதம், ஈதல் முதலிய ரட்சகம் (அன்னதானம் முதலிய ஜனரட்சகம்), நாசி (மூக்கு), பல், நா (நாக்கு), பாத்திர பண்டம் என்பனவாகும்.

மூன்றாமிடத்துக்கு - அணி (ஆபரணம்), வல் (பலம்), பராக்கிரம், கதை, கேள்வி (காவியக் கேள்வி), செவி (வலது செவி), கனிட்டம் (இளைய சகோதரம் என்பனவாகும்.

நாலாமிடத்துக்கு களம் (கழுத்து), இல் (வீடு, கிருகம்), நீர், ஆய் (பாதுஞ்), காலி (கன்று காலி), உறவு (நட்பு, மித்திரம்), ஆள் (ஆளடிமை), சுகம், வாகனம், அணை (மெத்தை, தழுவணை), கை (வலக்கை), கலை (வத்திரம், ஆடை) என்பனவாகும்.

ஐந்தாமிடத்துக்கு - சுதன் (புத்திரன்), ஆர் (அன்பு), உள் (இருதயம்), நிறம் (மார்பு), இறை (பிரபு) என்பனவாகும்.

ஆறாமிடத்துக்கு - சோரம் (திருட்டு), ரிணம் (கடன்), விரணம் (புண், காயம்) சுத்து (பசி).

இந்த சுத்து என்ற சொல் க்ஷுத் என்று ஸம்ஸ்கிருதத்தில் இருக்கிறது. (சாதாரணமாக வான சாஸ்திரம், ஜோதிட சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், நாட்டிய சாஸ்திரம், சங்கீத சாஸ்திரம் இவைகளுக்கு கலைச் சொற்களாக தமிழில் ஏராளமாக ஸம்ஸ்கிருதச் சொற்கள் வருகின்றன. இதை மொழி வெறி இல்லாமல் சிந்திப்பவர்களுக்கு நன்கு புரியும்.

ஆகையால் க்ஷுத் என்ற சொல்லை ஆசிரியர் தமிழுக்கேற்ப தத்பவமாக்கி சுத்து என்று கூறியுள்ளார்.

இந்த தத்பவம், தற்சமம் என்ற சொற்கள், நன்னூல் இலக்கண நூல் படித்தவர்களுக்கு தெளிவாகத் தெரியும்.

ஆனால், இந்த சுத்து (பசி) என்னும் சொல் தமிழ் இலக்கிய நூல்களில் வழக்கில் இருப்பதாகத் தெரியவில்லை.

அடுத்து உதரம் (வயிறு), ரிபு (சத்துரு), நோய் (ரோகம்) என்பனவாகும்.

இதுவுமது, அதாவது பாவக நாமமே

அதனுவரத்து, ஆண்பெண் எனல் அணைதல், படல், களம் ஆம்;
அவமானம், வதை துயில், மாய், ஆயுவு, அபானம்,
வதைபுரிதல், ரந்திரம், தத்து, ஆம்; பிதுர்வாக்கியம், தன்
மம், குரு, சிவார்ச்சனை, மா தவம், சகனத் தலம் ஆம்;
சிதம், இசை, ஆக்கினை, மானம், செய்தொழில், உன்னதம், யாத்
திரை, இடக்கை, குறங்குஆம்; அச் செவி, முழங்கால், சேட்டன்,
இதம், அபிதம், பவம், ஆயம், லாபமும் ஆம்; வியம், தாள்
இடக்கணம் இவை - ஏழ்முதல், ஈது; இனித்தினம் மான்மியமே

இக்கவியில் ஏழுமுதல், பன்னிரண்டு பாவகங்களுக்குப் பரியாயப் பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

இதிலும் ஆம் என்று முடியுமிடம் ஒரு பாவகப் பரியாயப் பெயர்கள் முடிந்துவிட்டன என்று பொருள்.

இதைக் கவனியுங்கள். ஏழாம் பாவம்க அதனுவரத்து என்று தொடங்கி களம் ஆம் என்றும், எட்டாம் பாவகம், அவமானம் என்று தொடங்கி தத்து ஆம் என்றும், ஒன்பதாம் பாவகம் பிதுர் என்று தொடங்கி சகனத்தலம் ஆம் என்றும், பத்தாம் பாவகம் சிதம் என்று தொடங்கி குறங்கு ஆம் என்றும், பதினோராம் பாவகம் அச்செவி என்று தொடங்கி லாபமும் ஆம் என்றும் பாவகம், வியம் என்று தொடங்கி இடக்கண் - பன்னிரண்டாம் - இவை ஏழ்முதல் ஈறு என்றும் கூறியுள்ளார். ஆகையால், ஏழாம் பாவகம் முதல் பன்னிரண்டாம் பாவகம் முடிய கவனிப்போம்.

ஏழாமிடத்துக்கு -

அதனுவரத்து - தனு என்பது உடல் - அதனு எனப்து உடல், இல்லாதது என்று பொருள். உடல் இல்லாதவன் மன்மதன். இவனுக்குத் தமிழில் உருவிலி என்ற பெயரைக் கவனியுங்கள்.

இந்த இடத்தில் ஏழாம் பாவகத்தின் உட்பொருளாகிய அகப் பொருளுக்காக, இவனுக்குரிய பரியாயப் பெயர்களையும் சிறிது தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். சிந்தனைக்கு உதவிகரமாக இருக்கும். ஆகையால், இவன் (மன்மதன்) பெயர்களாவன.





| | | |
|---|---|---|
| 1. | அங்கஜன் | உருவிலி |
| 2. | அனங்கன் | உருவிலி |
| 3. | ஆழிமுரசோன் | கடலை முரசமாக உடையவன் |
| 4. | இரதிகாதலன் | இரதிக்குக் கணவன் |
| 5. | உருவிலி | உருவம் இல்லாதவன் |
| 6. | ஐங்கணைக் கிழவன் | 5 பாணங்களைக் கொண்டவன் |
| 7. | சந்தர்ப்பன் | இளமையுடையோன் |
| 8. | கருப்புவில்லி | கரும்பை வில்லாக உடையோன் |
| 9. | காமன் | காம உணர்வு உண்டாக்குபவன் |
| 10. | சம்பராரி | சம்பரனுக்கு எதிரி |
| 11. | சித்தஜன் | உள்ளத்தில் உதிப்பவன் |
| 12. | சிங்காரயோனி | புணர்ச்சிக்கு உரியவன் |
| 13. | சுரும்பாவன் | வண்டு மொய்க்கும் பூக்கள் உடையவன் |
| 14. | சீபுத்திரன் | லட்சுமி புதல்வன் |
| 15. | சூர்ப்பகாராதி | இரண்டு நதிகளை இணைப்பவன் |
| 16. | திங்கட்குடையோன் | சந்திரனைக் குடையாக கொண்டவன் |
| 17. | தர்ப்பகன் | கர்வமுடையவன் |
| 18. | திருமகள் மைந்தன் | லட்சுமிக்கு மகன் |
| 19. | தென்றல் தேரோன் | தென்றல் காற்றை தேராகக் கொண்டவன் |
| 20. | பஞ்சபாணன் | 5 பாணங்களுடையவன் |
| 21. | பிரத்யும்நன் | மன்மதன் மறு பிறப்பானவன் |
| 22. | பூலம்பன் | பூமாலையுடையவன் |
| 23. | மதன் | மனதிற்கு இன்பமூட்டுபவன் |
| 24. | மதுசகன் | மனத்திற்கு இன்பமூட்டுபவன் |
| 25. | பூவாளி | பூக்களால் ஆட்சி செய்வோன் |

| | |
|---|---|
| 26. மகாகேதனன் | பெருமைபொருந்திய கொடியுடையோன் |
| 27. மனோஜன் | மனத்திற்கு ஆசையூட்டுபவன் |
| 28. மனோற்பவன் | மனதில் பிறந்தவன் |
| 29. மீனக்கொடியோன் | மீன்கொடி உடையோன் |
| 30. மால்மகன | திருமாலின் புதல்வன் |
| 31. மோகன் | மோகத்தை உண்டாக்குபவன் |
| 32. வசந்தன் | தென்றல் காற்றை உடையவன் |
| 33. வேள் | ஆசையூட்டுபவன் (புணர்ச்சிக்கு) |
| 34. வேனிலாளி | தென்றல் காற்றை ஆட்சி புரிவோன் |

இவனுக்கு ஐந்து கணைகள் (பாணங்கள்) உண்டு. அவை,

| | | |
|---|---|---|
| அரவிந்தம் | தாமரை | உன்மத்தம் |
| அசோகம் | அசோகமரம் | மதனம் |
| குவ்ளை | குவளைப்பூ | மோகனம் |
| சூதம் | மாம்பூ | சந்தாபம் |
| முல்லை | முல்லைப்பூ | வசிகரணம் |

இந்தக் கணைகள் உண்டாக்கும் செயல்கள் -

| | |
|---|---|
| உன்மத்தம் | மயக்கத்தை உண்டாக்கும் |
| மதனம் | மௌனத்தை உண்டாக்கும் |
| மோகனம் | ஆசையை உண்டாக்கும் |
| சந்தாபம் | கவலையை உண்டாக்கும் |
| வசிகரணம் | புணர்ச்சிக்கு இணக்கத்தை உண்டாக்கும் |

இவற்றின் அவத்தைகளாவன :

1. சுப்பிரயோகம், 2. விப்பிரயோகம், 3. சோகம், 4. மோகம், 5. மரணம்

சுப்பிரயோகம் - சொல்லும் நினைவும்

விப்பிரயோகம் - வெய்துயிர்த்திரங்கள்





சோகம் - வெதுப்பும், துய்ப்பன தெவிட்டலும்

மோகம் - அழுங்கலும், மொழிபல பிதற்றலும்

மரணம் - அயர்ப்பும் மரணமும் தருவனவாகும்.

இக்கருத்தின் உண்மைகளை ஏழாம் பாவகத்தில் கணவன் மனைவி உறவைப் புரிந்து கொள்வதற்குப் பயன் தரும்.

அடுத்து வரத்து - இதில் அடங்கியிருக்கும் உட்பொருள், வரன் வது, அதாவது மணமகன், மணமகள் என்று பொருள்.

ஆகையால், ஏழாம் பாவத்தில் ஒரு பெண்ணுக்கு எப்படிப்பட்ட வரன் (மணமகன்) அமையும் என்றும், ஒரு ஆணுக்கு எப்படிப்பட்ட வது (மணமகள்) அமையும் என்றும் சிந்திக்கத் தூண்டும் சொல்லாகும்.

அடுத்து ஆண் - பெண் எனல் அதாவது ஆணின் அங்கலட்சணங்களையும், பெண்ணின் அங்க லட்சணங்களையும் உணர்ந்து கொள்ளுதல் என்று பொருள்.

அணைதல் - சையோகம் - ஆண் - பெண் கூடுதல் - அதாவது, புணர்ச்சி எப்படிப்பட்ட நிலையில் அமையும் என்று பொருள்.

களம் - இது ஆணுக்கு மனைவியைப் பற்றியும், பெண்ணுக்கு கணவனைப் பற்றியும் புரிந்து கொள்ள உதவுவது.

படல் - பாடு - இது காதலாகும். அதாவது, இருவர் மனமும் ஒன்றியிருத்தல் எப்படி என்பதை விளக்குவது

எட்டாமிடத்துக்கு -

அவமானம் - இது ஒருவர்தானே தேடிக் கொள்ளும் தீய செயலாலோ ஒழுக்கக்கேடாலோ அல்லது பிறராலோ ஏற்படும் நாணத்தக்க செயலாகும்.

வசை - பிறரால் இகழ்ச்சி செய்யப்படுதல். அவை - திருடுதல், நிந்தித்தல், தூஷித்தல், பழித்தல், கேலி - கிண்டல் செய்தல் முதலியனவாகும். இது பொதுவாக அபகீர்த்தி எனப்படும்.

**துயில்** - இது ஒருவருடைய தூக்கம் எப்படிப்பட்டது என்பதை விளக்குவது. அதாவது, அரைத்தூக்கம், முழுத்தூக்கம், ஆழ்ந்த நித்திரை, சதா நித்திரை (எப்பொழுதும் அல்லது நினைத்த போது தூங்குவது), பொய்த்தூக்கம், மெய் மறந்த தூக்கம், கண்விழித்துக் கொண்டே தூக்கம், மயக்க நித்திரை, நித்திரையின்மை, கட்டாந்தரையில் உறங்குதல், பஞ்சணை மெத்தையில் உறங்குதல், சத்திரம் சாவடியில் உறங்குதல், மரத்தடியில் உறங்குதல், மலையடி வாரத்தில் உறங்குதல், பயண வண்டியில் உறங்குதல், இவை போல் தூக்கத்தைப் பற்றி இன்னும் பல உள்ளவற்றைப் புரிந்து கொள்ள உதவுமிடம் இதுவாகும்.

**மாய்வு** - மரணம். அதாவது, மரணம் எங்கு, எப்படி, யாரால், எதனால், எப்பொழுது, ஏன் ஏற்படுகிறது என்பதைக் குறிப்பதாகும்.

**ஆயுவு** - தீர்க்காயுள். இந்த தீர்க்காயுள் எப்படி அமைகிறது? எதனால் அமைகிறது? என்பதை விளக்குவது.

**அபானம்** - குதம், பாயுரு, பாயு. இது உடம்புறுப்பில் ஆசனவாய். அதாவது மலங்கழியும் துவாரமாகும். இதன் மூலம் ஆசனக் கடுப்பு, பவுத்திரம் (மூலநோய்), மலச்சிக்கல், வாயுத் தொல்லை முதலியவற்றைத் தெரிந்து கொள்ளலாம்.

வதைபுரிதல் - அதாவது, கொலை செய்தல் என்பதை விளக்குவது.

அது, தானே தற்கொலை செய்து கொள்ளல், வஞ்சம் தீர்க்கக் கொலை செய்தல், கூலிப் பிழைப்புக்காக, கைக்ககூலி வாங்கிக் கொண்டு எதிரி அல்லாதவனைக் கொலை செய்தல், கலகக் கூட்டத்தைக் கலைக்க, கல்லால், தடியால், அப்பால் இன்றைய நவீனத் துப்பாக்கியால் அடித்தும், சுட்டும் கொலை செய்தல், நேர்முகக் குண்டு வீசிக் கொலை செய்தல், வாகனத்தில் கால வரையிட்டு, ஒளித்து வைத்து, வாகனம் சிதறுண்டு அதிலுள்ள . மக்கள் கால், கை, மூளை சிதறி, உயிர்





பிரியக் கொலை செய்தல், கட்டிடங்களைத் தகர்த்தெறிய அங்கும் காலவரையிட்டுக் குண்டு வைத்துக் கட்டிடத்தையும் அதில் உள்ள மக்களையும் சிதறடித்துக் கொலை செய்தல், அரசாங்க கட்டிடத்துக்குக் கட்டுப்பட்டு, குற்றவாளியைத் தூக்கிலிட்டுக் கொலை செய்தல். இவைபோல் இன்னும் பலவற்றைப் புரிந்து கொள்ள இந்த எட்டாம் பாவகம் துணை புரிகிறது.

ரந்திரம் - இது பொதுவாகக் குழி, துவாரம் ஓட்டை எனப்படும். ஆனால் இதன் உட்பொருள் மனித உடலின் நவதூரங்களாகும். அவை, கண் இரண்டு, காது இரண்டு, மூக்கு இரண்டு, வாய் ஒன்று, அபானம் ஒன்று, யோனி அல்லது லிங்கம் ஒன்று என ஒன்பது ரந்திரங்களாகுக். இவைகளுக்கு ஏற்படும் புண், காயம், அடி, வெட்டு, வலி, நோய் ஆகிய இவைகளைப் புரிந்து கொள்ள உதவுவது இந்த எட்டாம் பாவகமாகும்.

அதேசமயம் கண், மூக்கு, வாய் மூன்றையும் கவனிக்கும் போது இரண்டாம் பாவகத்தையும், காதைக் கவனிக்கும்போது மூன்று பதினொன்று ஆகிய பாவகத்தையும், இந்த எட்டாம் பாவகத்துடன் இணைத்துக் கொள்ள வேண்டும்.

யோனி அல்லது லிங்கத்திற்கு ஏழாம் பாவகத்தை இத்துடன் இணைத்துக் கொள்ள வேண்டும்.

மேலும் குழி, பள்ளம், துவாரம் உள்ள இடங்களில் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் குறிப்பதாகும்.

தத்து - கண்டம், அவமிருந்து (துர்மரணம்) விபத்து, அதாவது வாகன விபத்து, தீவிபத்து, மின் இடி விபத்து, இன்றைய நவீனத்தில் மின்சார விபத்து, ஆயுத விபத்து, மரம் முறிந்து அல்லது சாய்ந்து வீழும் விபத்து, கால் இடறிக் கீழே விழும் விபத்து. இவைபோல் இன்னும் பல உண்டு. இவையே, தத்து அவமிருத்து, கண்டம் என்னும் பரியாயச் சொற்களில் அடங்கும்.

**ஒன்பதாம் பாவகத்துக்கு** - பிதுர் அதாவது பெற்றெடுத்து தந்தையைப் பற்றிக் கூறுவது.

அப்பன், அத்தன், ஐயன், ஈன்றான், குரவன், சனகன், தகப்பன், தாதா, தாதை, பித்ரு ஆகியவை ஒரு பொருட் சொற்கள்.

இவற்றில் பிதுர் அல்லது பிதிர், நம்மால் அதாவது மக்களால் பூஜிக்கத்தக்கவர், வணங்கத் தக்கவர், போற்றத் தக்கவர் என்று பொருள்.

அத்தன், அப்பன், ஐயன், பிதா இந்நான்கும் கடவுளுக்குச் சமமானவர் என்று பொருள்.

"அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம்". இதில் பிதா முன்னறி தெய்வமாகக் கூறப்பட்டுள்ளது.

ஜனகன், ஈன்றான், இவ்விரண்டும் நம்மைப் பெற்றவர் என்று பொருள்.

தகப்பன், தாதா, தாதை - இம்மூன்றும் நம்மைப் பிறப்பித்து சிறப்பிப்போர் என்பது பொருள்.

தந்தை, குரவன் என்பது நமக்கு கல்வி கற்பிக்கச் செய்து அறிவூட்டுவோர் என்பது பொருள்.

"தாயோடு அறுசுவைபோம், தந்தையோடு கல்விபோம்" என்னும் நீதியைக் கவனிக்கவும்.

ஆகையால், பிதுராகிய தந்தை ஜாதகருக்கு எப்படிப்பட்டவர்? செல்வந்தரா? வறிஞரா, பந்தபாசம் உள்ளவரா? பகைமை கொண்டவரா? தீர்க்காயுள் உள்ளவரா? இவை போல் இன்னும் பல விஷயங்களைத் தகப்பனாரைப் பற்றிப் புரிந்து கொள்ள ஒன்பதாம் பாவகம் பயன் தருகிறது.

அடுத்து தன்மம். இதுவே தர்மம் - இதற்கு அறம், சுத்தம், நல்லொழுக்கம், சீலம், சுகிர்ந்தம், புண்ணியம் என்ற பரியாயப் பெயர்கள் உண்டு.

இதன் மூலம் ஜாதகர் பிறருக்கு நன்மை - உதவி புரிபவரா,





ஒழுக்கம் உடையவரா? புண்ணியம் செய்பவரா? சுத்தமுள்ளவரா? அப்படியானால் எப்படிப்பட்ட தர்மம் செய்பவர்? எப்படிப்பட்ட ஒழுக்கம் உடையவர்? எப்படிப்பட்ட புண்ணியம் செய்பவர் என்பதை இந்த ஒன்பதாம் பாவகத்தைக் கொண்டு உணரலாம்.

அடுத்து "குரு" - இதன் பரியாயப் பெயர்கள் - அடிகள், அத்தன், ஆசாரி, ஆசான், ஆத்தன், ஆரியன், இறைவன், ஈசன், ஐ, ஐயன், கடவுள், குரவன், கோமான், சாமி, தலைவன், தீர்த்தன், தேசிகன், பகவன், பட்டாரகன், பண்ணவன், பதி, புங்கவன், பெருமான் என்பனவாகும்.

இந்தப் பெயர்களின் உட்பொருள்களாவன :

| | |
|---|---|
| அடிகள் | பலர் போற்றும்படியான தெய்வத்தன்மை வாய்ந்தவர் |
| அத்தன் | தெய்வம் போன்றவர் |
| ஆசாரி | ஒழுக்கம் நிறைந்தவர் |
| ஆத்தன் | பெருங்குணம் படைத்தவர் |
| ஆரியன் | ஒழுக்கத்தில் உயர்ந்தவர் |
| இறைவன் | நல்வழிப்படுத்தி ஆதரிப்பவர் |
| ஈசன் | காப்பாற்றுபவர் |
| ஐ | தலைமையானவர் |
| ஐயன் | மூத்த, தன்மை பெற்றவர் |
| கடவுள் | கடவுள் போன்றவர் |
| குரவன் | போதிக்கும் தன்மை வாய்ந்தவர் |
| கோமான் | பெருமையிற் சிறந்தோர் |
| சாமி | உயர்ந்தவர் |
| தலைவன் | மேலானவர் |
| தீந்த்தன் | பரிசுத்தமானவர் |

| | |
|---|---|
| தேசிகன் | நல்லறிவு போதிப்பவர் |
| பகவன் | கடவுளுக்குச் சமமானவர் |
| பட்டாரகன் | அறிவொளி தருபவர் |
| பண்ணவன் | பண்பு படைத்தவர் |
| பதி | தலைமையானவர் |
| புங்கவன் | தூய்மையானவர் |
| பெருமான் | அறிவொளி தருவதில் பெருமையிற் சிறந்தோன் |

இந்த குரு என்ற சொல்லுக்குரிய உட்கருத்துக்களை ஜாதகர் மீது ஏற்றி ஜாதகர் இந்தத் தன்மைகளில் எப்படிப்பட்டவர் என்பதைக் கூற இந்த ஒன்பதாம் பாவகம் பயன்தருகிறது.

அடுத்து சிவார்ச்சனை - அதாவது சிவபூஜை செய்வதில் ஜாதகர் எப்படிப்பட்டவர் என்பதைக் குறிப்பதாகும்.

அடுத்து மாதவம் - அதாவது ஜெபதபங்கள் செய்வதில் (தபசு) ஜாதகர் நிலை என்ன என்பது விளக்குவது.

அடுத்து சகனத்தலம் - அதாவது கடிதடம், தொடையின் உட்பக்கம், முதுகு, புறம், முள்ளந்தண்டு, விலா எலும்பு என்பனவாகும்.

இதன்மூலம் இந்த உறுப்புக்களின் தன்மைகளைப் புரிந்து கொள்ள ஒன்பதாம் பாவகம் உதவுகிறது.

பத்தாம் பாவகத்துக்கு - சிதம் (ஆகாயம்), இசை (கீர்த்தி), ஆக்கினை மானம் (வெகுமானம்), செய்தொழில், உன்னதம், யாத்திரை, இடக்கை, குறங்கு (தொடை) என்பனவாகும்.

பதினோராம் பாவகத்துக்கு - (அச்) செவி (இடது செவி), முழங்கால், சேட்டன் (மூத்த சகோதரம்), இதம் (நன்மை), அபிதம் (இரட்சித்தல்), பவம் (சம்பாத்யம்), ஆயம் (ஆதாயம், வரவு), லாபம், வர்த்தனை (வர வேண்டியது - வரவு) என்பனவாகும்.

பன்னிரண்டாம் பாவகத்திற்கு - வியம் (செலவு), தாள் (பாதம், கால்) இடக்கண் என்பனவாகும்.





இந்த ஆசிரியர் மிக முக்கியமான பாவகப் பரியாயப் பெயர்களை மட்டும் கவிக்கு அடக்கமாகக் கூறியுள்ளார்.

நாம் மேலும் பல பரியாயப் பெயர்களை பல நூல்களிலிருந்தும் காரண காரியங்களோடு எடுத்துக் கொள்ளலாம்.

ஆசிரியர் இந்தக் கவியின் ஈற்றில் இனி தின மான்மியமே என்று கூறி முடித்துள்ளார். அதாவது, இனி, நட்சத்திர சரித்திரத்தைச் சொல்லுவோம் என்பது பொருள்.

குறிப்பு - கரணமிருகமும், நட்சத்திர மிருகமும் ஒன்றுபோல் வருவது.

இதை முன்னதாகத் தெரிந்து வைத்துக் கொள்வது பலன் சொல்வதற்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.

அவை வருமாறு :

| | |
|---|---|
| 1. பவம் - பொதுவாக | சிங்கம் |
| பூரட்டாதி | ஆண் சிங்கம் |
| அவிட்டம் | பெண் சிங்கம் |
| 2. பாலவம் - பொதுவாக | புலி |
| விசாகம் | ஆண் புலி |
| சித்திரை | பெண் புலி |
| 3. கௌலவம் - பொதுவாக | பன்றி |
| இதற்கு நட்சத்திரம் இல்லை | |
| 4. தைதுலம் - பொதுவாக | கழுதை |
| இதற்கும் நட்சத்திரம் இல்லை | |
| 5. கரசை - பொதுவாக | யானை |
| பரணி | ஆண் யானை |
| ரேவதி | பெண் யானை |
| 6. வணிசை | காளை - எருது |
| உத்திரம் | எருது |

| | |
|---|---|
| 7. பத்திரை | கோழி |
| மிருகசீரிஷம் | கோழி |
| 8. சகுனி | பறவை |
| இதற்கு நட்சத்திரம் இல்லை | |
| 9. சதுஷ்பாதம் - பொதுவாக | நாய் |
| திருவாதிரை | ஆண் நாய் |
| மூலம் பெண் நாய் | |
| 10. நாகம் - பொதுவாக | பாம்பு |
| மிருகசீரிஷம் | சாரை |
| ரோகிணி | நாகம் |
| 11. கிம்ஸ்துக்கினம் | புழு |
| இதற்கு நட்சத்திரம் இல்லை | |

இந்தக் கரணமும் நட்சத்திரமும் ஒன்று சேர்வது ஒரு முக்கியம்.

குறிப்பு : பதினோரு கரணங்களில் ஏழு கரணங்களுக்கு பன்னிரண்டு நட்சத்திரங்கள் வருகின்றந.

மிருகசீரிஷம் - பறவையில் கோழியாகவும், மிருகத்தில் சாரையாகவும் வருகிறதைக் கவனிக்கவும்.

இனி இதன் பலன்களைக் கவனிப்போம்.

பவகரணமும், பூரட்டாதி அல்லது அவிட்ட நட்சத்திரமும் ஒன்று சேர்ந்து பிறந்த ஜாதகர், கோபமுள்ளவராகவும், பசிக்காதபோது புசிக்காதவராகவும் இருப்பார். தானே பெரியவன் என்ற எண்ணோடு வாழ்வார்.

"குறுமுயல் சிங்கந்தன்னைக் கொன்றதோர் கதையும் உண்டே" என்பதற்கேற்ப ஒன்றுக்கும் உதவாத சிலரிடம் ஏமாந்து போவார். கவனம் தேவை. பாவக காரகத்தை இணைத்துக் கொள்ளவும்.



கரசை கரணமும் பரணி அல்லது ரேவதி நட்சத்திரமும் ஒன்று சேர்ந்தால் ஜாதகர் பிறரால் நன்கு மதிக்கப்படுவார். அரசாங்கத்தில் ஏதேனும் ஒரு பதவி வகிப்பார். காம இச்சையில் அதிக எண்ணமுள்ளவராக இருப்பார்.

பத்திரை கரணமும் மிருகசீரிஷ நட்சத்திரமும் ஒன்று சேர்ந்தால் சோம்பேறிகளை சுறுசுறுப்பாக்குவார். தூங்கு மூஞ்சிகளைத் தெளிய வைப்பார். காலாகாலத்தில் செய்யும் வேலைகளைத் தவறாமல் செய்யும்படி உற்சாக மூட்டுவார்.

இதேபோல் மற்றவைகளையும் இணைத்துப் பழகுங்கள். மேலும் சில பல மொழிகளை இதன்மேலேற்றி அதன் தன்மையை உணர்ந்து பலன் கூறப் பழகுங்கள்.

1. சிங்கம் பசிக்கு ஆனையையே தேடிக் கொல்லும் பவம்

| | |
|---|---|
| 2. புலி பசித்தால் புல்லைத் தின்னுமா? | பாலவம் |
| 3. பன்றிக்குட்டிக்கு சங்கராந்தி ஏது? | கௌலவம் |
| 4. கழுதை அறியுமா? கந்தப்பொடி வாசனை | தைதுலை |
| 5. யானை அசைந்து தின்னும் வீடு அசையாமல் தின்னும் | கரசை |
| 6. காளை போன வழியே கயிறு போகும் | வணிசை |
| 7. கோழி சிறகால் குஞ்சுகளைக் காப்பது போல | பத்திரை |
| 8. பட்சி சிறகு பறிகொடுத்தாற் போல | சகுனி |
| 9. நாய் அறியுமா? ஒரு சந்திப்பானை | சதுஷ்பாதம் |
| 10. பாம்புக்கு மூப்பு இல்லை | நாகவம் |
| 11. புழுத்த சரக்கு கொழுத்த பணம் | கிம்ஸ்துக்னம் |

இந்தப் பழமொழிகளின் உட்பொருளை ஜாதகர் மீது ஏற்றிப் பலன் கூறுங்கள்.

## 3. நட்சத்திர சரித்திரப் படலம்

நாமநட்சத்திரம் (நட்சத்திர எழுத்துக்கள்)

அம்முதல் ஓர் நான்கதும்; வவ் இரு நான்கு உள்ளதும்;
கு ஆ இரண்டு, இருமூன்றும்; மெம்முதலாய் மூன்றும்;
மம் முதல் ஆறு, அல்லது; பந்நான்கு, இரண்டு, அல்லதும்; தவ்
ஆக இரண்டு, ஏழும்; நகரத்ததுவாய் ஆறும்;
நெம் முதல் ஓர் மூன்றும், யு, யூ; உகரமுதல் ஐந்தும்;
நின்றதும்; அக் கவில் நான்கும்; ஞம்முதல் ஓர் மூன்றும்;
தொம் முதல் ஓர் மூன்றது; நொம் முதல் மூன்றும்; யாவும்;
சொல் ச-வில் நான்கு, ஐந்து, ஒரு மூன்று அறுமீன் தொட்டு
உளதே.

இக்கவியில் அசுவினி முதல் ரேவதி முடிய என்று கூறாமல் கார்த்திகை முதல் பரணி முடிய என்று பொருள்பட, எட்டாம் வரியின் இறுதியில், அறுமீன் தொட்டு உளதே என்று கூறியுள்ளார். ஒவ்வொரு நட்சத்திரத்தையும் கூறி, அதற்கு எழுத்துக்கள் இன்னதென்று கூறாமல், நாமே நட்சத்திரங்களை வரிசைப்படுத்தி கொள்ளும் சுருக்கத்தைப் புரிந்து கொள்ளுமாறு அமைத்துள்ளார்.

அதாவது, ஒரு நட்சத்திரம், அல்லது கிரகம், அல்லது ஒரு ராசியைக் குறிப்பிட்டு, நேர் என்று கூறி நேர்; அறு மீன் தொட்டு என்று கூறியுள்ளார். அது ஒரு சிறப்புக்குரியது.

மேலும் எங்கு உம் என்று முடிகிறதோ அங்கு ஒரு நட்சத்திரம் முடிந்தது என்று பொருள்.

இனி மேற்கூறிய எழுத்துக்களையும், நட்சத்திரங்களையும் வரிசைப் படுத்துவோம்.

| | |
|---|---|
| அம் முதல் ஓர் நான்கதும்; | |
| அ-ஆ-இ-ஈ | கார்த்திகை |
| வவ் இரு நான்கு; (ஒரு நான்கு) | |
| வ-வா-வி-வீ | ரோகிணி |
| (இன்னொரு நான்கு) உள்ளதும் | |
| வெ-வே-வை-வௌ | மிருகசீரிஷம் |
| கு-ஆக இரண்டு; | |
| கு-கூ | திருவாதிரை |
| இரு மூன்றும்; ஒரு மூன்று | |
| கெ-கே-கை- | புனர்பூசம் |
| இன்னொரு மூன்று; | |
| கொ-கோ-கௌ | பூசம் |
| மெம்முதலாய் மூன்றும்; | |
| மெ-மே-மை- | ஆயில்யம் |
| மம் முதல் ஆறும், | |
| ம-மா-மி-மீ-மு-மூ | மகம் |
| அல்லதும்; | |
| மொ-மோ-மௌ | பூரம் |
| பந் நான்கு; | |
| ப-பா-பி-பீ | உத்திரம் |
| இரண்டு; | |
| பு-பூ | அஸ்தம் |
| அல்லதும்; | |
| பெ-பே--பை-பொ-போ-பௌ | சித்திரை |
| தவ் ஆக இரண்டு; | |
| த-தா | சுவாதி |
| ஏழும்; | |
| தி-தீ-து-தூ-தெ-தே-தை | விசாகம் |
| நகரத்ததுவாய் ஆறும் | |
| ந-நா-நி-நீ-நு-நூ | அனுஷம் |
| நெம் முதல் ஓர் மூன்றும்; | |

நெ நே நை — கேட்டை

யு யூ

யு யூ — மூலம்

உகர முதல் ஐந்தும்

உ ஊ எ ஏ ஐ — பூராடம்

நின்றதும்:

ஓ ஓ ஔ — உத்திராடம்

அக கவில் நான்கும்:

க கா கி கீ — திருவோணம்

கும் முதல் ஓர் மூன்றும்:

கு கூ கெ — அவிட்டம்

தொம் முதல் ஓர் மூன்றும்:

தொ தோ தௌ — சதயம்

தொம் முதல் மூன்றும்:

தொ தோ தௌ — பூரட்டாதி

காவும்:

கா — உத்திரட்டாதி

சொல் சவில் நான்கு:

ச சா சி சீ — ரேவதி

ஐந்து:

சு சூ செ சே சை — அசுவினி

ஒரு மூன்று

சொ சோ சௌ — பரணி

எட்டாவதி வரிசை அதுவே தொட்டு உரைத்த என்று முடிவதால் நான்கு ஐந்து ஒரு மூன்று என்பதற்கு உம் அவசியமில்லை என்பதை உணரவும்.



இந்த ஆசிரியர் தமிழ் மொழி முறைப்படி மொழிமுதல் எழுத்துகளைக் கூறியுள்ளார்.

வடமொழி முறைப்படி மொழி முதல் எழுத்துகளாக வரக்க எழுத்துகளையும் நூல்களிலிருந்து நாம் எடுத்துக் கொள்ளலாம்.

இந்த எழுத்துகளின் உபயோகம் இந்த எழுத்துகள் மேஷம் முதல் மீனம் முடிய பன்னிரண்டு ராசிகளில், நட்சத்திரங்கள் போல் இவையும் நிலையாக அமைந்துள்ளன.

ஒன்பது கிரகங்களையும் ஒன்பது தெய்வங்களாக உள்ளதை நினைவு படுத்திக் கொள்ளுங்கள்.

அசுவினிக்கு சு சூ செ சே சை என்ற எழுத்துகள் உள்ளன.

இதில் சேய்பெருமாளுக்கு மொழி முதலாக உள்ளது.

சு சுடலையாடி

சை சைலவாசன்

என்றும் பெயரை எடுத்துக் கொள்ளுங்கள். இதுபோல் மற்றவையும்.

இந்த எழுத்துகள் வகிக்கும் எத்துணையாவது பாவகம் என்று எண்ணி (கணக்கிட்டு) அந்த பாவகத்தின் உறவு, நட்பு, பகை என்பதை உணர்ந்து, அந்தப் பெயரின் நபர், ஊர், இடம், பொருள், மிருகம், பறவை, இனம், செயல் — இவைகளை இணைத்து, இவற்றால் நன்மை தீமைகளைக் கூறப் பயிற்சி பெறுங்கள்.

இதற்காகத்தான் இந்த எழுத்துகளே தவிர, பிறந்த குழந்தைக்கு கட்டாயமாக இந்த எழுத்திலேதான் பெயர் வைக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

அடுத்து நட்சத்திர மிருகம், நட்சத்திர பட்சி இவைகளைப் பற்றிய கல்வியைக் கவனிப்போம்.

## நட்சத்திர மிருகம் - நட்சத்திரப் பட்சி

அறுமீன் நேர் ஆடு, அரவு, சாரை, முன்நாய், பூனை,
அசம், வெருகு, ஆண்எலி, ஆகு, ஆன், மேதி, புற்கு, ஆண், பெண்மான்,
உறுகலை, நாய், முசு, ஆ, அம், முசுப்பெண், மா, மகன், கோ
உவா, மாத்தோல்உள; - மயில், ஆந்தை, ஊர்ப்புள், அன்றில்,
குறுகு அனம், நீர்க்கொடி, சிசிலி, கழுகு, அது, சிள்வீடு
கோவி, மரங்கொத்து, ஈ, அச் செவ்வால், புள், கோரம்,
அறைவளம், போந்துப், பகண்டை, கார், வீ, நாரை, மா,
அண்டம், உள்ளான், கோட்டான், வல் ஆளி, கன்வாகனமே

இக்கவியில் அறுமீன்நேர் ஆடு என ஆரம்பித்து, நான்காவது வரி பாதியில் தோல்உள என மிருகங்களைக் கூறியுள்ளார்.

நான்காவது வரி பிற்பாதியில் மயில் எனத் தொடங்கி, எட்டாவது வரியில் கன்வாகமே எனப் பட்சிகளைக் கூறியுள்ளார்.

இதை நாம் அறுமீன் என்ற கார்த்திகையை முதலாவதாக வைத்துப் பரணி முடிய ஆடு என்பதை வரிசைப்படுத்தி மிருகங்களையும், மயில் என்பதை வரிசைப்படுத்திப் பட்சிகளையம் புரிந்து கொள்ள வேண்டும்.

அவை பின்வருமாறு - மிருகங்கள்

| நட்சத்திரம் | மிருகம் | விளக்கம் |
|---|---|---|
| 1. கார்த்திகை | ஆடு | ஆடு (பெண்) |
| 2. ரோகிணி | அரவு | பாம்பு, நாகம் |
| 3. மிருகசீரிஷம் | சாரை | சாரைப் பாம்பு |
| 4. திருவாதிரை | முன்நாய் | ஆண் நாய் |
| 5. புனர்பூசம் | பூனை | பூனை |
| 6. பூசம் | அசம் | அஜம், ஆண் ஆடு |
| 7. ஆயில்யம் | வெருகு | ஆண் பூணை |
| 8. மகம் | ஆண் எலி | ஆண் எலி |
| 9. பூரம் | ஆகு | பெருச்சாளி பெண் எலி |
| 10. உத்திரம் | ஆன் | எருது |
| 11. அஸ்தம் | மேதி | பெண் எருமை |
| 12. சித்திரை | புற்கு | புலி (ஆண் புலி) |
| 13. சுவாதி | ஆண் | ஆண் எருமை |
| 14. விசாகம் | பெண் | பெண் புலி |
| 15. அனுஷம் | மான் | பெண்மான் |
| 16. கேட்டை | உறுகலை | ஆண்மான் |
| 17. மூலம் | நாய் | பெண்நாய் |
| 18. பூராடம் | முசு | ஆண்குரங்கு |
| 19. உத்திரம் | ஆ | மலட்டுப்பசு |
| 20. திருவோணம் | அம்முசு | பெண்குரங்கு |
| 21. அவிட்டம் | பெண் | பெண்சிங்கம் |
| 22. சதயம் | மா | பெட்டைக்குதிரை |
| 23. பூரட்டாதி | மகன் | (புருஷன்) ஆண்சிங்கம் |
| 24. உத்திரட்டாதி | கோ | பாற்பசு, பசு |
| 25. ரேவதி | உவா | பெண்யானை |
| 26. அசுவினி | மா | ஆண்குதிரை |
| 27. பரணி | தோல்உள | ஆண் யானை |

| நட்சத்திரம் | பட்சி | விளக்கம் |
|---|---|---|
| 1. கார்த்திகை | மயில் | மயில் |
| 2. ரோகிணி | ஆந்தை | ஆந்தை |
| 3. மிருகசீரிஷம் | ஊர்ப்புள | கோழி |
| 4. திருவாதிரை | அன்றில் | அன்றில் |
| 5. புநர்பூசம் | குறுகுஅனம் | அன்னம் |
| 6. பூசம் | நீர்க்கொடி | நீர்க்காக்கை |

| | | |
|---|---|---|
| 7. ஆயில்யம் | சிசில | சிச்சிலி |
| 8. மகம் | கழுகு | ஆண்கழுகு |
| 9. பூரம் | அது (கழுகு) | பெண் கழுகு |
| 10. உத்திரம் | சிள்வீடு | கிளுவை |
| 11. அஸ்தம் | கோவி | பருந்து |
| 12. சித்திரை | மரங்கு | மரங்கொத்தி |
| 13. சுவாதி | ஈ | தேனீ |
| 14. விசாகம் | அச்செவ்வாய்புள் | செங்குருவி |
| 15. அனுஷம் | கோரம் | சகோரம் (வானம்பாடி) |
| 16. கேட்டை | அறவளம் | சக்கரவாளம் |
| 17. மூலம் | போத்து | செம்போத்து |
| 18. பூராடம் | பகண்டை | கௌதாரி |
| 19. உத்திராடம் | கார்வீ | வலியான் |
| 20. திருவோணம் | நாரை | நாரை |
| 21. அவிட்டம் | மா | பொன்வண்டு |
| 22. சதயம் | அண்டம் | அண்டங்காக்கை |
| 23. பூரட்டாதி | உள்ளான் | உள்ளான் |
| 24. உத்திரட்டாதி | கோட்டான் | கோட்டான் |
| 25. ரேவதி | வல் | வல்லூறு |
| 26. அசுவினி | ஆளி | இராஜாளி |
| 27. பரணி | சுன்வாகன் | காக்கை |

அனம் - அன்னம் என்பதன் இடைக்குறை. கொடி - காக்கை. சிசிலி - சிச்சிலி என்பதன் இடைக்குறை. கோரம் சகோரம் என்பதன் முதற்குறை. அண்டம் - அண்டங் காக்கை என்பதன் சொற்குறை. வல் - வல்லூறு என்பதன் கடைக்குறை. ஆளி - இராஜாளி என்பதன் முதற்குறை.

குறிப்பு : இருபத்தேழு மிருகங்களில் உத்திராடம் என்ற





ஒரு நட்சத்திரத்தில் மலட்டுப்பசு என்பதைத் தவிர மற்ற இருபத்தாறு நட்சத்திரங்களும் ஆடு, ஆடு, பெண் ஆடு, ஆண் குதிரை, பெண் குதிரை இவைபோல் எல்லா மிருகங்களையும் பிரித்துள்ளார்.

இதன் பலன் - ஆண் மிருகத்தின் தன்மையையும், பெண் மிருகத்தின் தன்மையையும் கண்டுணர்ந்து பாவக காரகத்தை இணைத்து, ஜாதகரின் குணம், நடத்தை, செயல் இவைகளைக் கூற வேண்டும்.

ஒவ்வொரு மிருகத்தையும் நான்கு, நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

உதாரணமாக, அசுவினி. இது ஆண் குதிரை. இது மேஷ ராசியில் முதல் நட்சத்திரமாக இருக்கிறது. இந்த ராசி அதிபதி செவ்வாய் அசுவினியை நான்கு பாதமாகப் பிரித்தால், முதல் பாதம் மேஷம். இராசிநாதன் செவ்வாய். செவ்வாய் போர்வீரன். ஆகையால், இது போர்க்குதிரை. இரண்டாம் பாதம் ரிஷபத்தில் அம்சம். இதன் அதிபதி சுக்கிரன். இது வண்டியிழுக்கும் குதிரை. மூன்றாம் மாதம் மிதுனம். இதன் அதிபதி புதன். இது நாட்டியக் குதிரை. நாலாம் பாதம் கடகம். அதிபதி சந்திரன். கிரகங்களில் மிக வேகமாகச் செல்லும் கிரகம் சந்திரன். ஆகையால், இது பந்தயக் குதிரை.

முதல் பாத ஜாதகர் அரசாங்கத்துறையில் இருப்பார். இரண்டாம் பாதம் வாகன வசதி பெறுவார். மூன்றாம் பாதம் நடன நாட்டிய விருப்பமுடையவர். நாலாம் பாதம் பந்தய விருப்பமுடையவர்.

இதேபோல் மற்ற மிருகங்களையும் நான்கு வகையாக்கி பலன் கூறவும்.

பறவைகளுக்கு அதன் குணம், செயல், நடைமுறை இவைகளை ஜாதகர் மேல் ஏற்றிக் கூறவும்.

**நட்சத்திரத்தரு - நட்சத்திர கணம்**

கனல்நேர் அத்தி, சம்பு, கருங்காலி, செங்கால், கண், கோ,
காப்புனை, ஆல், பலசு, அலர், ஆர், வில்வம், மரும், கரியூண்,
வனகேசம், விட்டில், மரா, வஞ்சி, பலா, எருக்கு,
வனி, நீபம், தேமா, வேம்பு, இலுப்பை, சிரை, மலகம்,
எனல்ஆம்; முப்பூரமும், முக்குளம், பரணி, பார், யாழ்,
இவை மனுட கணம்; - ஓணம், ஈறு, தை, மா. விது, வேய்,
பனை, சோதி, அத்தம் - இவை, தேவகணம்; - மற்று அப்
பம் அவுண கணம் ஆம்; கும்பம் வருமா முனியே!

இக்கவியில் தரு - அதாவது மரங்களின் பெயர்களைக் கூறியுள்ளார்.

கனல்நேர் - எனத் தொடங்கி மலகம் - எனல் ஆம் என முடித்துள்ளார் கனல் - கார்த்திகை நட்சத்திரம். நேர் - முதலா, முதற்கொண்டு, தொடங்கி எனப் பொருள்தரும். அதாவது, கனல்நேர் கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து பரணி நட்சத்திரம் முடிய என்று இதன் சுருக்க விளக்கமாகும்.

கணத்தைக் கூறுவதற்கு முப்பூரமும் எனத் தொடங்கி யாழ் இவை மனுட கணம் என்றும், ஓணம் எனத் தொடங்கி, அத்தம் இவை தேவகணம் என்றும், மற்று எனத் தொடங்கி பம் அவுணகணம் என்றும் கூறியுள்ளார்.

தரு - அதாவது மரங்களின் பெயர்களைப் பற்றிக் கவனிப்போம்.

| நட்சத்திரம் | தரு-மரம் | விளக்கம் |
|---|---|---|
| கார்த்திகை | அத்தி | அத்தி |
| ரோகிணி | சம்பு | நாவல் |
| மிருகசீரிஷம் | கருங்கால | கருங்காலி |
| திருவாதிரை | செங்கால் | செங்காலி |
| புனர்பூசம் | கண் | மூங்கில் |
| பூசம் | கோ | அரசு |
| ஆயில்யம் | காப்புனை | புன்னை |
| மகம் | ஆல் | ஆல் |
| பூரம் | பலசு | பலாசு |
| உத்திரம் | அலர் | அலரி |
| அஸ்தம் | ஆர் | ஆத்தி |
| சித்திரை | வில்வம் | வில்வம் |
| சுவாதி | மரும் | மருது, மருதம் |
| விசாகம் | கரியூண் | விளா |
| அனுஷம் | வனகேசம் | மகிழ் |
| கேட்டை | விட்டில் | பிராய், பராய் |
| மூலம் | மரா | மரா |
| பூராடம் | வஞ்சி | வஞ்சி |
| உத்திராடம் | பலா | பலா |
| திருவோணம் | எருக்கு | எருக்கு |
| அவிட்டம் | வனி | வன்னி |
| சதயம் | நீபம் | கடம்பு |
| பூரட்டாதி | தேமா | தேமா |
| உத்திரட்டாதி | வேம்பு | வேம்பு |
| ரேவதி | இலுப்பை | இலுப்பை |
| அசுவினி | சிரை | காஞ்சிரை, எட்டி |
| பரணி | மலகம் | நெல்லி |





செங்கால் - இகர ஈறு குறை; காசோலை - காப்புனை - சோலைப்புன்னை; புனை - புன்னையின் இடைக்குறை; பலசு - செய்யுள் நோக்கி லா, ல ஆயிற்று. அலர், அலரி என்பதன் ஈறுகுறை; வனி - வன்னி என்பதன் இடைக்குறை; சிரை எனப்து காஞ்சிரை என்பதன் முதற்குறை.

**அடுத்து கணவிபரம்**

முப்பூரமும் - பூரம், பூராடம், பூரட்டாதி ஆகிய மூன்றும்

முக்குளம் - உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி ஆகிய மூன்றும்

பரணி - பரணி, பார் - ரோகிணி, யாழ் - திருவாதிரை ஆகிய மூன்றும் ஆக ஒன்பது நட்சத்திரங்கள் மானுட கணம்.

ஓணம் - திருவோணம், ஈறு - ரேவதி, தை- பூசம், மா - அசுவினி, விது - மிருகசீரிஷம், வேய் - புனர்பூசம், பனை - அனுஷம், சோதி - சுவாதி, அத்தம் - அஸ்தம் ஆகிய ஒன்பதும் தேவகணம்.

மற்று அதாவது கார்த்திகை, ஆயில்யம், மகம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், அவிட்டம், சதயம் ஆகிய ஒன்பதும் அசுர கணம்.

குறிப்பு : தரு - இது மரம். இருபத்தேழு நட்சத்திரங்களுக்கு, இருபத்தேழு மரங்கள் கூறப்பட்டுள்ளன. இந்த மரத்தின் வேர், பட்டை, பூ இல்லை, காம்பு, பழம், கொட்டை இவைகளின் தன்மைகளை பாவக காரகப்படி ஜாதகரின் செயல், குணம் இவைகளைக் கூறலாம்.

உதாரணமாக உத்திரட்டாதி நட்சத்திரம் வேம்பு. இது கசப்புத் தன்மையுடையது. ஆனால் இதன் பாகங்கள் ஒவ்வொன்றும் மருந்துக்குப் பயன்படும்.

ஆகையால், ஜாதகருக்கு சிறிதளவேனும் மருத்துவம் தெரியும். ஜாதகரின் வாய்ச்சொல் விஷயம் புரியாதவர்களுக்கு வேம்பு கசப்பாயிருப்பதுபோல் இவர் சொல்லும் கசக்கும். பின்னர் நன்மை என்ன என உணருவார்.

இதனால் எழுந்த ஒரு பழமொழியே "மூத்தோர் சொல் வார்த்தையும் முதிர் நெல்லிக்காயும் முன்னே கசக்கும் பின்னே இனிக்கும்" என்பது.

நெல்லி பரணி நட்சத்திரம், அவர்களுக்கும் சிறிது





வைத்தியம் தெரியும். உணவு வகை ருசியில் கெட்டிக்காரராக இருப்பார். அவர்களும் பிறருக்கு அறிவு சொல்வதில் சமர்த்தராக இருப்பார். அதைக் கேட்பவர் முதலில் அலட்சியப் படுத்துவார். பின்னர் வருந்துவார்.

இன்னொன்று கார்த்திகை. இது அத்திமரம். அத்தி பூவாமல் காய்க்கும் தன்மையுள்ளது.

ஆகையால், இந்த நட்சத்திரக்காரர் நன்மையாயினும் தீமையாயினும் சொல்லாமல் செய்வார்.

பலா - உத்திரம். இந்த நட்சத்திரக்காரர்களும் அப்படிப் பட்டவரேயாவார். காரணம் பலாவும் பூத்துக் காய்ப்பதில்லை.

மற்றொன்று காஞ்சிரை, அதாவது எட்டிமரம். இம்மரத்தில் பழம் பழுத்திருந்தால் யாருக்கும் உதவாது. அவ்வளவு கசப்பு. தின்னத் தகாத கசப்பு. இது அசுவினி நட்சத்திரம்.

இந்த ஜாதகரிடம் எவ்வளவு பணம் இருந்தாலும் நல்லோருக்குப் பயன்படாது. இதன் காரணத்தில் எழுந்த பழமொழியே,

"எட்டி பழுத்தென்ன? ஈயாதார் வாழ்ந்தென்ன?" என்பது.

இதுபோலவே மற்ற நட்சத்திரங்களுக்கும் மரங்களின் தன்மைகளை இணைத்துப் பாவககாரகமும் சேர்த்துப் பலன் கூறுங்கள்.

குறிப்பு : இங்கு குறிப்பிட்டுள்ள கணம் என்பது மூன்று. அவை. தேவம், மானுடம், அசுரம்.

இவை உண்மையான, தேவ, மனித, அசுரர் அல்ல. இவை தொழிலின் தன்மை பற்றியது. அதாவது,

தேவம் - லகுவாகத் தொழில் செய்வது

மானுடம் - தொழிலின் திறமை காட்டுவது

அசுரம் - கடினமான உழைப்பிற்கு அஞ்சாதவர்

இந்தக் கணம் எந்தப் பாவகத்தில் இருக்கிறது என அறிந்து; அந்த பாவகத்துக்குரிய செயலை இந்த மூன்று வகைப்படுத்திக் கூறவும்.

அடுத்து கணவிபரம்

முப்பூரமும் - பூரம், பூராடம், பூரட்டாதி ஆகிய மூன்றும்

முக்குளம் - உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி ஆகிய மூன்றும்

பரணி - பரணி, பார் - ரோகிணி, யாழ் - திருவாதிரை ஆகிய மூன்றும் ஆக ஒன்பது நட்சத்திரங்கள் மானுட கணம்.

ஓணம் - திருவோணம், ஈறு - ரேவதி, தை- பூசம், மா - அசுவினி, விது - மிருகசீரிஷம், வேய் - புனர்பூசம், பனை - அனுஷம், சோதி - சுவாதி, அத்தம் - அஸ்தம் ஆகிய ஒன்பதும் தேவகணம்.

மற்று அதாவது கார்த்திகை, ஆயில்யம், மகம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், அவிட்டம், சதயம் ஆகிய ஒன்பதும் அசுர கணம்.

குறிப்பு : தரு - இது மரம். இருபத்தேழு நட்சத்திரங்களுக்கு, இருபத்தேழு மரங்கள் கூறப்பட்டுள்ளன. இந்த மரத்தின் வேர், பட்டை, பூ இலை, காம்பு, பழம், கொட்டை இவைகளின் தன்மைகளை பாவக காரகப்படி ஜாதகரின் செயல், குணம் இவைகளைக் கூறலாம்.

உதாரணமாக உத்திரட்டாதி நட்சத்திரம் வேம்பு. இது கசப்புத் தன்மையுடையது. ஆனால் இதன் பாகங்கள் ஒவ்வொன்றும் மருந்துக்குப் பயன்படும்.

ஆகையால், ஜாதகருக்கு சிறிதளவேனும் மருத்துவம் தெரியும். ஜாதகரின் வாய்ச்சொல் விஷயம் புரியாதவர்களுக்கு வேம்பு கசப்பாயிருப்பதுபோல் இவர் சொல்லும் கசக்கும். பின்னர் நன்மை என்ன என உணருவார்.

இதனால் எழுந்த ஒரு பழமொழியே "மூத்தோர் சொல் வார்த்தையும் முதிர் நெல்லிக்காயும் முன்னே கசக்கும் பின்னே இனிக்கும்" என்பது.

நெல்லி பரணி நட்சத்திரம், அவர்களுக்கும் சிறிது





வைத்தியம் தெரியும். உணவு வகை ருசியில் கெட்டிக்காரராக இருப்பார். அவர்களும் பிறருக்கு அறிவு சொல்வதில் சமர்த்தராக இருப்பார். அதைக் கேட்பவர் முதலில் அலட்சியப் படுத்துவார். பின்னர் வருந்துவார்.

இன்னொன்று கார்த்திகை. இது அத்திமரம். அத்தி பூவாமல் காய்க்கும் தன்மையுள்ளது.

ஆகையால், இந்த நட்சத்திரக்காரர் நன்மையாயினும் தீமையாயினும் சொல்லாமல் செய்வார்.

பலா - உத்திரம். இந்த நட்சத்திரக்காரர்களும் அப்படிப் பட்டவரேயாவார். காரணம் பலாவும் பூத்துக் காய்ப்பதில்லை.

மற்றொன்று காஞ்சிரை, அதாவது எட்டிமரம். இம்மரத்தில் பழம் பழுத்திருந்தால் யாருக்கும் உதவாது. அவ்வளவு கசப்பு. தின்னத் தகாத கசப்பு. இது அசுவினி நட்சத்திரம்.

இந்த ஜாதகரிடம் எவ்வளவு பணம் இருந்தாலும் நல்லோருக்குப் பயன்படாது. இதன் காரணத்தில் எழுந்த பழமொழியே,

"எட்டி பழுத்தென்ன? ஈயாதார் வாழ்ந்தென்ன?" என்பது.

இதுபோலவே மற்ற நட்சத்திரங்களுக்கும் மரங்களின் தன்மைகளை இணைத்துப் பாவககாரகமும் சேர்த்துப் பலன் கூறுங்கள்.

குறிப்பு : இங்கு குறிப்பிட்டுள்ள கணம் என்பது மூன்று, அவை. தேவம், மானுடம், அசுரம்.

இவை உண்மையான, தேவ, மனித, அசுரர் அல்ல. இவை தொழிலின் தன்மை பற்றியது. அதாவது,

தேவம் - லகுவாகத் தொழில் செய்வது

மானுடம் - தொழிலின் திறமை காட்டுவது

அசுரம் - கடினமான உழைப்பிற்கு அஞ்சாதவர்

இந்தக் கணம் எந்தப் பாவகத்தில் இருக்கிறது என அறிந்து அந்த பாவகத்துக்குரிய செயலை இந்த மூன்று வகைப்படுத்திக் கூறவும்.

**நட்சத்திர தேவதை, ஆண், பெண், அலி நட்சத்திரம்**

மாமுதல்நேர் வாணி, துர்க்கை, வன்னி, அயன், மதி, சோ
மன், சுரம், பொன், பணி, சிதன், தாய், ஐயன், மலர்க்கோ, வான்
நேமகர்மா, மா, குகன், கால், நிருபன், நிசிசரர், நீர்,
நெடும்புழைக் கையான், மால், இந்ராணி, எமன், நிதிமன்,
காமதுகையான், அசிதன், ஆம், முறம், ஈறு, ஓணம்,
களிறு, புள், புல், வேய், முடி, யாழ், கவுரி, கனல், கறவை,
ஆம்; இவைபெண்; செக்கு, இரவோன், அலி; ஆண் மற்று என்ன
அகத்தியனுக்கு உரைத்தனன் நீறு அணிந்தவன் நந்தனனே (4)

இக்கவியில் மாமுதல் நேர்வாணி எனத் தொடங்கி அசிதன் ஆம் என்று நட்சத்திர தேவதைகளின் நாமங்களைக் கூறியுள்ளார்.

முறம் எனத் தொடங்கி, கறவை ஆம் என பெண் நட்சத்திரங்களின் நாமங்களைக் கூறியுள்ளார்.

செக்கு எனத் தொடங்கி, இரவோன் என அலி நட்சத்திரங்களின் நாமங்களைக் கூறியுள்ளார்.

ஆண் மற்று என்ன, அதாவது பெண் நட்சத்திரங்களும், அலி நட்சத்திரங்களும் அல்லாத நட்சத்திரங்கள் என சுருக்கப் படுத்தியுள்ளார். அவையே ஆண் நட்சத்திரங்களாகும்.

ஐகாயால், நட்சத்திர தேவதைகளைக் கவனிப்போம்

| நட்சத்திரம் | தேவதை | விளக்கம் |
|---|---|---|
| 1. அசுவினி | வாணி | சரஸ்வதி |
| 2. பவணி | துர்க்கை | துர்க்கை |
| 3. கார்த்திகை | வன்னி | அக்கினி |
| 4. ரோகிணி | அயன் | பிரம்மா |
| 5. மிருகசீரிஷம் | மதி | சந்திரன் |
| 6. திருவாதிரை | சோமன் | உருத்திரன் |
| 7. புனர்பூசம் | சுரர் | தேவர்கள் |
| 8. பூசம் | பொன் | வியாழன் |
| 9. ஆயில்யம் | பணி | ஆதிசேஷன் |
| 10. மகம் | சிதன் | சுக்கிரன் |
| 11. பூரம் | தாய் | பார்வதி |
| 12. உத்திரம் | ஐயன் | சாஸ்தா |
| 13. அஸ்தம் | மலர்கோ | சூரியன் |
| 14. சித்திரை | வான்நேமகர்மா | விஸ்வகர்மா |
| 15. சுவாதி | மா | லட்சுமி |
| 16. விசாகம் | குகன் | சுப்ரமண்யர் |
| 17. அனுஷம் | கால் | வாயு |
| 18. கேட்டை | நிருபன் | தேவேந்திரன் |
| 19. மூலம் | நிசிசரர் | அசுரர் |
| 20. பூராடம் | நீர் | வருணன் |
| 21. உத்திராடம் | நெடும்புழைக்கையான் | விநாயகர் |
| 22. திருவோணம் | மால் | விஷ்ணு |
| 23. அவிட்டம் | இந்த்ராணி | இந்திராணி |
| 24. சதயம் | எமன் | எமன் |
| 25. பூரட்டாதி | நிதிமன் | குபேரன் |
| 26. உத்திரட்டாதி | காமதுகையான் | காமதேனு |
| 27. ரேவதி | அசிதன் | சனி |



மா முதல் நேர் என்றால், அசுவினி நட்சத்திரம் முதல் ரேவதி நட்சத்திரம் முடிய என்று பொருள்.

நிசி என்றால் இரவு; சரர் என்றால் சஞ்சரிப்பவர். நிசிசரர் என்றால் இரவில் சஞ்சரிப்பவர். இவர்களே அசுரர். இவர்களுக்கு அவுணர், சுக்கிர சீடர், தருவர், தநுசர், தானவர், திதிசுதர், திதிமைந்தர், தைதேயர், தைத்தியர், நிசாசரர், பூர்வ

தேவர், வானோர் மாற்றலர், தண்டகர், மேனிகரப்போர், கார்வண்ணர், மாயை மைந்தர் எனவும் பரியாயப் பெயர்கள் உண்டு.

மலர்க்கோ - மலரை மலர்விப்பவன் குறிப்பாக தாமரையைப் பகற்பொழுதில் மலர்விப்பவன். இவனே சூரியன்.

நெடும்புழைக்கை - துதிக்கை - இதை உடையவன் நெடும்புழைக் கையான். அதாவது, துதிக்கையைக் கையாக உடையவன். விநாயகர்.

நிதி - பொருள், தனம், திரவியம், சம்பத்து, செல்வம் எனப்படும்.

மன் - மன்னன் என்பதன் கடைக்குறை. நிதிமன் - செல்வத்தை உடைய அரசன் குபேரன்.

இந்த குபேரனுக்கு - அரன் தோழன் அளகையான், இயக்கர் கோமான், இயக்கன், இருநிதிக் கிழவன், கின்னரர் பிரான், தனதன், தனபதி, நார்பிரான், நரவாரகனன், நிதிக்கிழவன், நிதியோன், நிறை செல்வன், மங்கலன், புஷ்பக விமானன், புருஷ வாகனன், மந்திரி, மாகதன், வடதிசைத் தலைவன், வைச்சிரவணன் என்னும் பரியாயப் பெயர்கள் உண்டு.

காமதை, கர்மத்து, காமத்துகை - என்பன காமதேனுவின் பெயர். இந்தக் கவியில், காமத்துகையான் என்பது தகர மெய் நீங்கி, காமதுகையான் எனக் கூறியுள்ளார். இது சொல்லின் இனிமை நோக்கியும், கவியின் எதுகை நோக்கியும் என்க.

இதுவே தேனு, சுரபி, கபிலை, பாற்பசு எனப்படும்.

சிதன் - அசிதனுக்கு எதிர்ப்பதம். வெண்மை. அசிதம் - கருமை, சிதன், வெண்மை நிறமுடையவன். சுக்கிரன்.

அசிதன் - கருமை நிறமுடையவன் - சனி. இவ்விரண்டும் நிறத்தின் காரணப் பெயர்களாகும்.

வான்நேமகர்மா - இது மூன்று சொற்கள் கூடிய ஒரு சொல். அதாவது வான் - வானவர்; வானோர் என்பதன்





சுருக்கம். நேமம் - நியமம், நிருமிப்பு - ஒன்றை உண்டாக்க நிருடமித்தல். கர்மார் - செய்யும் தொழில், காமா - தொழில் செய்பவன். ஆகவே, வானவர்களால் நியமிக்கப்பட்ட தொழில் செய்பவன் என்று பொருள். வானவர்களால் நியமிக்கப்படும் தொழில் கட்டடக் கலையாகும். இந்தக் கட்டடக் கலையைச் செய்பவன் தேவதச்சன், சிற்ப சாஸ்திரி. இவன்தான் சித்திரை நட்சத்திர தேவதை விஸ்வகர்மா.

அடுத்து, பெண் நட்சத்திரங்கள்

அவை : முறம் - விசாகம்; ஈறு - ரேவதி; ஓணம் - திருவோணம்; களிறு - அஸ்தம், புள் - அவிட்டம்; புல் - அனுஷம்; வேய் - புனர்பூசம்; முடி - உத்திராடம்; யாழ் - திருவாதிரை, கவுரி - பூரம்; கனல் - கார்த்திகை; கறவை - உத்திரட்டாதி, ஆக இவை பன்னிரண்டும் பெண் நட்சத்திரங்களாகும்.

செக்கு - சதயம், இரவோன்; மிருகசீரிஷம் - இவையிரண்டும் ஆணுமல்லாத, பெண்ணுமல்லாத நட்சத்திரங்கள். அதாவது, அலி நட்சத்திரம் எனப்படும்.

ஆண்மற்று - அதாவது, பெண்ணுக்கும், அலிக்கும் கூறிய நட்சத்திரங்கள் அல்லாத மற்ற நட்சத்திரங்கள் என்பதன் சுருக்கம்.

அவை - அசுவினி, பரணி, ரோகிணி, பூசம், ஆயில்யம், மகம், உத்திரம், சித்திரை, சோதி, கேட்டை, மூலம், பூராடம், பூரட்டாதி ஆகிய இந்தப் பதின்மூன்றும் ஆண் நட்சத்திரங்களாகும்.

குறிப்பு : இங்கு நட்சத்திரங்களுக்குக் கூறப்பட்ட தெய்வங்களின் தன்மைகளை எடுத்துக் கொண்டு, பாவக காரகமாக்கிப் பலன் கூறவும்.

உதாரணமாக - அசுவினி - சரஸ்வதி இது கல்விக்குரிய தெய்வம்.

ஆகையால், ஜாதகரின் கல்வியைப் பற்றிக் கூறுக.

ரோகிணி - பிரம்மா, படைக்கும் கடவுள். ஜாதகர் ஏதேனும் ஒரு பொருளை உண்டாக்குவார்.

திருவாதிரை - உருத்திரன். இது அழிக்கும் கடவுள். ஜாதகர் ஒன்றையழித்து ஒரு புதுமையை உண்டாக்குவார்.

உத்திராடம் - விநாயகர். ஜாதகர் சொற்சாதுரியத்தில் காரியத்தை சுலமாக முடிப்பார்.

பூரம் - பார்வதி. ஜாதகர் பெற்ற தாயாரால் புறக்கணிக்கப் படுவார்.

இதேபோல் மற்ற தேவதைகளின் தன்மைகளை ஜாதகர் மேலே ஏற்றிப் பலன் கூறுக.

அடுத்து ஆண் நட்சத்திரம்.

ஜாதகருக்கு ஆண் தன்மையையும், பெண் நட்சத்திரம் பெண் தன்மையையும் உண்டாக்கும்.

அலி நட்சத்திரம் இரண்டும் அற்ற தன்மையை உண்டாக்கும்.

குறிப்பு : ஆணையும், பெண்ணையும் நந்நான்கு வகைப் படுத்துவோம்.

1. ஆண் - ஆண் உறுப்புடன் பிறத்தல்
2. ஆண்மை - ஆணுக்குள்ள வீரம்
3. ஆண்மையில் ஆண்மை - அதிக பராக்கிரமுள்ளவன்
4. ஆண்மையில் பெண்மை - ஆணாகப் பிறந்தும் பெண் தன்மை படைத்தவன்

1. பெண் - பெண் உறுப்புடன் பிறத்தல்
2. பெண்மை - பெண்ணுக்குள்ள குணம் படைத்தவள்
3. பெண்மையில் பெண்மை - பெண் தன்மையை அணிகலன்களாகப் பூண்டவள்
4. பெண்மையில் ஆண்மை - பெண்ணாகப் பிறந்தும்





ஆண் தன்மையோடு இருப்பவள்.

அலி - குணத்தில் ஆண் தன்மையும், பெண் தன்மையும் பொருந்தியிருக்கும்.

அசுவினி ஆண் நட்சத்திரம். இதில் ஆண் பிறந்தால் ஆண் தன்மையோடு இருப்பார். இதில் பெண் பிறந்தால் ஆண்தன்மை கலந்திருக்கும்.

உத்திரட்டாதி பெண் நட்சத்திரத்தில் இதில் பெண் பிறந்தால் பெண் தன்மை நிறைந்திருக்கும். ஆண் பிறந்தால் பெண் தன்மை கலந்திருக்கும். இதேபோல் மற்ற நட்சத்திரங் களுக்கு ஆண், பெண், அலி என்பதை உணர்ந்து பலன் கூறுக.

நட்சத்திர விட கடிகை

நீர், பரணி, முரசு இவைக்கு எண் மூன்று; இரலைக்கு ஐம்பான்;
நெடும்பணிக்கு எண்ணான்கு; உமை, தார், நீவி, முடிக்கு இருபான்;
பார் ஒரு நாற்பது; ரவிக்கு ஈர்பத்திரண்டு; அவ்இறைக்கு ஓர்
பதினொன்றோடு எழு மூன்று; அப் புரட்டையில் பற்றுவது எண்
ஈர்உளது; உத்திரம், சதயம், ஈரொன்பான்; குருக்கு
இருபது, ஐம்பத்து ஆறு; எழிலோர், வேய், அறுமீன், ஈறுக்கு
ஓர் ஒருமுப்பான்; ஓணம், புள், புல், ஒருபது; மற்று
உள்ளவைக்கு ஈரேழ்; மேல் நஞ்சுறும் கனல் நான்கு உளவே (5)

இக்கவி விட கடிகை (விஷகடிகை)யைக் குறிக்கிறது. இன்ன இன்ன நட்சத்திரங்களுக்கு இத்தனை நாழிகைக்கு மேல் நான்கு நாழிகை விஷமிருக்கும் என்று பொருள்.

இதைக் கவனிப்போம்.

நீர் - பூராடம், பரணி - பரணி, முரசு - உத்திரட்டாதி. இந்த மூன்று நட்சத்திரங்களுக்கு எண் மூன்று.

(8 x 3 = 24) 24

இரலைக்கு - அசுபதிக்கு ஐம்பான் 50

நெடும்பணிக்கு - ஆயில்யத்துக்கு
எண்ணான்கு (8 x 4 = 32) 32
உமை - பூரம், தார் - பூசம்
நீவி - சித்திரை, முடி - உத்திரம் ஆகிய நான்குக்கு - இருபான் (2 x 10 = 20) 20
பார் - ரோகிணி - ஒரு நாற்பது 40
ரவிக்கு - அஸ்தத்திற்கு ஈர்பத்திரண்டு (22) 22
இறைக்கு - திருவாதிரைக்கு
பதினொன்றோடு, எழுமூன்று 11 - 21
புரட்டை - பூரட்டாதிக்கு
எண்ஈர் (8 + 2 = 16) 16
உத்திரம், சதயம் ஈரொன்பான் (2x9 = 18) 18
குருக்கு - மூலத்துக்கு, இருபது, ஐம்பத்தாறு 20-56
ஏர்-மகம், வேய் - புனர்பூசம் அறுமீன் - கார்த்திகை, ஈறு - ரேவதிக்கு முப்பான் (3 x 10 = 30) 30
ஓணம் - திருவோணம், புள் - அவிட்டம், புல் - அனுஷம், இவற்றிற்கு ஒரு பது (10) 10
மற்று - அதாவது கூறியுள்ள நட்சத்திரங்கள் அல்லாத மற்ற நட்சத்திரங்கள் :
அவை - மிருகசீரிஷம், சோதி, விசாகம், கேட்டைக்கு ஈரேழ் (2x7 = 14) 14

இக்கவியில் எண்களைக் கூறியிருக்கும் முறை - எண் மூன்று (8x3 = 24) ஐம்பான் - ஐம்பது (50), எண்ணான்கு - (8x4 = 32), இருபான் - இருபது (20), ஈர்பத்திரண்டு - 22, எழு மூன்று (7x3 = 21), எண்ஈர் (8x2 = 16), ஈரொன்பான் (2x9 = 18), முப்பான் - முப்பது 30, பது - பத்து என்பதன் இடைக்குறை - 10, ஈரேழ் (2x7 = 14)

இந்த விஷகடிகையை அசுவினி முதல் ரேவதி ஈறாக





வரிசைப்படுத்திப் பார்ப்போம். இதில் பல நுணுக்க சிந்தனைகளுக்கும், பலன்களுக்கும் இடமுள்ளன. அதையும் கவனிப்போம்.

| நட்சத்திரம் | **விஷகடிக நாழிகை - பாதம், நவாம்ச பாதம், இராசி அம்சப் பெயர்** | |
|---|---|---|
| அசுவினி | 50-54 - 4 | |
| | சுகாம்சம் - கடகம் | 4 |
| பரணி | 24-28 - 2 | |
| | ரோகாம்சம் - கன்னி | 6 |
| கார்த்திகை | 30-34-3 | |
| | ராஜ்யாம்சம் - கும்பம் | 10 |
| ரோகிணி | 40-44-3 | |
| | தனாம்சம் - மிதுனம் | 2 |
| மிருகசீரிஷம் | 14-18 = 1-2 | |
| | சகாம்சம் - சிங்கம் | 4 |
| | பிரபுவாம்சம் - கன்னி | 5 |
| திருவாதிரை | 11-15, 21-25 இணையாம்சம் தனசு | 7 |
| | 1-2 அவமிருத்தாம்சம் மகரம் | 8 |
| புனர்பூசம் | 30-34 - 3 | |
| | வர்க்கோத்தமம் - மிதுனம் | 1 |
| பூசம் | 20-24 - 2 | |
| | தனாம்சம் - சிம்மம் | 2 |
| ஆயில்யம் | 32-36 - 3 | |
| | அவமிருத்தாம்சம், கும்பம் | 8 |
| மகம் | 30-34 - 3 | |
| | லாபாம்சம் மிதுனம் | 11 |
| பூரம் | 20-24 - 2 | |
| | தனாம்சம் - சிம்மம் | 2 |

| | | |
|---|---|---|
| உத்திரம் | 18-22 - 2 | |
| | பிரபுவாம்சம் மகரம் | 5 |
| அஸ்தம் | 22-26-2 | |
| | பாக்யாம்சம் - ரிஷபம் | 9 |
| சித்திரை | 20-24 - 2 | |
| | வர்க்கோத்தமம் - கன்னி | 1 |
| சுவாதி | 14-18 = 1-2 | |
| | விக்ரமாம்சம் - தனுசு | 3 |
| | சுகாம்சம் - மகரம் | 4 |
| விசாகம் | 14-18 - 1 -2 | |
| | இணையாம்சம் - மேஷம் | 7 |
| | அவமிருத்தாம்சம் - ரிஷபம் | 8 |
| அனுஷம் | 10 + 1 4 1 | |
| | ராஜ்யாம்சம் - சிம்மம் | 10 |
| கேட்டை | 14-18 - 1 -2 | |
| | தனாம்சம் - தனுசு | 2 |
| | விக்ரமாம்சம் - மகரம் | 3 |
| மூலம் | 20-24, 56-60 | |
| | ரோகாம்சம் - ரிஷபம் | 6 |
| | அவமிருத்தாம்சம் - கடகம் | 8 |
| பூராடம் | 24-28 - 2 | |
| | ராஜ்யாம்சம் - கன்னி | 10 |
| உத்திராடம் | 20-24 - 2 | |
| | வர்க்கோத்தமம் - மகரம் | 1 |
| திருவோணம் | 10-14 - 1 | |
| | சுகாம்சம் - மேஷம் | 4 |





| | | |
|---|---|---|
| அவிட்டம் | 10-14 - 1 | |
| | அவமிருத்தாம்சம் - சிம்மம் | 8 |
| சதயம் | 18-22-2 | |
| | விரையாம்சம் - மகரம் | 12 |
| பூரட்டாதி | 16-20 - 2 | |
| | சுகாம்சம் - ரிஷபம் | 4 |
| உத்திரட்டாதி | 24-28 - 2 | |
| | இணையாம்சம் - கன்னி | 7 |
| ரேவதி | 30-3 - 3 | |
| | விரையாம்சம் - கும்பம் | 12 |

விடகடிகை என்பது குறித்த நேரம் முதல் குறித்த நேரம் வரை தீமை தருவது என்பது பொருள்.

ஒரு நாழிகை 24 நிமிஷம். 4 நாழிகை 96 நிமிஷம். அதாவது ஒரு மணி நேரமும் 36 நிமிஷமும் கொண்ட கால அளவு.

உதாரணமாக, அஸ்தத்தின் விஷகடிகையைக் கவனிப்போம். அஸ்தம் ஆரம்பித்து இருபத்திரண்டு நாழிகைக்கு மேல் இருபத்தாறு நாழிகை வரை விடகடிகை நேரம் 22 நாழிகை என்பது 8 மணி நேரமும் 48 நிமிஷமும் ஆகிறது. அஸ்தம் காலை எட்டு மணிக்கு ஆரம்பித்ததாக வைத்துக் கொள்வோம். அத்துடன் 8 மணிநேரத்தையும் 48 நிமிஷத்தையும் கூட்டினால் மாலை 4 மணி 48 நிமிஷத்துக்கு மேல் மாலை 6 மணி 24 நிமிஷம் வரை விடகடிகை. இந்த நேரத்தில், ஆயுதங்களைக் கையாளுதல், முகக்ஷவரம் செய்து கொள்ளல், அடுப்பங்கரையில் வேலை செய்வது ஆகியவற்றில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இங்கு ஒரு வினா எழலாம். அதாவது, ஜோதிடக்கலை தெரிந்தவர்களே இப்படி நடந்து கொள்ள முடியாதே, அப்படியிருக்க இந்த நிலையின் அரிச்சுவடியே தெரியாதவர்கள்

என்ன செய்வார்கள்? ஒன்றும் செய்ய முடியாதுதான். குறிப்பாக திருமண முகூர்த்தம், ஒரு நல்ல பிரயாணம், ஒரு நல்ல காரியம் தொடங்குவதற்கு இந்த விடகடிகை நேரத்தை வாடிக்கையாளர்களுக்கும் கூற வேண்டும். இதைச் செய்யலாம் அல்லவா? மற்ற நட்சத்திரங்களுக்கும் இவ்வாறே கணக்கிட்டுப் புரிந்து கொள்ளுங்கள்.

**நட்சத்திர சத்துரு, மித்துரு, பஞ்ச பட்ச கண்டாந்த நட்சத்திரம் விதவை நட்சத்திரம்**

நான்கு எனும் மீன், தார், ஊழல், பார், நாவாய், மால், அரசன்

நக்கன் -இவை நட்பு அவைக்கு ஆம்; மற்றதற்கு ஆம் வான்கோன்

வான்சனி, ஈறு - இம்மூன்றுக்கு ஒன்றினுக்கு ஓர் நான்காய்

வர, இடம் நேர் பரணி முதல் மற்று அவைக்குப் பகை ஆம்

ஆன்கடவுள் நேர் ஆறு, ஐந்து, ஆறு, ஐந்து, ஐந்து - ஆந்தை

அக்கம் ஒன்று, ஆயுதக்கால், தோல், கை, வலியன், ஆதம்,

ஊன்-கள் உணவோர் கோணத்து ஆதி அதற்கு ஈறில்

உறுங்கால் கண்டாந்தம்; விண்ணோர் தார் - விதவைக்கு உளதே (8)

இதன் பொருள் :

1. இக்கவியில் நான்கு எனும் மீன் எனத் தொடங்கி, நக்கன் - நட்பு அவைக்காம் என முடித்துள்ளார். இது மித்துரு. இதுவே மித்திரம் - நட்பு எனவும்படும்.

2. மற்றதற்கு ஆம் எனத் தொடங்கி இடம் நேர் பரணி முதல் என முடித்துள்ளார். இது சத்துரு.

3. மற்று அவைக்குப் பகை ஆம் என ஒரே வரியில் முடித்துள்ளார். இது மூன்று நட்சத்திரங்கள் உள்ள பகை.

4. ஆன் கடவுள் நேர் என ஆரம்பித்து வலியன் என முடித்துள்ளார்.

5. ஊன்கள் என ஆரம்பித்து உறுங்கால் என முடித்துள்ளார்.





6. விண்ணோர் என ஆரம்பித்து தார் விதவைக்கு உளதே என முடித்துள்ளார். ஆக ஆறுவகையில் விபரங்களைக் கூறியுள்ளார். இதைக் கவனிப்போம்.

நான்கு எனும் மீன் - மூலம், தார் - பூசம், ஊழ் - அஸ்தம், பார் - ரோகிணி, நாவாய் - ரேவதி; மால் - திருவோணம், அரசன் - உத்திரட்டாதி; நக்கன் - திருவாதிரை.

இவை நட்புக்கு அவை ஆம். இந்த எட்டு நட்சத்திரங்களும் தமக்குள் ஒன்றுக்கொன்று மித்திரம் (மித்திரம் - நட்பு).

இங்கு நான்கு எனும் மீன், அதாவது மூலம் எனும் நட்சத்திரத்துக்கு ஒரு விளக்கம் கவனியுங்கள்.

குறிப்பு : 1. நான்கு எனும் மீன் அதாவது, நான்கு எண்ணிக்கை கொண்ட நட்சத்திரம். இது நட்சத்திர வரிசையில் (தொகையில் மொத்தம் பதினைந்து நட்சத்திரங்கள் உள்ளன. இதை விபரமாக இருபதாவது கவியில் காண்பீர்கள். இந்தப் பதினைந்தாவன - பூசம், ஆயில்யம், மகம், பூரம், உத்திரம், அஸ்தம் என வரிசையாக ஆறு நட்சத்திரங்களும், பின் மூன்று நட்சத்திரங்கள் விட்டு அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம் என ஐந்து நட்சத்திரங்களும், பிறகு இரண்டு நட்சத்திரங்கள் விட்டு சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி என நான்கு நட்சத்திரங்கள், தொகை நான்கு எண்ணிக்கை கொண்டுள்ளன.

அப்படியிருக்க மூலம் மட்டிலும் ஏன் ஆசிரியர் எடுத்துக் கொண்டார் என்பதை சிறிது ஆராய்வோம். ஆராய்ச்சிக் கண்ணோடு பார்ப்போம்.

பாவகப் பலன்களைக் கூறும்போது, பாவக காரமும் கிரக காரகமும் ஒன்றுபோல் இருந்தால் அதற்கு முக்கிய சிறப்புப் பலன் உண்டல்லவா? இது ஜோதிடம் கற்றுத் தொழிலாக உள்ள அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அதுபோல் இந்த மூல நட்சத்திரத்திற்குரிய, பரியாயப் பெயர்களில் ஒன்று வில் என்றும் வருகிறது. தனுசு ராசிக்குரிய பரியாயப் பெயர்களில் ஒன்று

வில் என வருகிறது. தனுசு ராசியில் தான் இந்த மூல நட்சத்திரம் உள்ளது. ஆகையால் தான் ஆசிரியர் நான்கெனும் மீன் மூலம் என்று எடுத்துள்ளார். இதை ஜோதிட அறிஞர்கள் சிறிது சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளுங்கள்.

2. அடுத்து வான்கோன் அதாவது, வானோர்க்கு அரசன் தேவேந்திரன். இது கேட்டை.

வான்கனி, அதாவது வான்கன்னி. கன்னி என்பதன் இடைக்குறை கனி. வானோர்க்குத் தெய்வப்பெண். இந்திரனுக்கு மனைவி. இந்திராணி. இது அவிட்டம்.

ஈறு - ரேவதி. இம்மூன்றுக்கு இந்த மூன்று நட்சத்திரங்களுக்கு ஒன்றினுக்கு ஓர் நான்காய் - ஒவ்வொன்றுக்கும் தொடர்ந்து நான்கு நட்சத்திரங்களாக வர இடம் நேர் பரணி முதல் மற்றதற்கு ஆம் - பரணி நட்சத்திர முதல் வரிசையாகக் கொண்டு மேற்கூறிய கேட்டை, அவிட்டம், ரேவதி - என்பதை இடப்பக்கமாக்கினால், அது சத்துரு நட்சத்திரமாகும். அப்படியானால் கேட்டை முதல் இடம் நான்கு. கேட்டை - அனுஷம் - விசாகம் - சுவாதி.

அவிட்டம் முதல் இடம் நான்கு

அவிட்டம் - திருவோணம் - உத்திராடம் - பூராடம்

ரேவதி முதல் இடம் நான்கு

ரேவதி - உத்திரட்டாதி - பூரட்டாதி - சதயம்

இனி, இந்தப் பன்னிரண்டு நட்சத்திரங்களுக்கும் பரணி முதல் நேராக இணைத்தால், அது சத்துருவாகும். அவை வருமாறு:

கேட்டைக்கும் - பரணிக்கும் - பகை

அனுஷத்துக்கும் - கார்த்திகைக்கும் - பகை

விசாகத்துக்கும் - ரோகிணிக்கும் - பகை

சுவாதிக்கும் - மிருகசீரிஷத்துக்கும் - பகை





அவிட்டத்துக்கும் - திருவாதிரைக்கும் - பகை

திருவோணத்துக்கும் - புனர்பூசத்துக்கும் - பகை

உத்திராடத்துக்கும் - பூசத்துக்கும் - பகை

பூராடத்துக்கும் - ஆயில்யத்துக்கும் - பகை

ரேவதிக்கும் - மகத்துக்கும் - பகை

உத்திரட்டாதிக்கும் - பூரத்துக்கும் - பகை

பூரட்டாதிக்கும் - உத்திரத்துக்கும் - பகை

சதயத்துக்கும் - அஸ்தத்துக்கும் - பகை

மற்று அவைக்குப் பகை ஆம் - மற்று அதாவது முறை வகுத்துக் கூறிய இருபத்து நான்கும் தவிர உள்ள அசுவினி, சித்திரை - மூலம் ஆகிய இந்த மூன்றும் ஒன்றுக்கொன்று பகை.

## அடுத்து பஞ்சபட்சி விளக்கம்

ஆன் கடவுள் நேர் - அதாவது (ஆன்) காளை மாட்டை வாகனமாக உடைய கடவுள் - சிவன் (உருத்திரன்) இது திருவாதிரை.

இதுமுதல் ஆறு - திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம் ஆகிய ஆறும் **ஆந்தை**

இது பஞ்சபட்சியில் **ஆந்தை**

அடுத்து ஐந்து என்பது, உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம் ஆகிய ஐந்தும் அக்கம் ஒன்று

அதாவது ஒரு கண்ணையுடையது

(அக்கம் - கண்) இதுதான் **காகம்**

அடுத்து ஆறு என்பது - அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம் ஆகிய ஆறும் **ஆயுதக்கால்**

அதாவது **கோழி**

கோழியின் காலில் ஒரு கூர்மையான கத்தியைக் கட்டிவிட்டு, அதேபோல் கத்தி கட்டப்பட்ட கோழியுடன் சண்டைக்கு விடுவது. இன்றும் கிராமப்புறங்களில் கட்டுச்சேவல் என்ற பெயரில் நடந்து வருகிறது.

கோழி என்பது பொதுச் சொல்லாயிருந்தாலும், இது ஆண் கோழியாகிய சேவலையே குறிக்கும். ஆயுதம் கட்டப்படுவதால் கோழிக்கு ஆயுதக்கால் என்னும் காரணப் பெயர் உண்டாயிற்று. ஜோதிடர்கள் சிறிது சிந்திக்கவும்.

அடுத்து ஐந்து என்பது அசுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிஷம் ஆகிய ஐந்தும் வலியன்

அதாவது வல்லூறு

இவையே பஞ்சபட்சிகளின் நட்சத்திரங்களும் பட்சிகளுமாகும்.

அடுத்து கண்டாந்தம் என்பதன் விளக்கம் -

ஊன் - மாமிசம், கள் - மது, உணவோர் - இவ்விரண்டையும் உணவாக உடையோர், அவரே அசுரர். இது மூலநட்சத்திரம்.

கோணத்து ஆதி - இதன் திரிகோணமாகிய அசுவினி, மகம், மூலம் ஆகிய இந்த மூன்று நட்சத்திரங்கள் முதல் பாதமும், அதற்கு ஈறில் உறுங்கால், அதாவது, அசுவினி ஆதி என்பது அசுவினி முதற்கால், அதற்கு ஈறில் உறுங்கால், அசுவினியிலிருந்து ஆரம்பித்தால் அதற்கு ரேவதி நாலாம் பாதம். இதேபோல் மகம் ஆதி என்பது மகம் முதற்பாதம். அதற்கு ஈறில் உறங்கால் மகத்திலிருந்து ஆரம்பித்தால் அதற்கு ஆயில்யம் நாலாம் பாதம். இதேபோல் மூலம் ஆதி என்பது மூலம் முதற் பாதம்; அதற்கு ஈறில் உறுங்கால் மூலத்திலிருந்து ஆரம்பித்தால் அதற்கு கேட்டை நாலாம் பாதம்.

ஆகையால், அசுவினி, மகம், மூலத்தின் முதல் பாதமும்-ஆயில்யம், கேட்டை, ரேவதியின் நாலாம் பாதமும் கண்டாந்தம்.





அடுத்து விதவை நட்சத்திரங்கள் -

விண்ணோர் - புனர்பூசம், தார் - பூசம், விதவைக்கு உளதே - இந்த இரண்டு நட்சத்திரங்களும் விதவை நட்சத்திரங்கள்.

பஞ்சபட்சி விபரத்தை விவரித்துக் கூறவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இதை மிகச் சுருக்கமாகக் கூறி விளங்க வைக்க முடியாது. இங்கு இதை விவரிக்கப் புகுந்தால், மற்றவைகளை விளக்க இடம் போதாது. ஆகையால், அதை வாரசரித் திரப்படலம் தொடங்கும்போது தெளிவாக்கப்படும். பொறுத்திருங்கள்.

அடுத்து சத்துரு நட்சத்திரம். அதாவது, ஒரு ஜாதகருடைய ஜென்ம நட்சத்திரத்துக்கு, இன்னொருவருடைய ஜன்ம நட்சத்திரம் பகை (சத்துரு) யாக இருந்தால் அவர்கள் இருவரும் சேர்ந்து தொழில் செய்தால் முரண்பட்ட கருத்துக்கள் ஏற்பட்டு தொழிலும் கெடும். நட்பும் சிறப்பாக இராது. ஆனால் இரண்டு ராசி அதிபர்கள் கேந்திர கோணங்களில் இருந்தால் நன்மையளிக்கும். இதுவே திருமணப் பொருத்தம் பார்க்க வேதை என்னும் வகையில் அடங்கும்.

மித்துரு நட்சத்திரம் இருவருக்குமாக இருந்து தொழில் செய்தால் தொழில் வளம் ஏற்படும்.

27 நட்சத்திரங்களில் ஒரு நட்சத்திரத்தான் பகையே தவிர மற்ற நட்சத்திரங்கள் பகையில்லை.

உதாரணமாக - கேட்டைக்கும் - பரணிக்கும் பகை. ஆனால் கேட்டைக்கு மற்ற நட்சத்திரங்கள் நட்பு. அதேபோல் பரணிக்கும் கேட்டையைத் தவிர மற்ற நட்சத்திரங்கள் நட்பு.

**அடுத்து கெண்டாந்தத்தின் விளக்கம்**

ரேவதி நாலாம் பாதம் முடிய ஒரு அரைமணி நேரம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். பிறகு அசுவினி வருகிறது. இந்த நேரத்தில் ஒரு திருமண முகூர்த்தம் வருவதாக இருந்தால் அது தீமை தரும். ஏன்? ரேவதி நாலாம் பாதமும், அசுவினி முதல் பாதம் இணைந்து எவ்வளவு நல்ல முகூர்த்தமாயி

ருந்தாலும், அது தீமையே தரும். ஆகையால் இது சுபகாரியங்களுக்கு விலக்கப்பட வேண்டிய நட்சத்திர நேரங்களாகும்.

இன்னொன்று, ஆயில்யம் ஆயுதப் பிரயோகம் செய்ய நல்ல நாள். ஆனால், இந்த ஆயில்யம் நான்காம் முடிய சிறிது நேரம் இருந்து மகம் ஆரம்பிக்கும் நேரமாக இருந்தால், இது கெண்டாந்தம். நாம் ஆரம்பித்த செயல் சிறப்பாக நடக்காது.

இனி மற்ற நட்சத்திரங்களான கெண்டாந்தத்தை இதே போல் கணக்கிட்டுப் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். இதில் இன்னும் பல சூட்சும நுட்பங்கள் எளிதில் புலனாகும்.

விதவா நட்சத்திரம் குறிப்பாகப் பெண்களுக்கே உரியது. இதில் பிறந்த பெண்கள் சில காலம் கணவனை விட்டுப் பிரிந்திருக்கும் சூழ்நிலை உருவாகும். விதையே ஆய்விடுவதல்ல. (புனர்பூசம் - பூசம்).

**ஊர்த்தமுக நட்சத்திரம் அதோமுக நட்சத்திரம், புறமுக நட்சத்திரம், நட்சத்திர அமிர்த கடிகை, சதாஜீவ நட்சத்திரம்**

தார், எமன், பெண், மூவர், உத்ரத்திரயமும், இப்பேர் முன்
தழல், அவுண், ஏர், முறம், பரணி, சர்ப்பமும், மற்றதும்; மேல்
பாரொடு பின்பு ஆனனம், ஐ ஒன்பது அசுர், பகல்; மேல்
பணி, ரதம் - ஐந்து, ஏழ், அதிகம்; பயம், பரி, யாழ், பறையும்
ஓர், ஒரு மூன்று, ஒருபது, பன் னொன்று குறைந்தது; மற்று
உள்ளவற்றிற்கு எண்மூன்று விடத்து உயர்தல் அமிர்தம்
ஈர் இரண்டு நாழிகை உற்று இருப்பது; அரி, தார், ஈறு,
இரவி, புல், தேர், முக்குளம் எப்போதும் உயிர் எனுமே (7)

இக்கவியில் - தார், எமன், பெண், மூவர், உத்திரத்திரையமும் என்பதற்கு இரண்டாம் வரியின் ஈற்றிலுள்ள மேல் என்ற சொல்லை இணைத்துக் கொண்டும், இப்பேர் முன், தழல், அவுண், ஏர், முறம், பரணி, சர்ப்பமும் என்பதற்கு மூன்றாவது வரியில் பார் என்ற சொல்லை இணைத்துக் கொண்டும்,





மற்றதும் என்பதற்கு அதே மூன்றாவது வரியில் பின்பு ஆனனம் என்ற சொல்லை இணைத்துக் கொண்டும் பொருள் புரிந்து கொள்ள வேண்டும்.

இனி இதன் கருத்துப் பொருளை சிறிது ஊன்றி கவனியுங்கள்.

தார் - பூசம்; எமன் - சதையம், பெண் - அவிட்டம், மூவர் - பிரம்மா, உருத்திரன், விஷ்ணு. இவர்கள் முறையே - பிரம்மா - ரோகிணி - உருத்திரன் - திருவாதிரை, விஷ்ணு - திருவோணம், உருத்திரத்திரையம். அதாவது உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி ஆகிய இந்த ஒன்பது நட்சத்திரங்களும் மேல் - ஊர்த்த முகம். அதாவது மேல் நோக்கு நட்சத்திரம்.

இப்பேர்முன், அதாவது உத்திரத் திரையம் என்பதற்கு முன் உள்ள பூரத்திரையம். அவை - பூரம், பூராடம், பூரட்டாதி, தழல் - கார்த்திகை, அவுண் - மூலம், ஏர் - மகம், முறம் - விசாகம், பரணி சர்ப்பமும் - ஆயில்யமும் - பார் - அதோ முக நட்சத்திரம். அதாவது கீழ்நோக்கு நட்சத்திரம்.

மற்றதும். அதாவது, ஊர்த்த முகமும் அதோமுகம் - அல்லாத புறமுக நட்சத்திரம்.

அவை, அசுவினி, மிருகசீரிஷம், புனர்பூசம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், கேட்டை, ரேவதி ஆகிய ஒன்பதும்.

பின்பு ஆனனம் - புறமுக நட்சத்திரம். அதாவது - சமநோக்கு நட்சத்திரம், ஆனனம் - முகம்.

அடுத்தது நட்சத்திர அமிர்தகடிகை. இது விட கடிகைக்கு எதிர்ப்பதமாகும். ஒரு நட்சத்திரத்தின் இத்தனையாவது நாழிகைக்கு மேல் நான்கு நாழிகை விடகடிகை இருப்பது போல், இந்த அமிர்தகடிகையும், ஒரு நட்சத்திரத்தின் இத்தனையாவது நாழிகைக்கு மேல் நான்கு நாழிகை அமிர்த கடிகையாகும். இதைக் கவனிப்போம்.

ஐ ஒன்பது - நாற்பத்தைந்து நாழிகை அசுர் (மூலத்துக்கும்), பகல் - அஸ்தத்துக்கும் என்று பொருள். அதாவது மூலம், அஸ்தம் ஆகிய இரண்டு நட்சத்திரங்களுக்கும் நாற்பத்தைந்து நாழிகைக்கு மேல் அமிர்த கடிகை.

மேல் பணி, ரதம் - ஐந்து, ஏழ் அதிகம். மேல் - அதாவது நாற்பத்தைந்துக்கு (45) மேல் பணி - ஆயில்யம், ரதம் - ரோகிணி. இவ்விரண்டுக்கும் முறையே - ஆயில்யத்துக்கு ஐந்து அதிகம். 45 + 5 = 50

ரோகிணிக்கு ஏழ் அதிகம் 45 + 7 = 52

அதாவது ஆயில்யத்துக்கு 50 நாழிகைக்கு மேலும், ரோகிணிக்கு 52 நாழிகைக்கு மேலும் அமிர்த கடிகை.

பயம், பரி, யாழ், பரையும் - ஓர் மூன்று இருபது, பன்னொன்று குறைந்தது. அதாவது பயம் - பூராடம், ஓர் குறைந்தது - ஒன்று குறைந்தது எதற்கு ஒன்று குறைந்தது? எதற்கு ஐந்து, ஏழ் அதிகமாயுள்ளதோ அந்த நாற்பத்தைந்துக்கு ஒன்று குறைந்தது. அப்படியானால் 45-1 = 44. இது பூராடத்துக்கு.

பரி - அசுவினி. இதற்கு ஒரு மூன்று குறைந்தது. 45-3 = 42

யாழ் - திருவாதிரை. இதற்கு ஒருபது குறைந்தது 45-10 = 35

பரை - பூரம். இதற்கு பன்னொன்று குறைந்தது. 45-11 = 34

இதை வரிசைப்படுத்தினால், பூராடத்துக்கு 44 நாழிகைக்கு மேலும், அசுவினிக்கு 42 நாழிகைக்கு மேலும், திருவாதிரைக்கு 35 நாழிகைக்கு மேலும், பூரத்துக்கு 34 நாழிகைக்கு மேலும் அமிர்தகடிகை.

மற்று உள்ளவற்றிற்கு எண் மூன்று (24) விடத்து உயர்தல் ஈர் இரண்டு (4) நாழிகை உற்று இருப்பதும்.

மற்று உள்ளவற்றிற்கு மேற்கூறிய நட்சத்திரங்கள் அல்லாத மற்ற நட்சத்திரங்களுக்கு,

எண் மூன்று விடத்து உயர்தல் - விஷ கடிகைக்குக் கூறிய நாழிகைக்கு மேல் 24 நாழிக்கு மேல், நான்கு நாழிகை அமிர்த கடிகை.





அந்த மற்ற நட்சத்திரங்கள் - விட கடிகைக்கு மேல் கூட்டிய எண்களோடு கவனியுங்கள்.

பரணி - 48-52. இது பரணி 4 ஆம் பாதம்.

கார்த்திகை - 54-55

இது கார்த்திகை 4-ம் பாதம்.

மிருகசீரிஷம் - 38-42

இது மிருகசீரிஷம் 3-ம் பாதம்

புனர்பூசம் - 54-58

இது புனர்பூசம் 4-ஆம் பாதம்

பூசம் - 44-48

இது பூசம் 4-ஆம் பாதம்

மகம் - 54-58

இது மகம் 4-ஆம் பாதம்

உத்திரம் 42-46

இது உத்திரம் 3-ஆம் பாதம்

சித்திரை - 44-48

இது சித்திரை 4-ஆம் பாதம்

சுவாதி 38-42

இது சுவாதி 3-ஆம் பாதம்

விசாகம் 38-42

இது விசாகம் 3-ஆம் பாதம்

அனுஷம் - 34-38

இது அனுஷம் 3-ஆம் பாதம்

கேட்டை - 38-42

இது கேட்டை 3-ஆம் பாதம்

உத்திராடம் - 44-48

இது உத்திராடம் 4-ஆம் பாதம்

திருவோணம் - 34-38

இது அவிட்டம் 3-ஆம் பாதம்

சதயம் - 42-46

இது சதயம் 3-ஆம் பாதம்

பூரட்டாதி - 40-44

இது பூரட்டாதி 3-ஆம் பாதம்

உத்திரட்டாதி 48-52

இது உத்திரட்டாதி 4-ஆம் பாதம்

ரேவதி 54-58

இது ரேவதி 4-ஆம் பாதம்

அடுத்தது சதா ஜீவ நட்சத்திரம்.

அரி - திருவோணம், தார் - பூசம், ஈறு, ரேவதி, இரவி - அனுஷம், தேர் - ரோகிணி, முக்குளம் = உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி ஆகிய இந்த ஒன்பது நட்சத்திரங்கள் சதா ஜீவ நட்சத்திரங்கள் எனப்படும். அதாவது எப்பொழுதும் உயிரோட்டம் உள்ள நட்சத்திரங்கள் என்று பொருள்.

**இதன் பலன்கள் :**

ஊர்த்த முகம், மேல்நோக்கு நட்சத்திரங்களில் - மேல் நோக்கி செல்லக் கூடியவைகளாவன, வீடு கட்டுதல், மதில் எழுப்புதல், பந்தல் அமைத்தல், கொடிக் கம்பம் நாட்டுதல், மரம் நடுதல், செடி பயிரிடுதல், கோபுரம் அமைத்தல், மாடிப்படி அமைத்தல், மலைப்பாதை போடுதல் முதலியன செய்ய உத்தமம்.

பார் - கீழ் என்னும் கீழ்நோக்கு நட்சத்திரங்களில் - கிணறு வெட்டுதல், குழாய் கிணறு உண்டாக்குதல், குளம், வாய்க்கால் வெட்டி அமைத்தல், மரவள்ளிக் கிழங்கு, வேர்க்கடலை, வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற பூமிக்குள் விளையும் பொருள்களைப் பயிரிடுதல் முதலிய செய்ய உத்தமம்.

பின்பு ஆனனம் என்னும் புறமுகம் அல்லது சமநோக்கு நட்சத்திரங்களில் - உழவு செய்தல், ஆடு, மாடு, எருமை போன்ற கால்நடைகள் வாங்குதல், தொழிற்சாலை அமைத்தல், பாதை செப்பனிடுதல் முதலிய செய்ய உத்தமம்.





இவ்வாறு செய்யும்போது அந்தந்த நட்சத்திர தேவதைக்குப் பூஜை செய்து விட்டு காரியங்களைத் தொடங்குவது மேன்மை தரும்.

அடுத்த நட்சத்திர <u>அமிர்தகடிகை.</u> இது விட கடிகைக்குக் கூறியது போல் ஒரு நட்சத்திரம் ஆரம்பித்து இத்தனையாவது நாழிகைக்கு மேல் 4 நாழிகை <u>அமிர்த கடிகையாகும்.</u>

இந்த நேரத்தில் சில நல்ல காரியங்களைச் செய்ய உத்தமம். அதாவது குழந்தைக்கு அன்னப் பிராசனம் (சோறு ஊட்டுதல்) பாலாபிஷேகம் செய்தல், எண்ணெய்க் கடை வைத்தல், பழரசக் கடை வைத்தல், பால் விற்பனையகம் ஏற்படுத்துதல், பழக்கடை, காய், கறிக்கடை வைத்தல், பால்பண்ணை ஏற்படுத்துதல் முதலியன செய்ய உத்தமம்.

குறிப்பு : அமிர்தம் என்றால் சுவையான திரவப் பொருள்.

ஆகையால், சுவையான திரவப் பொருள் தயாரிக்க விற்பனை செய்ய பருக - நன்மை தரும். லாபம் தரும்.

<u>கலைக்யான பாதம் - அபிஜித்து நட்சத்திரம் - வைநாசியம் -நட்சத்திரத்தீது - பாடாவாரி நட்சத்திர ராசி</u>

முயலகன்நேர் உடுக்காற்கு கலைக்யான பாதம்

மொழியிவணம்; முடிகடைக்கால் முதல் மால் நால் கடிகை

அயன்மருவு விகடிகையும் அவ்வளவும் அவசித்து -

ஆம்; அடுப்பு ஆம் முதல் எழுகாற்கு அனல் அருக்கற்கு; உதயத்து

உயர்வது எண்பத்து எண்கால் வைநாசிகம்; அல் பகல் தீண்டு

உரகதினம் முன்பின்னோடு எழும் தீது; ஒன்று, உபயம்,

இயமின், புல்மூன்று, ஈர் சுடர், மால் இவை பாடாவாரி

இரலைமுதல் இரண்டே கால் தினம் ஒரு நேர் எனுமே.

இக்கவியில் ஏழு விபரங்கள் அடங்கியுள்ளன. அவை.

1. முயலகண் நேர் உடுக்காற்கு கலைக்யான பாதம்

மொழிவணம் - கலைக்யானபாதம்

2. முடி கடைக்கால் முதல், மால் நால்கடிகை, அயன் மருவுவிகடிகையும் அவ்வளவும் அவசித்து ஆம் - அவசித்து

3. அடுப்பு ஆம் முதல் எழுகாற்கு அனல் அருக்கற்கு - அக்கினி நட்சத்திரம்

4. உதயத்து உயர்வது எண்பத்து எண்கால் வைநாசியம் - வைநாசியம்

5. அல் பகல் தீண்டும் உரக தினம் முன்பின்னோடு எழும் தீது - நட்சத்திரத் தீது

6. ஒன்று, உபயம், இயமன், புல், மூன்று, ஈர்சுடர், மால் இவை பாடாவாரி - பாடாவாரி

7 இரலை முதல் இரண்டே கால் தினம் ஒரு நேர் எனுமே நட்சத்திரராசி - நட்சத்திரராசி

இனி இதை வரிசையாகக் கவனிப்போம்.

1. முயல்கண் என்பது சந்திரன். முயலகன்சேர் உடுக்காற்கு - சந்திரன் நின்ற நட்சத்திரக் காலுக்கு (சந்திரன் எங்கு நிற்கின்றானோ, அதுவே ஜாதகருக்கு ஜென்ம நட்சத்திரமாகும்)

கலைஞானம் என்பதுவே கலைக்ஞானம்.

நமது நாட்டில் கலைகள் அறுபத்து நான்கு மிகவும் சிறப்புடையவை. அவைகளைத் திரட்டி கலைஞானம் அறுபத்து நான்கு எனப் பெயரிட்டுள்ளனர்.

இதை சரஸ்வதி துதிகளில் ஒன்றான -

**ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என்னம்மை** என்று வருவதைக் கவனியுங்கள்.

உடு - நட்சத்திரம், கால் - பாதம், ஆகையால் ஜென்ம நட்சத்திரக் காலுக்கு (பாதத்துக்கு) 64-ஆம் கால் - கலைக்யான பாதம்.

மாதிரிக்கு ஒன்று - அசுவினி முதல் பாதத்தில் பிறந்தவர்களுக்கு விருச்சிகத்தில் ஆரம்பத்திலுள்ள விசாகம் 4-ஆம் பாதம் கலைக்யான பாதமாகும்.

இதேபோல் மற்றவைகளையும் கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.

மொழிவணம் என்பது இதை இவ்வாறு கூறப்படுகிறது எனப் பொருள்தரும்.

2. முடி - உத்திராட நட்சத்திரம், கடைக்கால் - இதன் கடைசிக் கால் பாகமாகிய பதினைந்து நாழிகையின் அளவும், மால் - திருவோணம் நட்சத்திரம்

முதல் மாலை - திருவோண நட்சத்திரத்தில் முதலில் நால் கடிகை - நான்கு நாழிகையும், அயன் மருவு விகடிகையும் - நாதை விநாடியும் - நான்கு விநாடியும்.

இங்கு இந்த சொற்றொடர் எப்படி நான்கு விநாடி என்பதைக் கவனியுங்கள்.

அயன் - ரோகிணி நட்சத்திரம். இது நட்சத்திர வரிசையில் நான்காவதாக வருவதைக் கணக்கிட்டு, அயன் மருவு விகடிகை என்பதைத் காரணத்தோடு, நான்கு நாழிகை என எடுத்துக் கொண்டார்.

இந்தக் கவியின் உட்பொருளை உணருவதற்கு எவ்வளவு சிக்கல் இருக்கிறது என்பதைக் கவனியுங்கள். அதேசமயம், அந்த சிக்கலின் கருத்துப்புரிந்த பிறகு ஒரு மகிழ்ச்சியும் ஏற்படுகிறதல்லவா?

இனி இதன் விபரம் - உத்திராட நட்சத்திரத்தில் 4-ஆம் பாதம் 15 நாழிகையும், திருவோண நட்சத்திரத்தன் முதல் பாதத்தில் உள்ள 4 நாழிகை 4 விநாடியும் கொண்ட ஒரு கால அளவே அபிஜித்து (அவசித்து) எனப்படும்.

இது உருவமுள்ள இருபத்தேழு நட்சத்திரங்களைப் போல், உருவமுள்ள நட்சத்திரம் அல்ல. ஒருகால அளவாகும். அதாவது, இரண்டு நட்சத்திரங்களின் அந்தமும் ஆதியும் சேர்ந்து மொத்தம் 19 நாழிகை 4 விநாழிகையாகும். அவசித்து ஆம் - அவசித்து நட்சத்திரம் எனப்படும்.

3. அடுப்பு ஆம் முதல் எழுகாற்கு அனல் அருக்கற்கு -

அடுப்பு - பரணி. அனல் அக்கினி, இங்கு இது அக்கினி நட்சத்திரம் எனப்படும். அருக்கற்கு - அருக்கனுக்கு சூரியனுக்கு.

எழுகாற்கு = ஏழு கால்களுக்கு - ஏழு பாதங்களுக்கு.

அடுப்பு = பரணி. இது மேஷத்தில் இருக்கிறது. இது ஏழு பாதங்களாக வேண்டுமானால், அசுவினி 1-2-3-4 பாதங்கள், பரணி 1-2-3 பாதங்கள் ஆக ஏழு பாதங்கள். அதிலிருந்து மீண்டும் ஏழு பாதங்கள் அதாவது பரணி 4, கார்த்திகை 1-2-3-4 பாதங்கள். ஆகமொத்தம் ரோகிணி 1 பரணி 3 முதல் ரோகிணி 1 முடிய ஏழு பாதங்கள் என்று இந்த சொற்றொடரின் உட்பொருளாகும். இதுவே, அதாவது இந்தக் கால் அளவு வரை சூரியன் இருக்கும் காலம் அக்கினி நட்சத்திரம் எனப்படும்.

குறிப்பு : ஒவ்வோராண்டும் சித்திமாதம் 21-ஆம் தேதி முதல், வைகாசி மாதம் 14-ஆம் தேதி முடிய உள்ள காலம் 25 நாட்கள் அக்கினி நட்சத்திரம் எனப்படும்.

4. உதயத்து உயர்வது எண்பத்து எண்கால் வைநாசியம்.

உதயத்து உயர்வது - ஜென்ம நட்சத்திரத்திலிருந்து மேலே செல்வது.

எண்பத்து எண்கால் = 88 ஆம் பாதம் வைநாசிகம் எனப்படும். வைநாசிகம் அதாவது அடிமை என்னப்படும்.

ஒரு ஜனனம் ஒரு நட்சத்திரத்தின் முதல் பாதத்தில் பிறந்தால், அதிலிருந்து 22 ஆவதாக வரும்.

2-3-4 பாதங்களாக இருந்தால் 23-ஆவது நட்சத்திரமாக வரும்.

5. அல்பகல் தீண்டு உரக தினம் முன்பின்னோடு எழும்தீது.

அல் = அல்லோன் என்பதன் கடைக்குறை. அதாவது சந்திரன்

பகல் = பகலோன் என்பதன் கடைக்குறை - சூரியன்.

தீண்டு உரகதினம் = சந்திர சூரியர்களாகிய இந்த இரண்டு கிரங்களையும் ரா-கேதுக்களாகிய நாகம் (பாம்பு) பற்றிக்



கொள்ளும் தினம், அதாவது கிரகண தினம்.

இது சந்திரனைத் தீண்டுதல் சந்திர கிரகணம். சூரியனைத் தீண்டுதல் சூரிய கிரகணம்.

மேலும் ராகுவால் தீண்டப்படுவது ராகு கிரஸ்தம் என்றும், கேதுவால் தீண்டப்படுவது கேது கிரஸ்தம் என்றும் சொல்லப்படும்.

இன்னும் சூரிய கிரகணம் அமாவாசையிலும், சந்திர கிரகணம் பௌர்ணமியிலும் தான் ஏற்படும். இது இயற்கை நியதி.

முன்பின்னோடு எழும்தீது, = அதாவது கிரகணம் பிடித்த நட்சத்திரத்திற்கு முன்னாலுள்ள மூன்று நட்சத்திரங்களும், பின்னாலுள்ள மூன்று நட்சத்திர கிரகங்களும், கிரகணம் பிடித்த நட்சத்திரமும் ஆக ஏழு நட்சத்திரங்களும் நட்சத்திரத் தீது எனப்படும்.

ஏழு என்பது எழு என செய்யுளின் ஓசை நோக்கிக் குறுகிற்று. இந்த ஏழு என்பது மற்ற சொற்களுக்கு முதலில் வரும்போது, எழு என்றும் ஏழ் என்றும் மாறும். இவ்வாறு வரும் சில சொற்களைக் கவனியுங்கள்.

ஏழுபேர் - எழுவர். ஏழுநிலை மாடம் - எழுநிலை மாடம்

எழு + பரியோன் = ஏழ் பரியோன்

6. ஒன்று, உபயம், இயமன், புல் மூன்று. ஈர்சுடர், மால் இவை பாடாவாரி.

ஒன்று = அசுவினி, உபயம் = பரணி, இயமன் = சதையம், புல்மூன்று = அதாவது புல் எனும் அனுஷம் முதல் மூன்று. முறையே அனுஷம், கேட்டை, மூலம்.

ஈர்சுடர் = இரண்டு சுடர் ஒளி ஒரு சுடர் சித்திரை. இரண்டாவது சுடர் சுவாதி. இங்கு சித்திரை, எப்படி சுடராகும் என்பதைக் கவனியுங்கள்.

நட்சத்திரத் தொகையில் சித்திரை புலிக்கண் ஆகும். புலிக்குக் கண் இரவில் அதிகம் பிரகாசிக்கும். ஆதலால், இதன் கண்களைக் கண்ட மிருகங்கள் அஞ்சி மயங்கி இதற்கு

இரையாகும். இதுவே சுடர் = **சித்திரை.**

ஆக - அசுவினி, பரணி, சதயம், அனுஷம், கேட்டை, மூலம், சித்திரை, சுவாதி ஆகிய ஒன்பது நட்சத்திரங்கள் பாடாவறுதி, பாடாவாரி எனப்படும். இதன் பொருள்.. மிகுபாடு அதிக வருத்தம் என்பதாகும்.

7. இரலை முதல் இரண்டேகால் தினம் ஒரு நேர் எனுமே. இது நட்சத்திர ராசி.

ஒரு நேர் - மேஷம் முதல் வரிசையாக மீனம் முடிய.

இரலை முதல் - அசுவினி முதல் ரேவதி முடிய இரண்டே கால் தினம் - ஒவ்வொரு ராசிக்கும் இரண்டே கால் நட்சத்திரம்.

எனுமே - நட்சத்திர ராசி என்று சொல்லப்படும்.

அவை வருமாறு:

1. அசுவினி - பரணி, கார்த்திகை, கால் — மேஷம்
2. கார்த்திகை 3/4 ரோகிணி
மிருகசீரிஷம் 1/2 — ரிஷபம்
3. மிருகசீரிஷம் 1/2, திருவாதிரை
புனர்பூசம் 3/4 — மிதுனம்
4. புனர்பூசம் 1/4, பூசம்,
ஆயில்யம் — கடகம்

இந்த நான்கு ராசிகளும் சரத்தில் ஆரம்பித்து சரத்தில் முடிகின்றன.

5. மகம், பூரம், உத்திரம் 1/4 — சிம்மம்
6. உத்திரம் 3/4, அஸ்தம், சித்திரை 1/2 — கன்னி
7. சித்திரை 1/2, சுவாதி, விசாகம் 3/4 — துலாம்
8. விசாகம் 1/4, அனுஷம், கேட்டை — விருச்சிகம்

இந்த நான்கும் திரத்தில் ஆரம்பித்து திரத்தில் முடிகிறது.





9. மூலம், பூராடம், உத்திராடம் 1/4 — தனுசு
10. உத்திராடம் 3/4, திருவோணம், அவிட்டம் 1/2 — மகரம்
11. அவிட்டம் 1/2, சதையம், பூரட்டாதி 3/4 — கும்பம்
12. பூரட்டாதி 1/4, உத்திரட்டாதி, ரேவதி — மீனம்

இதன் பலன் : கலைக்யானம் என்ற நட்சத்திரக்காலில் எந்தக் கிரகமிருக்கிறதோ, அந்த கிரகத்தின் பலனும், பாத அம்சநாதன் பலனும், அந்த நட்சத்திரம் இருந்த ராசிநாதன் பலனும் ஜாதகருக்கு நன்மையாக ஏற்படும்.

உதாரணமாக அசுவினி முதல் பாதத்திற்கு விசாகம், 4-ஆம் பாதம் கலைக்யானம். இது விருச்சிக ராசி. ராசிநாதன் செவ்வாய். அம்சநாதன் சந்திரன். தசாநாதன் குரு. இந்த ராசி, லக்கினத்துக்கு எந்த பாவம், அதே போல் குருவும் சந்திரனும் எங்குள்ளனர் எனக் கண்டறிந்து இந்த மூன்றுக்குரிய பாவ காரகம், கிரககாரகம் வைத்துப் பலன் சொல்லுக.

மாதிரிக்கு ஒன்று -

மிதுன லக்கினம் என்று வைத்துக் கொள்வோம். இதற்கு விருச்சிகம் ஆறாமிடம். சத்துருக்களால் பயம் இல்லை. ராசிநாதன் செவ்வாய். லாபாதிபதியும் ஆவான். தொழில் முறையில் அதிக பாலம் கிடைக்கும். சாரநாதன் அல்லது தசாநாதன் குரு. ஏழு, பத்துக்குடையவன். இது களத்திர வழி அல்லது கூட்டுத் தொழில் இவைகளில் நன்மையுண்டாகும். தொழில் பலப்படும். அம்சநாதன் சந்திரன். இரண்டுக் குடையவன். இது பேச்சுத் திறமையைக் கொடுக்கும். இதேபோல் 12 ராசிகளுக்கும், 128 பாதங்களுக்கும் கணக்கிட்டுப் பாருங்கள். அளவு கடந்த பலன் நம்மைத் தேடி வரும்.

அவசித்து என்பது - சக்கரங்களாகிய, ஏகார்க்களம், சூலம், மகாசூலம், கும்பபூர்த்தி, வேதைக் கயிறு இவைகளைக் கணக்கிட உதவுகிறது.

அக்கினி நட்சத்திரம் என்பது வெப்பத்தின் கொடுமையைக் குறிக்கிறது. அக்காலத்தில் உஷ்ண சம்பந்தமான பொருள்களைக்

கையாளுவதில் எச்சரிக்கை தேவை என்பதைக் காட்ட உதவுகிறது.

**வைநாசியம்** என்பது கலைக்யான பாதத்திற்குக் கூறியது போல் கணக்கிட்டு ஜாதகர் எப்படிப்பட்ட ஒன்றுக்கு அடிமையாவார் என்பதைக் காட்ட உதவுகிறது.

நட்சத்திரத்தீது என்பது, அந்த நட்சத்திரங்கள் சுபகாரியங்களை விளக்க உதவுகிறது.

பாடாவாரி என்பது செய்யும் காரிய முயற்சிகளைத் தடுத்து தாமதம் செய்வதும், கடனாளியாக்குவதும், கெட்ட பெயர் தேடிக் கொடுப்பதும், உடல் நலத்தைக் கெடுப்பதும் ஆகிய காரியங்களைச் செய்யக் கூடியது. முன்கூட்டித் தெரிந்து இதற்கு நல்வழி தேடுவது நலந்தரும்.

**கிரக உதைப்பு அல்லது லப்தை, கிரக வேதை, கிரக வேதையின் தொகை, கிரக வேதையின் பெயர்**

தினகரன் நேர் குளம், அரி, தீ, வேய், பினர், பின, முன், முன்
தெகித்தல்; அல்இல்-மதி, வேய், தார், சேலை, புள், ஏர், தீபம்,
மனன், முடி, மால், ஈறு ஆம்; வேய், ஆடி, சுடர், மகம் ஆம்;
மறலி, மன், தார், ஆம்; அகி, வேயும்; இது ஆம்; மதி யாழ்,
புனல், அனை, ஏர், ஆம்; கணு ஆம்; முதல் தொகை வைத்து இனன்நேர்
போதன், மகித்துடி, சூல், பூசல், வேல், சூன், பொய், சூது,
அனல், கதை, தோடம் ஆம்; சக்கரம், எமன், கண்டம், சூல்
ஆம்; நேர்வீ, கொடுமை, குறை, பாசம், நிபம் ஆமே (9)

இக்கவியில் பதினொரு வகைப்பிரிவுகள் அடங்கியுள்ளன.

1. தினகரன் நேர் குளம், அரிதீ, வேய், பினர், பின், முன், முன், தெகித்தல்.
2. அல்இல் - மதி, வேய், தார், சேலை, புள், ஏர், தீபம், மனன், முடி, மால், ஈறு ஆம்.
3. வேய், ஆடி, சுடர், மகம் ஆம்





4. மறலி, மன், தார் ஆம்
5. அகி, வேயும்
6. இது ஆம்
7. மதி, யாழ், புனல், அனை, ஏர், ஆம்
8. கணு ஆம்
9. முதல் தொகை வைத்து இனன் நேர் - போதன், மகித்துடி, சூழ், பூசல், வேல், சூன், பொய், சூது, அனல், கதை, தோடம் ஆம்.
10. சக்கரம், எமன், கண்டம், சூல் ஆம்
11. நேர்வீ, கொடுமை, குறை, பாசம், நிபம் ஆமே.

**முதல் வகைப்பிரிவின் பொருள் :**

தினகரன் நேர் என்பது - சூரியன் முதல் கேது வரை என்று பொருள்.

தெகித்தல் - உதைப்பு அல்லது லப்தை அதாவது பலவகைத் துன்ப நிலைகள்.

அரி - திருவோணம் 22-ஆவது நட்சத்திரம்.

இது செவ்வாய் நின்ற நாளுக்கு **உதைப்பு**

வேய் - புனர்பூசம் 7-ஆவது நட்சத்திரம்... இது புதன் நின்ற நாளுக்கு **உதைப்பு**

பினர் - அதாவது புனர்பூச நட்சத்திரத்துக்குப் பின்னுள்ளது. திருவாதிரை 6-வது நட்சத்திரம். இது குரு நின்ற நாளுக்கு **உதைப்பு**

பின், அதாவது பினர் என்பதற்குப் பின் - திருவாதிரைக்குப் பின்னால் மிருகசீரிஷம் 5-ஆவது நட்சத்திரம். இது சுக்கிரன் நின்ற நாளுக்கு **உதைப்பு**

முன் அதாவது வேய் - புனர்பூசம் என்ற நட்சத்திரத்துக்கு முன்னுள்ள நட்சத்திரம் - பூசம். 8-ஆவது நட்சத்திரம். இது சனி நின்ற நாளுக்கு **உதைப்பு**

முன், அதாவது முன் என்று குறித்த பூச நட்சத்திரத்துக்கு முன்னுள்ள நட்சத்திரம் ஆயில்யம். 9-ஆவது நட்சத்திரம். இது ராகு - கேது நின்ற நாளுக்கு **உதைப்பு**

குறிப்பு : இங்கு கிரகம் நின்ற நாளுக்கு இத்தனையாவது நாள் என்று குறிப்பிட ஆசிரியர் எண்களுக்காக நட்சத்திரப் பெயர்களைக் கூறியுள்ளாரே தவிர, இதில் கூறப்பட்ட நட்சத்திரங்கள் உதைப்பல்ல. அந்த எண்ணிக்கையில் எந்த நட்சத்திரம் வருகிறதோ - அதுதான் உதைப்பு நட்சத்திரங்களின் பெயர்களைக் கண்டு குழப்பம் அடையாதீர்கள்.

**இரண்டாவது வகைப் பிரிவின் பொருள்.**

அல்இல் - சந்திரன் நீங்கலாக அதாவது செவ்வாய் முதல் ராகு கேது நின்ற நாளுக்கு என்று பொருள்.

மதி = மிருகசீரிஷம் 5, வேய் = புனர்பூசம் 7, தார் = பூசம் 8, சேலை = சித்திரை - 14, புள் = அவிட்டம் 23, ஏர் = மகம் = 10, தீபம் = சுவாதி 15, மனன் - மன்னன் - கேட்டை 18, முடி - உத்திராடம் 21, மால் - திருவோணம் 22, ஈறு - ரேவதி 27.

ஆக 5-7-8-14-23-10-15-18-21-22-27 ஆகிய இந்தப் பதினோரு நாட்கள் சூரியன் நின்ற நாளுக்கு கிரகவேதை.

மூன்றாவது வகைப்பிரிவின் பொருள் :

| | |
|---|---|
| வேய் - புனர்பூசம் | 7 |
| ஆடி - உத்திராடம் | 21 |
| சுடர் - சுவாதி | 15 |
| மகம் | 10 |

ஆக, 7-21-15-10 ஆகிய இந்த நான்கு நாட்கள் செவ்வாய் நின்ற நாளுக்கு - கிரகவேதை

நான்காவது வகைப்பிரிவின் பொருள்:

| | |
|---|---|
| மறல் - சதயம் | 24 |
| மன் - கேட்டை | 18 |
| தார் - பூசம் | 8 |





ஆக, 24-18-8 ஆகிய இந்த மூன்று நாட்கள் புதன் நின்ற நாளுக்கு **கிரகவேதை**

ஐந்தாவகைப் பிரிவின் பொருள் :

| | |
|---|---|
| அகி - கேது | 9 |
| வேய் - புனர்பூசம் | 7 |

ஆ 9-7 ஆகிய இந்த இரண்டு நாட்கள் குரு நின்ற நாளுக்கு **கிரகவேதை**

ஆறாவது வகைப் பிரிவின் பொருள் :

இது ஆம். அதாவது மேற்குறித்த அகி - வேயும் என்பது. ஆகையால் இதுவும் 9-7 ஆகிய இந்த இரண்டு நாட்கள் சுக்கிரன் நின்ற நாளுக்கு - **கிரகவேதை**

**ஏழாவது வகைப் பிரிவின் பொருள் :**

| | |
|---|---|
| மதி - மிருகசீரிஷம் | 5 |
| யாழ் - திருவாதிரை | 6 |
| புனல் - பூராடம் | 20 |
| அனை - அன்னை - பூம் | 11 |
| ஏர் - மகம் | 10 |

ஆக, 5-6-20-11-10 ஆகிய இந்த ஐந்து நாட்கள் சனி நின்ற நாளுக்கு **கிரகவேதை**

**எட்டாவது வகைப் பிரிவின் பொருள்** : கணும் ஆகும். கண் - புனர்பூசம் - 7 ஆக இந்த ஏழாவதாகிய ஒருநாள் ராகு - கேது நின்ற நாளுக்கு - **கிரகவேதை**

**ஒன்பதாவது வகைப் பிரிவின் பொருள் :**

இதில் முதல் தொகை வைத்து இனன் நேர் என்ற சொற்றொடர் சூரியன் முதல் கேது வரை என்று பொருள்.

சூரியனுக்குத் தொகை (11) பதினொன்று. அவை ஒவ்வொன்றுக்கும் உள்ள செயல்கள் என்ன என்பதைக் கவனியுங்கள்.

**சூரியனுடைய முதல் வேதை முதல் 11. வேதை வரை.**

| | |
|---|---|
| 1. போதன் | பிரமம் |
| 2. மகித்துடி | பூகம்பம் |
| 3. சூல் | சூலம் |
| 4. பூசல் | பூசல் |
| 5. வேல் | படை |
| 6. சூன் | சூனியம் |
| 7. பொய் | பொய் |
| 8. சூது | சூது |
| 9. அனல் | அனல் |
| 10. கதை | தண்டம் |
| 11. தோடம் | தோஷம் |

**பத்தாவது வகைப் பிரிவின் பொருள் :**

**இது செவ்வாயினுடைய நான்கு வேதைகள்.**

| | |
|---|---|
| 1. சக்கரம் | சக்கரம் |
| 2. எமன் | காலன் |
| 3. கண்டம் | கண்டம் |
| 4. சூல் | சூலம் |

**பதினொன்றாவது வகைப் பிரிவின் பொருள் :**

இதில் நேர்வீ, கொடுமை, குறை, பாசம், நிபம், ஆமே என்பதால்,

புதனுடைய வேதை மூன்றுக்கு வீ, மாரணம் என்றும்,

குருவினுடைய வேதை 2-க்கு கொடுமை என்றும்,

சுக்கிரனுடைய வேதை 2-க்கு விரணம் என்றும்,

சனியினுடைய வேதை 5-க்கு பாச பந்தனமென்றும்,

ராகு - கேது வேதை ஒன்று நிபம்... அதாவது புறங்கூறல் நீர்ஜாடி என்றும் பெயர்.





குறிப்பு : கிரக வேதையில் கூறப்பட்ட நட்சத்திரங்கள் எண்களுக்கே அல்லாமல் அந்த நட்சத்திரங்களல்ல. குறிப்பிட்ட எண் எந்த நட்சத்திரமாக கிரகம் நின்ற நட்சத்திரத்திலிருந்து கணக்கில் வருகிறதோ, அந்த நட்சத்திரத்தை மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும்.

**நித்திய கிரக வேதை, தாற்காலிய, கிரக வேதை, சமூக - தக்ஷிண வாமவேதை, சமுதாயிகம், ஆதானம், தேசம், மானதம் சாதி, அபிஷேகம்**

பம் மனனுகு ஆவணம், தேர் மான்தலை, யாழ், தார், முப்
பணி அனல் நேர் ஈது நித்யம்; பானுவுக்குச் சுடர், கோன்
கம், இரு ஆன், கை, முனர், அத் தினம் சிகிநேர் இடமாய்க்
காண்பது அவரவர்க்கு ஆயில் தாற்கால்யம்; கவுரி
சம்முகம்; மன் தேர் வலம் மற்று இவை இடம் அப்பரிநேர்
தால் வேதை, முறம், மன், அவுன், சதயம் முதல் சருத்த்
இம்மகி உதயம் ஆம்; மேல், சாங்காதி, சமுதா
யாகம், ஆதானம், தேசம், மனம், இனம், ராச்சியமே (10)

இக்கவியின் பிரிவுகள் :

1. பம்மனுக்கு ஆவணம் தேர், மான்தலை, யாழ், தார், முப்பணி அனல் நேர் நித்யம்

இதன் பொருள் :

பம் - நட்சத்திரம், மனன் - மன்னன் என்பதன் இடைக்குறை.

பம்மனன் - நட்சத்திரங்களுக்குத் தலைவனான சந்திரனுக்கு.

| | | |
|---|---|---|
| ஆவணம் | - புனர்பூசம் | 7 |
| தேர் | - ரோகிணி | 4 |
| மான்தலை | - மிருகசீரிஷம் | 5 |

யாழ் - திருவாதிரை 6

தார் - பூசம் 8

முப்பணி - மூன்று முறை கேது 9-9-9 ஆகிய இவைகள்

அனல் நேர் - செவ்வாய் முதல், ஈது நித்யம் - நித்திய கிரக வேதை.

இதை செவ்வாய் முதல் மேற்கூறிய எண்களை - செவ்வாய்க்கு, புதனுக்கு, குருவுக்கு, சுக்கிரனுக்கு, சனிக்கு, ரவிக்கு, ராகு, கேதுவுக்கு என வரிசைப்படுத்துவோம். அதாவது,

| | | |
|---|---|---|
| மதி நின்ற நாளுக்கு | 7-இல் | செவ்வாயும் |
| செவ்வாய்க்கு | 4-இல் | புதனும் |
| புதனுக்கு | 5-இல் | குருவும் |
| குருவுக்கு | 6-இல் | சுக்கிரனும் |
| சுக்கிரனுக்கு | 8-இல் | சனியும் |
| சனிக்கு | 9-இல் | ரவியும் |
| ரவிக்கு | 9-இல் | ராகுகேதுவும் |
| ராகுகேதுவுக்கு | 9-இல் | மதியும் |

நிற்பது - <u>நித்திய கிரகவேதை.</u>

2. பானுவுக்குச் சுடர், கோன், இரு ஆன், கை, முனர் - அத்தினம், சிகி நேர் இடமாய்க் காண்பது அவரவர்க்கு ஆயில் - <u>தாற்காலய்ம்</u>

பானுவுக்கு - ரவி நின்ற நாளுக்கு,

சுடர் - சுவாதி 15

கோன் - கோட்டை 18

கம் - அனுஷம் 17

இரு ஆன் - இருமுறை ஆன் அதாவது,

இரண்டு முறை உத்திரம் 12- 12

கை - அஸ்தம் 13

முனர் - அஸ்தத்திற்கு





முன்பு - உத்திரம் 12

அத்தினம் அதே உத்திரம் 12

இனி சிகிநேர் இடமாய் என்பதைக் கவனிப்போம்.

சிகி - கேது. இடமாக வரிசைப்படுத்தினால் கேது - புதன் சனி - குரு - ராகு - செவ்வாய் - மதி - ரவி என வரும்.

இனி எண்களை இணைப்போம். ரவி நின்ற நாளுக்கு.

15-இல் கேதுவும்

| | | |
|---|---|---|
| கேதுவுக்கு | 18-இல் | புதனும் |
| புதனுக்கு | 17-இல் | சனியும் |
| சனிக்கு | 12-இல் | குருவும் |
| குருவுக்கு | 12-இல் | ராகுவும் |
| ராகுவுக்கு | 13-இல் | செவ்வாயும் |
| செவ்வாய்க்கு | 2-இல் | மதியம் |
| மதிக்கு | 12-இல் | ரவியும் |

நிற்பது - <u>தாற்கால்ய கிரகவேதை.</u>

3. கவுரி சம்முகம்; மன், தேர், வலம் மற்று இவை ீடம் அப்பரிநேர் தரல் வேதை.

இதில் அப்பரிநேர் என்பது அசுவினி முதலாக என்று பொருள்.

கவுரி - பூரம் 11. இது அசுவினி முதல் 11-ஆவது நட்சத்திரம். இந்த கவுரி என்ற பூரநட்சத்திரம் 11 எண்ணைக் குறிக்க வந்ததே அல்லாமல், பூரம் என்ற நட்சத்திரத்தை எல்லா நட்சத்திரங்களுக்கும் வைத்துக் கொள்ளக் கூடாது.

அசுவினிக்கு மட்டும் பூரம் அப்படியானால் பரணிக்கு உத்திரம் - 11, ரோகிணிக்கு மிருகசீரிஷம் 11. இதேபோல் இருபத்தேழு நட்சத்திரங்களையும் வரிசைப்படுத்திக் கொள்ளுங்கள். இதுதான் சமூகவேதை. இது கவியில் எதுகை நோக்கி சம்முகம் என்று வந்திருக்கிறது. சம்முகம் - சமூகம். <u>சமூகவேதை.</u>

மன் - கேட்டை 18, தேர் - ரோகிணி 4, 18-ஆவது நட்சத்திரம் வலம் - தக்ஷிணம் - தக்ஷிண வேதை. 4-ஆவது நட்சத்திரம் இடம் - வாமம் - <u>வாமவேதை.</u>

ஸம்ஸ்கிருதத்தில் தக்ஷிணம் என்பது வலப்பக்கம். வாமம் என்பது இடப்பக்கம். இவை திசையைக் குறிக்கும்போது தக்ஷிணம் - தெற்கு; வாமம் - வடக்கு

மன் என்ற கேட்டை 18-ஆவது அசுவினுக்குப் பதினெட்டு - **<u>தக்ஷிண வேதை</u>**

மற்ற பரணிமுதல் 18-ஆவது நட்சத்திரங்களை வரிசைப் படுத்திக் கொள்ளுங்கள். அதாவது, பரணிக்கு 18, மூலம், கார்த்திகைக்கு 18, பூராடம், ரோகிணிக்கு 18, உத்திராடம்.

இதேபோல் 27 நட்சத்திரங்களுக்கும் வைத்துக் கொள்ளுங்கள்.

அடுத்து தேர் - ரோகிணி, இது அசுவினி முதல் 4-ஆவது நட்சத்திரம். இது வாமவேதை.

இதை பரணிக்கு 4-ஆவது ஆக்கினால் மிருகசீரிஷம் ரோகிணிக்கு 4 புனர்பூசம்.

இதேபோல் அசுவினி முதல் ரேவதி முடிய 4-ஆவது நட்சத்திரம் எதுவோ அது வாமவேதை. எண்ணிக்கையைக் காட்டவந்த ரோகிணியல்ல.

அடுத்து முறம், மன், அவுன், சதயமுதல் சதுர்த்தம்.

அதாவது - முறம் - விசாகம் 16. மன் - கேட்டை 18 அவுண் - மூலம் 19

சதயம் முதல் சதுர்த்தம் - சதயம் முதல் நான்கு.

அவை - சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி.

இம்மகி உதயம் ஆகம் - பூவுதயம் ஆம், அதாவது ஜென்ம நட்சத்திரத்திலிருந்து ஆகும்.

அவை மேல் - மேற்குறிப்பிட்ட நட்சத்திரத்தில் முறம் - விசாகம் 16. இது சாங்காதி - <u>சாங்காதியம்,</u> மன் - கேட்டை 18. இது <u>சமுதாயிகம்.</u>





(குறிப்பு) - இதுவே சமூக வேதையாகவும் வருவதைக் கவனியுங்கள்)

அவுண் - மூலம் 19. இது <u>ஆதானம்.</u> சதயம் - 24. இது, <u>தேசம்</u> பூரட்டாதி 25. இது மானதம் உத்திரட்டாதி - 26. இது சாதி, ரேவதி 27. இது <u>அபிஷேகம்.</u>

வேதை என்ற சொல் ஸம்ஸ்கிருதத்தில் (வேத) இதற்குப் பல பொருள்கள் உண்டு. ஆனால், இங்கு, அதாவது ஜோதிடக் கருத்தில் இதற்குத் துன்பம், தொல்லை, வருத்தம், சங்கடம், புண், மனப்புண் எனப் பொருள்படும்.

இக்கவியில் கொடுத்திருக்கும் வேதைகள் ஐந்து வகையான வேதைகள். அவை,

<u>நித்திய கிரக வேதை</u> - நாள்தோறும் கிரகத்தால் ஏற்படும் துன்பம்.

<u>தாற்காலிய கிரகவேதை</u> - இது குறித்த காலத்தில் குறித்த கிரத்தால் ஏற்படும் துன்பம். இது ஸம்ஸ்கிருதத்தில் <u>-தாத்கால்யம்</u> என்ற சொல்லாகும்.

3. <u>சமூகவேதை</u> - இது ஒரு குறிப்பிட்ட கூட்டம் அல்லது குழு அல்லது சமூகம். இதைச் சார்ந்தவர்களால் ஏற்படும் துன்பம்.

4. **<u>தக்ஷிணவேதை</u>** : அவரவர் நட்சத்திரத்துக்கு மற்றவர் நட்சத்திரம் இந்த தக்ஷிணம் என்ற வேதை இருந்தால், அதாவது அசுவினி நட்சத்திரக்காரர் அவருக்கு வேதையாகிய 18-ஆவது நட்சத்திரமான கேட்டை நட்சத்திரக்காரருடன் இருக்கும் இடத்திலிருந்து தெற்கு திசைப் பிரயாணம் செய்தால் இருவரும் போராடிக் கொண்டே செல்வர். ஒரு சுமுக நிலை இருக்காது.

5. <u>வாமவேதை</u> - இதுவும் அவரவர் நட்சத்திரத்திற்கு 4. வேதையாக வரும் நட்சத்திரக்காரருடன் (உதாரணமாக) ஓர் உத்திரட்டாதி நட்சத்திரக்காரர் பரணி நட்சத்திரக்காரருடன் வடக்கு திக்குப் பயணம் செய்தால் போகும்போதோ அல்லது

வரும்போதோ வீண் தர்க்கவாதங்கள் ஏற்படும். இவையே இந்த வேதையின் பலன்கள்.

அடுத்து சாங்காதியம் (சாங்காதிகம்) சமுதாயிகம், ஆதானம், தேசம், மானதம், அபிஷேகம் என்பதைப் பற்றி கவனிப்போம்.

சாங்காதியம் அல்லது சாங்காதிகம் என்பது ஒரு குழுவில் அல்லது ஒரு நிறுவனத்தில் உறவு கொள்வது, இணைந்து கொள்வது என்று பொருள். மேலும் ஒருவரைப் புதிதாகப் போய்ப் பார்த்தல், விருந்தாளியாதல், புதிதாக வருபவர் என்பதையும் குறித்தும்.

மேலும் ஒரு தொழில் அல்லது செயலை நடத்த வருபவர் என்றும் பொருள்.

அவரவர் நட்சத்திரத்து 16-ஆவது நட்சத்திரக்காரர் மேற்குறித்த செயல்களுக்குப் பயன்படுவர். அதாவது அசுவினி நட்சத்திரக்காரருக்கு விசாக நட்சத்திரக்காரர் பயன்படுவர். இதேபோல் மற்ற நட்சத்திரக்காரருக்கும் இணைத்துக் கொள்ளுங்கள்.

அடுத்து சமுதாயிகம், சமூக வேதைக்குக் கொடுக்கப்பட்ட 18-ஆவது நட்சத்திரமே கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால், அதைப் பயன்படுத்தி சரி செய்வது எப்படி என்பதைக் குறிக்கும்.

இனி 19-ஆவது நட்சத்திரம் ஆதானம். இதற்கு ஏற்றுக் கொள்ளுதல், ஏதேனும் ஒன்றில் ஒன்றை இருக்கச் செய்தல் அல்லது அதில் அடங்கச் செய்தல் என்னும் பொருள்கள் உண்டு. மேலும், அக்கினியைக் கொண்டு யாகம் நடத்துதல் என்றும் பொருள் தரும். உதாரணமாக திருவாதிரை நட்சத்திரக்காரர் தமக்கு 19-0ஆவது நட்சத்திரராகிய சதைய நட்சத்திரக் காரரை வைத்துக் கொண்டு மேற்குறித்த செயல்களில் இறங்கலாம். இதேபோல் 27 நட்சத்திரங்களையும் இணைத்துக் கொள்ளுங்கள்.





இனி 19-ஆவது நட்சத்திரம் ஆதானம்.

அடுத்து தேசம். இது 24-ஆவது நட்சத்திரம். எந்த ஒரு நட்சத்திரத்துக்கும் 24-ஆவது நட்சத்திரம் என்பதை மறவாதீர்கள்.

தேசம் என்பதற்குப் பொதுவாக இடம் என்றும் தேசம், நாடு என்றும் பொருள்.

குறிப்பு : இந்த தேசம் என்பதை பயன்படுத்துவதற்கு, அசுவினி முதல் ரேவதி முடிய உள்ள நட்சத்திரங்களின் உறுப்புக்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். அவை.

| | |
|---|---|
| 1. அசுவினி | சிரசு, தலை |
| 2. பரணி | நெற்றி |
| 3. கார்த்திகை | புருவம் |
| 4. ரோகிணி | கண் (இரு கண்) |
| 5. மிருகசீரிஷம் | மூக்கு |
| 6. திருவாதிரை | காது (இது காது) |
| 7. புனர்பூசம் | கன்னம் (இரு கன்னம்) |
| 8. பூசம் | உதடு |
| 9. ஆயில்யம் | உள்நாக்கு |
| 10. மகம் | மோவாய் |
| 11. பூரம் | கழுத்து |
| 12. உத்திரம் | புயம் (இருபுயம்) |
| 13. அஸ்தம் | இதயம் |
| 14. சித்திரை | வலக்கை |
| 15. சுவாதி | இடக்கை |
| 16. விசாகம் | வலது விலா |
| 17. அனுஷம் | இடது விலா |
| 18. கேட்டை | வயிறு |
| 19. மூலம் | நாபி (தொப்பூழ்) |

| | |
|---|---|
| 20. பூராடம் | சகனம் முதுகு |
| 21. உத்திராடம் | நிதம்பம் |
| 22. திருவோணம் | லிங்கம் |
| 23. அவிட்டம் | குய்யம் |
| 24. சதயம் | தொடை |
| 25. பூரட்டாதி | இரு முழங்கால் |
| 26. உத்திரட்டாதி | புறங்கால் |
| 27. ரேவதி | உள்ளங்கால் |

உடலில் அங்கங்களாகிய உறுப்புகள் என்பதற்கு எடுத்துக் காட்டாக ஸம்ஸ்கிருதத்தில் கூறப்பட்டுள்ளதைக் கவனியுங்கள்.

கபோலம் - மோவாய்க்கட்டை கன்னம்

ஸ்கந்தம் - புயம், தோள்

நிதம்பம் - நிதம்பத்தட்டு, இருதொடைச் சந்தும் அதன் மேற்பாகமும்

இந்த சொற்களோடு தேசம் என்பதை ஏழாம் வேற்றுமை உருபாக்கி

கபோலதேசே - மோவாய்க் கட்டையில்

ஸ்கந்ததேசே - தோளில், புயத்தில்

நிதம்பதேசே - நிதம்பத்தட்டில் எனக் கூறப்பட்டுள்ளது.

அப்படியானால், உறுப்பு ஏதேனும் ஒரு வகையில் தொல்லை கொடுக்கும் என்னும் பொருளாகும்.

உதாரணத்திற்கு ஒன்று - திருவோண நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு கேட்டை 24-ஆக வரும். இதன் உறுப்பு வயிறு. இந்த பாவத்துக்குரிய தசா-புத்தி வரும்போது வயிற்றுத் தொல்லை உண்டாகும்.

இதேபோல் மற்ற நட்சத்திரங்களுக்கும் கணக்கிட்டு உறுப்புகளை அறிந்து கிரக பாவ நிலைகளுக்கேற்றபடி பலன் கூறுக.





அடுத்து மனம். இதை மானதம் என்று பிரதிகளில் குறித்துள்ளது. கவியில் மனம் என்று பொருள் கூறும்போது மானதம் என்றும் சொல்லப்பட்டுள்ளதை சிறிது சிந்திக்க வேண்டியுள்ளது.

மனம் என்பதற்கு சிந்தை, உள்ளம், மூளை, விவேகம், அறிவு எனப் பொருள்படும். இதை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று நன்மனம் - நல்ல உள்ளம். துர்மனம் - கெட்ட உள்ளம்.

ஆகையால், ஜன்ம நட்சத்திரத்துக்கு 25-ஆவது நட்சத்திரம் அதன் ராசி, அதிபதி நட்சத்திர தசாநாதன், நட்சத்திர பாதசாரநாதன் இவைகளையெல்லாம் ஒன்று திரட்டி, ஜாதகருக்கு நல்ல மனமா, கெட்ட மனமா என்பதையும் அல்லது அந்த 25 நட்சத்திரக்காரர் ஜாதகருக்கு நல்ல மனம் உடையவரா? கெட்ட மனம் உடையவரா? அதன் பயன் என்ன என்பதைப் புரிந்து கொள்ள இந்த மனம் என்னும் சொல் உதவுகிறது.

ஆனால், இதற்கு மானதம் என்று புத்தக உரையில் பொருள் கொடுத்திருப்பது மனதிலிருந்து தோன்றும் செயல் எனக் குறிக்கும்.

ஆகையால் இரண்டையுமே பயன்படுத்திக் கொள்ளலாம். மனத்தோடு சம்பந்தப்பட்ட செயலுக்கு மானசிகம் என்ற பொருள் உண்டு. இத்துடன் பூஜை என்ற ஒரு சொல்லை இணைத்தால் மானசிகபூஜை என்பதாகும். இதில் சமர்த்தன் அர்ஜுனன். அதாவது கடவுளுக்குப் பூஜை செய்யும்போது நம்மிடத்தில் இல்லாத பொருட்களையும் கடவுளுக்கு கொடுத்து விட்டதாகவும், செல்ல முடியாத இடங்களுக்கு சென்று வந்ததாகவும், கொண்டுவர முடியாத இடத்திலிருந்து பொருட்களைக் கொண்டு வந்ததாகவும் மானசிகமாக எண்ணிக் கொண்டு பூஜை செய்வதே மானசிக பூஜையாகும்.

அடுத்து ஜென்ம நட்சத்திரத்துக்கு 26-ஆவது நட்சத்திரம் இனம். இதை உரையில் சாதி எனக் குறிக்கப்பட்டுள்ளது. இனம்,

சாதி, வகை, பிரிவு, குலம் எனும் சொற்கள் சிறு சிறு வேறுபாட்டில் ஒன்றையே குறிக்கும் சொற்களாகும்.

ஒவ்வொரு இனத்துக்கும் ஒரு குணம், நடவடிக்கை, பழக்க வழக்கம், பேச்சு, செயல், சடங்கு, சம்பிரதாயம், ஒழுக்கம், கொள்கை, உணவு, உடை, இருப்பிடம், நிலை ஆகிய இவையாவும் மாறுபட்டுத்தான் இருக்கும். இதை எங்கும் எப்பொழுதும் எல்லோரிடத்திலும் அன்றாட வாழ்க்கையில் கண்கண்ட உண்மையாகும்.

இதை உண்மையென நிரூபிக்க ஒரு வெண்பாவும் உண்டு. அது.

நீரளவேயாகுமாம் நீராம்பல், தான்கற்ற
நூலளவேயாகு மாம் நுண்ணறிவு - மேலைத்
தவத்தளவேயாகுமாம் தான் பெற்ற செல்வம்
குலத்தளவே யாகுமாம் குணம்.

- மூதுரை - 7

திருக்குறளில் இதற்கென ஓர் அதிகாரமே உள்ளது. அதாவது, ஒழிபு இயல் (டாக்டர் மு. வரதராசனார் கூற்றுப்படி குடியியல்) என்பதில் 96-ஆவது அதிகாரம் குடிமை என்பது. இங்கு பத்துக்குறளில் குலம் என்று கூறியே மூன்று குறள் உள்ளன.

1. சலம்பற்றிச் சால்பில செய்யார் மாசற்ற
குலம்பற்றி வாழ்வதும் என்பர் - 956

2. நலத்தில் கண்நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின் கண் ஐயப்படும் - 958

3. நிலத்தில் கிடந்தமை கால்காட்டும், காட்டும்
குலத்தில் பிறந்தவர் வாய்ச்சொல் - 959

இதிலிருந்து சாதி, குலம், உலகம் தோன்றியது முதல் உண்டென்றும், இதன் குணம் மாறாதென்றும் குறளின் மூலமாக உறுதியாக்கப்பட்டுள்ளது.





இன்னும் சிற்றினம் சேராமை என்னும் அதிகாரத்திலுள்ள பத்துக் குறட்பாக்களையும் கவனியுங்கள்.

இங்கு இன்னும் சற்று விரிவாகவே இந்த இனம், சாதி என்பதைப் புரிந்து கொண்டு குமாரசுவாமி ஆசிரியர் கூறிய பலனுக்கு வருவோம்.

அரசன் உயர்சாதி என்று பொருள்படும். ஆண்டி தாழ்ந்த சாதி என்று பொருள்படும். காரணம் அரசன் தொழிலை ஆண்டி செய்ய முடியாது. ஆண்டி தொழிலை அரசன் செய்ய முடியாது.

இன்னும் அரசன் அமைச்சனல்ல; ஒற்றன் அரசனல்ல; போர்வீரன் வேலையாளல்ல. வேலையாள் போர்வீரனல்ல; முதலாளி தொழிலாளி அல்ல; தொழிலாளி முதலாளி அல்ல; கற்றவன் மேலோனாவான் கல்லாதவன் (அறிவிலி) கீழோனாவான். தனவந்தன் மேலோனாவான். தரித்திரன் கீழோனாவான். கொடுப்பவன் மேலோனாவான். வாங்குவோன் கீழோனாவான். அதிகாரி மேலோனாவான். அடிமை கீழோனாவான்.

இவைபோல் இன்னும் ஏராளமாக உலகெங்கும் உள்ளன. ஆகையால் இனம் என்றும், சாதி, குலம், பிரிவு, வகை - அதற்கேற்ப குணம் நடையுடை பாவனை யாவும் உண்டென உறுதியாகின்றன. இதை மாற்றவோ, நீக்கவோ அடியோடு இல்லாமல் செய்யவோ யாராலும் முடியாது. அப்படி ஒருவேளை சாதி, இனம், குலம் இல்லை எல்லோரும் சமமே என்றால், பாரதியார் சொன்னது போல் "எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்றால் மன்னனுக்கு மந்திரி யார்? வழிப்பயணம் செய்வதற்கு வண்டியோட்டும் சாரதி யார்? மன்னனுக்கு உணவளிக்கும் சமையற்காரன் யார்? எல்லோரும் மன்னரானால் எதையும் செய்ய முடியாது. அன்றாடச் செயல்களே நடக்காது.

இதன் உட்பொருள் உயர்ந்ததை உயர்த்தியே பேசிக் கொண்டிராதே. தாழ்ந்ததைத் தாழ்த்தியே பேசிக் கொண்டிராதே

## நட்சத்திரப் பார்வை, தக்ஷிண வேதை, வாமவேதை, கர்ணவேதை, நாற்கோண வேதை சமுக வேதை

இயம், முறம், தார், வேய்முடி, ஆகு, இனன்தினம் நோக்கு - அயன்தார்
இறை, சோதி, மகம், மதிநாட்கு, எரி, சுடர், கண், தார், சேய்க்கு
அயம் நடவி, விதுபுதன் நேர் அசிதன் அளவு உளநாட்கு
அவுண், தீபம், அவுண், நுகம், நோய், குகன், குருநாட்கு அதிகம்
முயலகன் நேர்தார் அளவு - ஆன் முதல் கலையும் - பனை நேர்
மூன்று அரியும் - பரணி, சுடர் முறமும் - இயம், முடி, தீ
பயம் - வலம், மற்றது கவுள், நால் கோணம் மற்று ஆனைமாய்ப்
பவுமன் எமன் உறல், பரி, நேர், பகர்வது இதற்கு ஆமே (11)

இக்கவியில் ஆறு விபரங்கள் உள்ளன. ஒன்று நட்சத்திரப் பார்வை. இதன் முறைகளைக் கவனிப்போம்.

| | | |
|---|---|---|
| இயம் - | உத்திரட்டாதி | 26 |
| முறம் - | விசாகம் | 16 |
| தார் - | பூசம் | 8 |
| வேய் - | புனர்பூசம் | 7 |
| முடி - | உத்திராடம் | 21 |
| ஆகு - | பூரம் | 11 |

ஆக இந்த ஆறு நட்சத்திரங்களை சூரியன் நின்ற நட்சத்திரம் எதுவோ அது பார்க்கும்.

இதுவே இனன் நோக்கு எனப்படும்.

| | | |
|---|---|---|
| அயன் - | ரோகிணி | 4 |
| தார் - | பூசம் | 8 |
| இறை - | கேட்டை | 18 |
| சோதி - | சுவாதி | 15 |
| மகம் - | மகம் | 10 |

ஆக இந்த ஐந்து நட்சத்திரங்களை சந்திரன் நின்ற நட்சத்திரம் பார்க்கும். இதுவே மதிநோக்கு நாட்கு.

| | | |
|---|---|---|
| எரி - | கார்த்திகை | 3 |
| சுடர் - | சுவாதி | 15 |
| கண் - | புனர்பூசம் | 7 |
| தார் - | பூசம் | 8 |





சேய்க்கு - செவ்வாய்க்கு அதாவது இந்த நான்கு நட்சத்திரங்களை செவ்வாய் நின்ற நட்சத்திரம் பார்க்கும்.

| | | |
|---|---|---|
| அயம் நடவி - | கார்த்திகை | 3 |
| விது - | மிருகசீரிஷம் | 5 |

ஆக, இந்த இரண்டு நட்சத்திரங்களை புதன் நேர் - புதன் முதல்

அசிதன் அளவு - சனிவரை

அதாவது புதன், வியாழன், வெள்ளி, சனிவரை. உளநாட்கு - இவை நின்ற நட்சத்திரம் பார்க்கும்.

(குறிப்பு) : அயம் என்பது ஆடு. நடவி என்ற புது ஏறிச் செல்ல உதவுவது என்று பொருள். அதாவது வாகனம் எனப்படும். ஆகையால், ஆடு வாகனம் - அயவாகனம், அயவாகனன். நெருப்புக்கு அயவாகனன் என்ற பெயர் உண்டு. இந்த நெருப்பே கார்த்திகை ஆகையால் அயவாகனம் கார்த்திகை).

| | | |
|---|---|---|
| அவுண், தீபம் - | மூலம், சுவாதி | 19-13 |
| அவுண், நுகம் - | மூலம் - மகம் | 19-10 |

நோய்முகன், குரு நாட்கு அதிகம். சனி நின்ற நட்சத்திரத்துக்கும் குரு நின்ற நட்சத்திரத்துக்கும் அதிகம்.

அதாவது, சனி நின்ற நட்சத்திரத்துக்கு 19, 15-ஆம் நட்சத்திரமும், குரு நின்ற நட்சத்திரத்துக்கு 19, 10-ஆம் நட்சத்திரமும் அதிகப் பார்வை.

இவை யாவும் நட்சத்திரப் பார்வையாகும்.

**இரண்டாவது விபரம் :**

தக்ஷிண வேதை - அது முயலகன் நேர் தார் அளவு - ரோகிணி, முதல் பூசம் வரை 4-5-6-7-8

ஆன்முதல் கலையும் - உத்திரம் முதல் சித்திரையும் - 12-13-14. ஆக, 4--5-6--7-8, 12-13-14 இந்த எட்டு நட்சத்திரங்கள்.

பவுமன் = செவ்வாய். எமன் = சனி, உறல் = நின்ற நாளுக்கு

- பரிநேர் பகர்வது இதற்கு ஆம் அசுவினி முதல் சொல்லுவது அதற்கு ஆம்.

அதாவது சனி - சேய் நின்ற நட்சத்திரத்திற்கு 4-5--6-7,8, 12-13-14 ஆவது நட்சத்திரங்கள் தக்ஷிணவேதை (வலம்)

பனைநேர் மூன்று அறியும். அனுஷம் முதல் மூன்று திருவோணமும், 17-18--19-22 இந்த நான்கும் சனி-சேய் நின்ற நட்சத்திரத்துக்கு வாமவேதை (மற்றது) இது மூன்றாவது விபரம்.

பரணி - சுடர் - முறமும் = பரணி, சுவாதி - விசாகம் - 2-15-16 இந்த மூன்றும் சனி - சேய் நின்ற நட்சத்திரத்துக்கு நாற்கோண வேதை (நாற்கோணம்)

(குறிப்பு : பயம், என்று முடிந்து, வலம், மற்று, கவுள், நாற்கோணம் என நான்கையும் முறையே முயல்கன் என்று கூறியதிலிருந்து) வரிசைப்படுத்திக் கொள்ளவும். இது ஐந்தாவது விபரம்

மற்று ஆனனமாய்ப் பவுமன் எமன் உறல் பரிநேர் பகர்வது இதற்கு ஆமே.

இங்கு மற்று என்பது மேற்கூறிய நான்கு வேதைகளுக்கும் சொல்லப்படாத நட்சத்திரங்கள். சனிசேய் நின்ற நாளுக்கு சமூகவேதை எனப்படும்.

(ஆசிரியர் முகத்துக்கு ஆனனமாகிய பரியாயப் பெயரைக் கூறி சமூகம் எனக் காரணப் பெயராக்கியுள்ளார். ஆகையால், ஆனனம் சமூக வேதை எனப்படும்).

நான்கு வேதையிலும் சொல்லப்படாதவை -

9-10-11-23-24, 25-27 ஆக ஏழு நட்சத்திரங்களாகும். இவையே சமூக வேதை.

கிரகங்களுக்குப் பார்வை இருப்பது போல நட்சத்திரங்களுக்கும் பார்வை உண்டு என ஆசிரியர் கூறியுள்ளார். அப்படியானால், இந்த நட்சத்திரப் பார்வை எதற்குப் பயன்படுகிறது என்பது எந்த ஜோதிட நூலிலும் சொல்லப்





பட்டிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆகையால் இதைப்பற்றி ஆராய்வோம்.

பார்வை என்பது மக்கள் தேவர், நரகர், மிருகம், பறவை இவைகளுக்குத்தான் உண்டு. மரம், செடி, கொடி, புல், பூண்டு, கல், மண் ஆகிய இவைகளுக்குக் கண்கள் இல்லை. அதனால் பார்வையும் இல்லை. சரி, நட்சத்திரங்களுக்குக் கண்கள் இருக்கின்றனவா? அவைகளுக்கும் கண்கள் இல்லை. அப்படியானால் நட்சத்திரங்கள் எப்படிப் பார்க்கும். இது ஓர் அருமையான சிந்தனைக்குரிய வினா.

இதன் பார்வையைக் கவனிக்க. இந்த நட்சத்திரங்களைத் தெய்வமாக்கி, அந்த தெய்வத்தின் செயலைப் பார்வையாக்கி, பார்க்கப்படும் நட்சத்திரத்தையும் தெய்வமாக்கி, இரண்டு செயல்களையும் ஒன்று சேர்த்தால் ஓர் அபூர்வப் பலன் கிடைக்கும்.

உதாரணமாக ஒருவருக்கு செவ்வாய் தசா நடக்கிறது. செவ்வாய் மகர ராசியில் திருவோணத்தில் இருக்கிறதாக வைத்துக் கொள்வோம்.

திருவோணம் விஷ்ணு. இது காக்கும் கடவுள். வழக்கறிஞரான கடவுள், இந்தக் கடவுளாகிய திருவோணம், மூன்றாவது நட்சத்திரமாக சதயத்தையும், பதினைந்தாவதாகிய ஆயில்யத்தையும், ஏழாவதாகிய அசுவினியையும், எட்டாவதாகிய பரணியையும் பார்க்கிறது.

இனி இதன் செயலுக்கு வருவோம். சதயம் - எமன். இது ஆயுள் காலம் முடிந்தவரின் உயிரைக் கொண்டு செல்லும் கடவுள். ஆயில்யம் - ஆதிசேஷன். இது பூமியைத் தாங்கும் கடவுளாகவும், விஷ்ணுவுக்குப் படுக்கையாகவும், அதாவது படுக்கைக் கடவுளாகவும், சிவனுக்கு அணிகலனாகவும், சகக்களத்தி மகனாகிய கருடனுக்குப் பகைவராகவும் இருக்கும் கடவுள்.

அசுவினி - சரஸ்வதி. இது கல்விக்குரிய தெய்வம்.

பரணி - துர்க்கா. இது அதிசக்தியாகி பல சக்திகளைத் தன் கலாம்சத்தால் தோற்றுவிக்கும் மூல சக்தி தெய்வம்.

ஜாதகர் கும்ப லக்கினம் என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது, விஷ்ணு பன்னிரண்டில் இருந்து கொண்டு, லக்கினத்திலுள்ள எமனையும், ஆறிலுள்ள ஆதிசேஷனையும், மூன்றிலுள்ள சரஸ்வதி, துர்க்கா இவர்களையும் பார்க்கிறது.

இங்கு எமனால் நேரிடும் ஆபத்தை திருமால் தன் புத்தி சாதுரியத் திறமையால் தடுத்து விடுகிறார். ஆதிசேஷனை ஆதரித்து, ஜாதகருக்கு சிறிதேனும் அணிகலன் கொடுக்கிறார். பொறுப்புகளை அதிகமாக ஜாதகருக்குக் கொடுக்கும்படி செய்கிறார். அதேசமயம் சரஸ்வதியைத் தூண்டி கல்வியை வளரச் செய்கிறார். தாயாதி வர்க்கப்பகையை வளரச் செய்கிறார். நூல் வெளியிடச் செய்கிறார். துர்க்காதேவியைத் தூண்டி அவளால் ஏற்படும் கலாம்சங்களின் யாரேனும் ஒருவரைப் பற்றி மறைந்திருக்கும் தத்துவங்களை எடுத்துக் கூறும்படி ஜாதகருக்கு அறிவூட்டுகிறார்.

செவ்வாய் தசாவுக்கு, செவ்வாய் முருகன் ஆகிறான். முருகனும், திருமாலும் ஜோதிடத்துக்கு அதிபதிகள். ஆகையால் ஜோதிட ஆராய்ச்சி செய்து நூல் வெளியிடவும் தூண்டுகிறார்.

இந்த நட்சத்திரப் பார்வையை பயன்படுத்துவது மிகவும் சிக்கலானது. சிக்கலை விடுவித்தால் அற்புதமான பலன் கிடைக்கும்.

ஆகையால், ஜோதிட அறிஞர்களே இதேபோல் மற்ற கிரகங்கள் நின்ற நட்சத்திரத்தையும் அது பார்க்கும் நட்சத்திரத்தையும், தெய்வங்களாக்கி, அதன் செயல்களை ஜாதகர் மீது ஏற்றிக் கூறுங்கள்.

முயற்சி திருவினையாக்கும்.





## நட்சத்திரத்துக்கு இருப்பிடம்
## நட்சத்திரத்துக்கு தேசம்.

பரிமுதல் ஊர், தரு, வனம், காடிச்சால், கட்டிலின் கீழ்,
பாகன் இலாத்தேர்க்கீழ் நெல்குதிர், மனை, குப்பை, நெல்
அரிஅலது கதிர், வெறும், வீடு, அயம்கரை, செய், பருத்தி,
அங்கணம், பாழ்வனம், கடை, லாயம், கூரை, ஆடை
நிருமலம் செய்துறை, கோவில், ஆலை, செக்கு, மறுகு
நெருப்பிடத்தில், பூஞ்சோலை நிகழ்த்துவது ஈறு அளவும்
மருவும் இடப்பேர்க்கு - இதன்மேல் தேசமதற்கு அதன்பேர்
வைத்து அதற்கு அட்சரப்பெயரால் வழுத்துக மாமுதற்கே (12)

இக்கவியில் இரண்டு விபரங்கள் உள்ளன.

ஒன்று ஒவ்வொரு நட்சத்திரத்துக்கும் உரிய இருப்பிடங்கள் மற்றொன்று - நட்சத்திர தேசம்.

பத்தாவது கவியில் தேசம் என்று வந்துள்ளது வேறு. இதில் நட்சத்திர தேசம் என்பது வேறு.

அதில் இத்தனையாவது நட்சத்திரம் தேசம் என்பது.

இதில் நட்சத்திரங்களின் எழுத்துக்களை வைத்து தேசங்களைக் கூறுவது.

உதாரணமாக அசுவினிக்கு சு-சூ, செ-சே-சை-சொ-சோ என்பதை <u>செகந்தராபாத்</u> எனக் கூறலாம்.

| நட்சத்திரம் | கவியில் உள்ள பெயர் | பொருள் |
|---|---|---|
| அசுவினி | ஊர் | ஊர் |
| பரணி | தரு | மரம், விருக்ஷம் |
| கார்த்திகை | வனம் | வனம், காடு |
| ரோகிணி | காடிச்சால் | காடிச்சால் |
| மிருகசீரிஷம் | கட்டிலின்கீழ் | கட்டிலின் கீழ் |
| திருவாதிரை | பாகனிலாத் தேரின்கீழ் | நிற்கும் தேரின் கீழ் |

| | | |
|---|---|---|
| புனர்பூசம் | நெற்குதிர் | நெற்குதிர் |
| பூசம் | மனை | வீடு, இல்லம் |
| ஆயில்யம் | குப்பை | குப்பை |
| மகம் | நெல் அலது கதிர் | நெல்லரிசி (அ) நெற்கதிர் |
| பூரம் | வெறும் வீடு | வெறும் வீடு |
| உத்திரம் | அயம் | ஜலழ் நீர் |
| அஸ்தம் | செய் | ஜலக்கரை |
| சித்திரை | வயல் | வயல், கழனி |
| சுவாதி | பருத்தி | பருத்தி |
| விசாகம் | அங்கணம் | முற்றம் |
| அனுஷம் | பாழ்வனம் | பாழ்வனம் |
| கேட்டை | கடை | கடை |
| சூலம் | லாயம் | குதிரை லாயம் |
| பூராடம் | கூரை | கூரை |
| உத்திராடம் | ஆடை நீர்மரீ செய்துறை | துணி துவைக்குமிடம் |
| திருவோணம் | கோவில் | கோவில், ஆலயம் |
| அவிட்டம் | ஆலை | ஆலை, யந்திர ஆலை |
| சதயம் | செக்கு | செக்கு |
| பூரட்டாதி | தெரு | தெரு, வீதி |
| உத்திரட்டாதி | நெருப்பிடத்தில் | அக்கினி, மூலைக்கிருஹம் |
| ரேவதி | பூஞ்சோலை | பூஞ்சோலை |

இது காணாமல் போன பொருட்கள் அல்லது மக்கள் இருக்குமிடத்தைத் தெரிந்து கொள்ளவும், திருடர்கள் திருடிய பொருள் இந்த இடத்தில் இருக்குமெனவும் அறிய உதவுவது.





**<u>சுப நட்சத்திரம், அசுப நட்சத்திரம், மகா, தடா நட்சத்திரம், அபுத்த மூலம், இரு கண்ணுள் நட்சத்திரம், ஒரு கண்ணுள்ள நட்சத்திரம், குருட்டு நட்சத்திரம்.</u>**

மா, நீலம், தார், ஈறு, அத்,தேர், இரவி, மாலாய்
வரும் அனல் நேர்சுபம் - அசுபம், ஆம், முடி, புள், கேட்டை
கோ, நாவாய், துர்க்கை, பயறு, ஆகும்; முன்போல் அனல்நேர்
குருகின்முதல்கனல் இரண்டுக்குள் அபுத்தமூலம்
ஆன்நேர் என்று, மதி, கனல், அரவு, பொன், சுன், அருணன்
அனு அரவு சிதன் அளவு, அத் திசை சொல்வர் - அரிப்பேர்
தானார் நாள் முன்பின் மூன்று இதன் மேல் நான்கு, அலது, அந்த
தகம், ஒரு கண் இருகண் எனச் சாற்றுதல் அவ் இயல்பே.

இக்கவியில் சுப நட்சத்திரம் என்பதை முதலில் ஏழு நட்சத்திரங்களைக் கூறி, பிறகு செவ்வாய்க்கிழமை முதல், திங்கட்கிழமை முடிய இரண்டையும் இணைத்துக் கொள்ளுமாறு கூறியுள்ளார்.

மா = அசுவினி, நீலம் = அனுஷம், தார் = பூசம், ஈறு = ரேவதி (அத்), தேர் = ரோகிணி. இரவி = அஸ்தம், மால் = திருவோணம்.

அனல் நேர் என்பதைக் கவனிக்கவும். இனி இதை வரிசைப்படுத்தினால்,

அனல் - செவ்வாய். இதற்கு அசுவினி.

புதன் - அனுஷம், வியாழன் - பூசம், ஞாயிறு - அஸ்தம், திங்கள் - திருவோணம். இவ்வாறு கிழமையும், இந்த ஏழு நட்சத்திரங்களும் கூடிவரும் நாள் சுபநட்சத்திரம்.

இதேபோல் அசுப நட்சத்திர விதியைக் கவனிக்கவும்.

முடி - உத்திராடம், செவ்வாய் - உத்திராடம்; புள் - அவிட்டம், புதன் - அவிட்டம்; கேட்டை - கேட்டை - வியாழன் - கேட்டை; கோ - பூராடம் - வெள்ளி பூராடம்; நாவாய் - ரேவதி - சனி ரேவதி; துர்க்கை - பரணி - ஞாயிறு பரணி; பயறு - சித்திரை, திங்கள் சித்திரை.

இந்த ஏழு நட்சத்திரங்கள் குறித்த கிழமைகளில் வருவது அசுப நட்சத்திரம்.

<u>அபுத்தமூலம்</u> என்பதன் அமைப்பு:

குருகின் முதல் கனல் இரண்டுக்குள் <u>அபுத்தமூலம்.</u> அதாவது குருகின் - மூலத்தின் முதல் கனல் இரண்டுக்குள் முதல் இரண்டு நாழிகை இடை வெளிநேரம் - அபுத்த மூலம் எனப்படும். இதன் சரியான உச்சரிப்பு - <u>அபுக்தமூலம்.</u>

அபுக்தம் என்ற சொல்லுக்கு ஸம்ஸ்கிருத ஆங்கில அகராதியில் கொடுக்கப்பட்டுள்ள பொருள் : uneaten சாப்பிடப்படாத - unenjoied - மகிழ்ச்சி கொள்ளப்படாத - unused - உபயோகப்படுத்தப்படாத எனவும்,

One who has not eaten, enjoied, used - முதலியன அதாவது சாப்பிடாதவன் மகிழ்ச்சியடை யாதவன், பயன்படாதவன் எனப்படும்.

இது ஒரு சிந்தனைக்கு உரியதாகும். இதனோடு மூலம் என்பதைச் சேர்த்து அபுக்தமூலம் எனக் கூறப்பட்டுள்ளது.

இதில் இதன் பொருள் - The interval between the closing part of Jyestha (ஜ்யேஷ்டா) and beginning of Muls எனக் கூறப்பட்டுள்ளது.

இதற்குத் தமிழில் கேட்டையின் முடியும் பாகத்திற்கும் மூலத்தில் ஆரம்பிக்கும் பாகத்திற்கும் இடைவெளி என்பதாகும். இதுவும் ஒரு சிந்தனைக்குரியதாகும்.

எது எப்படியிருப்பினும், இந்த நேரம் ஒரு நன்மைக்கு உரியது அல்லது என விளங்குகிறது.

ஆசிரியர் கூற்றுப்படி, மூல நட்சத்திரம் ஒருநாள் காலை 8 மணிக்கு வந்ததென வைத்துக் கொள்வோம். எட்டு மணியிலிருந்து இரண்டு நாழிகைக்குள், அதாவது 48 நிமிஷ நேரம் <u>அபுக்தமூலம்</u> எனப்படும்.

சுபநட்சத்திரன் பலன். ஒரு ஜாதகர் செவ்வாய்க்கிழமையில் அசுவினி நட்சத்திரத்தில் பிறந்திருப்பாரேயானால், அது அவருடைய வாழ்க்கையில் ஒரு சிறப்பைத் தரும். இதேபோல் புதன் முதல் திங்கள் முடிய கணக்கிட்டுக் கொள்ளவும்.





அசுப நட்சத்திரத்தின் பலன், ஜாதகர் செவ்வாய்க்கிழமையில் உத்திராட நட்சத்திரத்தில் பிறந்திருந்தால், அது ஒரு சிறப்பைத் தராது. கோச்சாரத்திலும், இதே மாதிரி கூடினால் நன்மை, தீமை ஏற்படும்.

அடுத்து, மகா தசா நட்சத்திரம் ஒன்பது கிரகங்களுக்கும் மும்மூன்று நட்சத்திரங்கள் என்பது ஜோதிடம் கற்றுள்ள அனைவரும் அறிந்த ஒன்றே. ஆனால், இந்த ஆசிரியர் ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒவ்வொரு நட்சத்திரத்தையே கூறி, அதை தசா நட்சத்திரம் என்கிறார். அப்படியானால் மற்ற இரண்டு நட்சத்திரங்கள் இல்லை என்று பொருள் அல்ல.

ஒன்பது கிரகங்களில் தசா நட்சத்திரமாக, சூரியனுக்கு மட்டும் தன் ஆட்சி வீட்டில் தசா நட்சத்திரமாகிய உத்திரம் இராசியில் கடைசிப் பாதமாக அமைந்திருக்கிறது. இதற்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து வரிசையில் இரண்டாவது நட்சத்திரமாக எடுத்துள்ளார். அதாவது, கார்த்திகை, உத்திரம், உத்திராடம் ஆகிய இந்த மூன்றில் இரண்டாவது நட்சத்திரம் உத்திரம். இதேபோல் சந்திரனுக்கு அஸ்தம், செவ்வாய்க்கு சித்திரை, ராகுவுக்கு சுவாதி, குருவுக்கு விசாகம், சனிக்கு அனுஷம், புதனுக்கு கேட்டை என ஏழு கிரகங்களுக்கு இரண்டாவது நட்சத்திரத்தையும், கேதுவுக்கு மூலம், சுக்கிரனுக்குப் பூராடம் என மூன்றாவது நட்சத்திரத்தையும் எடுத்துள்ளார்.

இதை ஆசிரியர் கவியில் கூறியுள்ள அமைப்பைக் கவனியுங்கள்.

ஆன்நேர் - என்று, மதி, கனல், அரவு, பொன், சுன், அருணன், அனு அரவு, சிதன் - அளவு, அத்திசை சொல்வர் என்பதாகும்.

ஆன்நேர்- உத்திரம் முதல் என்பதாகும்.

என்று - சூரியன், மதி - சந்திரன், கனல் - செவ்வாய், அரவு - ராகு, பொன் - குரு, சுன் - சனி, அனுஅரவு - கேது, சிதன் - சுக்கிரன்.

இந்த வரிசைக்கு உத்திரம் முதல் பூராடம் வரை வரிசைப்படுத்திக் கொள்வது தசா நட்சத்திரங்கள் எனப்படும்.

அடுத்து குருடு, ஒருகண், இருகண் என்பது எப்படி எனக் கூறியுள்ளார். இது கவியில் வருமாறு :

அரிப்பேர் தானார் நாள், முன்பின் மூன்று, இதன் மேல் நான்கு அலது - அந்தகம், ஒரு கண் இருகண் - எனச் சாற்றுதல் அவ்இயல்பே.

அரி - சூரியன், தான் ஆர்நாள் - சூரியன் நின்ற நாள். ஆர் - தங்கு நில், இரு.

ஆர் + நாள் - ஆர்நாள், வினைத்தொகை.

இதற்கு முன்பின் மூன்று - அதாவது சூரியன் நின்ற நட்சத்திரமும், அதன் முன் மூன்று நட்சத்திரமும், பின் மூன்று நட்சத்திரமும் ஆக ஏழு நட்சத்திரங்கள் குருட்டு நட்சத்திரங்கள் எனப்படும்.

அந்தகம் - குருடு

இதன் மேல் நான்கு - இந்தக் குறிப்பிட்ட மூன்று நட்சத் திரங்களுக்கு முன்பின் நான்கு ஆக எட்டு நட்சத்திரங்கள் ஒருகண் நட்சத்திரம் எனப்படும்.

<u>அலது</u> - என்பது மேற்கூறிய குருடு, ஒரு கண் - அல்லாத நட்சத்திரங்கள் எனப்படும். இவை யாவும் இரு கண்ணுள்ள நட்சத்திரம் எனப்படும்.

உதாரணமாக - சூரியன் பூராடம் நட்சத்திரத்தில் இருப்பதாக வைத்துக் கொள்வோம். இது குருட்டு நட்சத்திரம் எனப்படும். இதற்கு முன்மூன்று அனுஷம், கேட்டை, மூலம் என்பவையும் பின் மூன்று உத்திராடம், திருவோணம், அவிட்டம் என்பவையும் குருட்டு நட்சத்திரங்கள் எனப்படும்.

அடுத்து முன் அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம் ஆகிய நான்கும், பின் சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி என நான்கும் ஆக எட்டும் ஒரு கண்ணுள்ள நட்சத்திரங்கள் ஆகும்.





அடுத்து அலது என்பதில் அடங்கிய அசுவினி முதல் உத்திரம் முடிய பன்னிரண்டு நட்சத்திரங்கள் இரு கண்ணுள்ள நட்சத்திரங்கள் எனப்படும்.

இதே சூரியன் நின்ற மற்ற நட்சத்திரங்களுக்கும் கணக்கிட்டு உணர்ந்து கொள்க.

இது ஜனன கால நிலை. கோச்சாரத்திற்கு அல்ல. கோச்சாரத்தில் கணக்கிட்டால் எல்லோருக்கும் பொதுவாகி விடும்.

## <u>நட்சத்திர ரோகம், நட்சத்திர அவமிருத்து, அனற்சிகை குரு தோஷம்</u>

அவ் அகிவாத்தியமும், அடுப்பு அவுணரும்; மால்குளமும்,
அற்கு இறைதீபமும் நேர்முன் அடி முதலாய் - ரோகம்
இவ் அடிதொட்டு உள மூன்றும் அவமிருத்து - அப்பரி நேர்
ஏழரைக்கு ஏழரை, அந்தத்து, ஐந்து, இருபத்து ஒன்று
கவ்வுவது ஒன்பான் இவை நேர் சோதி வரை முன்பின்
காண்பதும் எட்டு, இருபதின் மேல், கதுவுதல் பத்து இவை நேர்
வவ்வில் அனல் சிகையது; உவாப் பிரதமம் இவ்இடையில்
மருவும்விட கடிகையின் நாள் குகு மலயத்தவனே (14)

**இக்கவியில் நட்சத்திர ரோக விபரம் :**

அவ் அகி வாத்தியமும் - ஆயில்யம் உத்திரம் பாதியும்,

அடுப்பு அவுணரும் - பரணி மூலமும், மால்குளகும் - திருவோணம் உத்திரமும், அற்கு இறைதீபமும் - மிருகசீரிஷம் சுவாதியும்.

நேர்முன் அடிமுதலாய் ரோகம்:

முறையே - ஆயில்யம் உத்திரட்டாதியின் முதல் பாதமும்,
பரணி மூலத்தின் இரண்டாம் பாதமும்,

திருவோணம் உத்திரத்தின் மூன்றாம் பாதமும்,
மிருகசீரிஷம், சுவாதியின் நாலாம் பாதமும் - <u>ரோகம்</u>

ஆயில்யம் இருப்பது கடக ராசி. இதன் முதல் பாதம் அம்சை பெறுவது, தனுசு ராசி. இது ஆயில்யத்துக்கு <u>ரோகம்.</u>

உத்திரட்டாதி இருப்பது மீன ராசி. இதன் முதல் பாதம் அம்சை பெறுவது சிம்ம ராசி. இது உத்திரட்டாதிக்கு <u>ரோகம்.</u>

பரணி இருப்பது மேஷ ராசி. இதன் இரண்டாம் பாதம் அம்சை பெறுவது கன்னி. இது பரணிக்கு <u>ரோகம்.</u>

மூலம் இருப்பது தனுசு ராசி. இதன் இரண்டாம் பாதம் அம்சை பெறுவது ரிஷப ராசி. இது மூலத்திற்கு <u>ரோகம்.</u>

திருவோணம் இருப்பது மகர ராசி. இதன் மூன்றாம் பாத் அம்சை பெறுவது மிதுனராசி. இது திருவோணத்திற்கு ரோகம்.

உத்திரம் இருப்பது சிம்மத்திலும் கன்னியிலுமாகும். ஆனால் இது மூன்றாம் பாதம் அம்சை பெற வேண்டுமானால் கன்னி ராசியை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த மூன்றாம் பாதம் கும்பத்தில் அம்சை பெறும். ஆகையால் இதற்குக் கும்பத்தில் <u>ரோகம்</u> அதாவது உத்திரத்திற்கு <u>ரோகம்.</u>

மிருகசீரிஷம் இருப்பது ரிஷபத்திலும் மிதுனத்திலும். இது நான்காம் பாதம் அம்சை பெற வேண்டுமால், மிதுனத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். மிருகசீரிஷம் நான்காம் பாதம் விருச்சிகத்தில் அம்சை பெறும். ஆகையால் விருச்சிகத்தில் மிருக சீரிஷத்திற்கு <u>ரோகம்.</u>

இந்த ரோகம் என்பது நோய், பசி, பட்டினி, கடன், சண்டை, சச்சரவு, இவைகளைப் பற்றிக் கூறப்பயன்படும். இதைப் பன்னிரண்டு லக்கினத்தோடும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

மாதிரிக்கு ஒன்று. ஆயில்யம் முதல் பாதம் தனுசில் ரோகாம்சம் பெறுகிறதல்லவா? இங்கு கடக ராசி அதிபதி சந்திரன். தனுசு ராசி அதிபதி குரு. லக்கினம் மேஷம் என்று





வைத்துக் கொள்வோம். இந்த லக்கினத்துக்கு சந்திரன் நான்குக் குடையவன். குரு ஒன்பதுக்குடையவன். இங்கு நாலாம் பாவத்தின் காரகங்களை இணைத்துக் கொள்ள வேண்டும். ஒன்று சுகம் ஆரோக்கியம் கெடும். இரண்டு - தாய் எதிரியாவாள். மூன்றாவது - வீடு. வீட்டின் மேல் கடன் ஏற்படும். நாலாவது வாகனம். வாகனம் பழுதடையும். இதேபோல் மற்ற லக்கினங்களுக்கும் பாவகாரகத்தையும், நட்சத்திர ராசி நாதனையும், குறிப்பாக வயதையும் இணைத்துப் பலன் கூறவேண்டும்.

அடுத்து <u>அவமிருத்து</u> என்பதன் விபரம். இவ் அடிதொட்டு உள மூன்றும் <u>அவமிருத்து.</u> அதாவது ஆயில்யம் எட்டாமிடத்தில் அம்சை பெறும். இதுவே <u>அவமிருத்து.</u>

பரணி மூலம் நாலாம் பாதம். தனக்கு எட்டாமிடத்தில் அம்சை பெறும். இது <u>அவமிருத்து.</u>

அவிட்டம் - அஸ்தம். இவற்றின் முதல் பாதம் <u>அவமிருத்து.</u>
திருவாதிரை விசாகம் இரண்டாம் பாதம் <u>அவமிருத்து.</u>

இதை விபத்து, காயம், அவமானம், பழிச்சொல் இவைகளுக்குப் பயன்படுத்தலாம். இதையும் லக்கினம், வயது, தசா, புத்தி இவைகளை இணைத்துப் பலன் கூறவேண்டும்.

அதற்கு அனற்சிகையின் விபரம்

"அப்பரிநேர் என்று தொடங்கி வவ்வில் அனல் சிகையது" என்பது வரை கவனிக்கவும்.

அப்பரிநேர் - அசுவினி முதல் ஏழரைக்கு ஏழரை. நாழிகைக்கு மேல் ஏழரை நாழிகை.

அந்தத்து ஐந்து - கடைசியில் 5 நாழிகை. அதாவது 55 நாழிகைக்கு மேல் 5 நாழிகை.

இருபத்தொன்று கவ்வுவது ஒன்பான். 21 நாழிகைக்கு மேல் 9 நாழிகை. இவை நேர் <u>சோதி</u>வரை.

இதன் நுணுக்கம். அசுவினி முதல் சுவாதி வரை மொத்தம்

பதினைந்து நட்சத்திரங்கள். இங்கு சொல்லப்பட்ட நாழிகை விபரம் மூன்று. அதாவது அசுவினி ஏழரை நாழிகைக்கு மேல் ஏழரை நாழிகை என்றால், பரணிக்கு 55 நாழிக்கு மேல் 5 நாழிகை. பிறகு கார்த்திகைக்கு 21 நாழிகைக்கு மேல் 9 நாழிகை. இதேபோல் வரிசைப்படுத்தினால் வரும் நட்சத்திரங்கள்.

• அசுவினி - ரோகிணி - புனர்பூசம் - மகம் - அஸ்தம். இந்த ஐந்து நட்சத்திரங்களுக்கு ஏழரை நாழிகைக்கு மேல் ஏழரை நாழிகை. அனற்சிகை.

பரணி - மிருகசீரிஷம் - பூசம் - பூரம் - சித்திரை இந்த ஐந்து நட்சத்திரங்களுக்கும் 55 நாழிகைக்கு மேல் 5 நாழிகை அனற்சிகை.

கார்த்திகை - திருவாதிரை - ஆயில்யம் - உத்திரம் - சுவாதி. இந்த 5 நட்சத்திரங்களுக்கு 2 / (21) நாழிகைக்கு மேல் 9 நாழிகை அனற்சிகை.

அடுத்து முன்பின் காண்பதும் எட்டு, இருபதின்மேல் கதுவுதல் பத்து. இவை நேர் வவபவில் அனற்சிகையது.

இதன் நுணுக்கம். சுவாதிக்கு அடுத்து விசாகம். இதற்கு ஆதி எட்டு நாழிகை. அடுத்த நட்சத்திரம் அனுஷம். இதற்குக் கடைசி எட்டு நாழிகை.

இதைக் கவியில் அமைத்திருக்கும் முறை - விசாகம் - மூலம், திருவோணம், பூரட்டாதி இந்த நான்கும் ஆதி எட்டு நாழிகை அனற்சிகை.

அனுஷம் - பூராடம் - அவிட்டம் - உத்திரட்டாதி. இந்த நான்கும் கடைசியில் எட்டு நாழிகை அனற்சிகை.

அடுத்து இருபதின்மேல் கதுவுதல பத்து. அதாவது கேட்டை - உத்திராடம் - சதயம் - ரேவதி. இந்த நான்கும் 20 நாழிகைக்கு மேல் 10 நாழிகை அனற்சிகை.

இதை இன்னொரு வகையில் சுலபமாகத் தெரிந்து கொள்ளும் வழி.





| | | | | |
|---|---|---|---|---|
| 1. அசுவினி | ரோகிணி | புனர்பூசம் | மகம் | அஸ்தம் |
| 2. பரணி | மிருகசீரிஷம் | பூசம் | பூரம் | சித்திரை |
| 3. கார்த்திகை | திருவாதிரை | ஆயில்யம் | உத்திரம் | சுவாதி |

இதில் அசுவினி முதல் சுவாதி வரை என்றதை, படுக்கை வரிசையில் எழுதாமல், மேலிருந்து கீழாக மூன்று எழுதி, பிறகு மறுபடியும் வலப்பக்கம் மேலிருந்து மூன்று வருமாறு எழுதப் பட்டுள்ளதைக் கவனியுங்கள்.

இதில் முதல் வரிசை ஏழரை நாழிகைக்கு மேல் ஏழரை இரண்டாவது வரிசை 55 நாழிகைக்கு மேல் 5 நாழிகை மூன்றாவது வரிசை 21 நாழிகைக்கு மேல் 9 நாழிகை.

இந்த முறைக்குத்தான் கவ்வுதல் என்று பெயர்.

அடுத்து இதேபோல் விசாகம் முதல் ஒன்றின்கீழ் ஒன்றாக மூன்று வரை எழுதுங்கள். இதோ அவை வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. விசாகம் | மூலம் | திருவோணம் | பூரட்டாதி |
| 2. அனுஷம் | பூராடம் | அவிட்டம் | உத்திரட்டாதி |
| 3. கேட்டை | உத்திராடம் | சதயம் | ரேவதி |

இதில் முதல் வரிசையில் நான்கும் ஆதி எட்டு நாழிகை. இரண்டாவது வரிசை நான்கும் இறுதி எட்டு நாழிகை. மூன்றாவது வரிசை நான்கும் 20-க்கு மேல் 10 நாழிகை அனற்சிகை

இந்த முறைக்குத்தான் கதுவுதல் என்று பெயர்.

அடுத்து உவாப் பிரதமம். இவ்இடையில் மருவும் விட கடிகையில் நாள் குரு தோஷம். உவா என்பது அமாவாசை. பிரதமம் என்பது அமாவாசைக்கு அடுத்த பிரதமை திதி. இவ்இடையில் என்பது அமாவாசைக்கும் சுக்கில பட்சப் பிரதமை திதிக்கும் உள்ள நாழிகை.

மருவும் விடகடிகை நாள் என்பது இந்த நாழிகை உள்ள கால அளவில் எந்த நட்சத்திரம் வருகிறதோ, அந்த நட்சத்திரத்

தில் விட கடிகை ஏற்படுமேயானால், அந்த குறித்த நாழிகையளவு நேரம் குகுதோஷம் எனப்படும். அதாவது இந்த அமாவாசை நற்காரியங்களுக்குப் பயன்படாமல் தோஷமாகி விடும். குறிப்பாக இந்த அமாவாசையில் கொடுக்கும் திதி தோஷமாகி விடும்.

ஸம்ஸ்கிருதத்தில் குஹு அல்லது குஹூ என்ற சொல் ஹு-ஹூவுக்குப் பதிலாக கு எனவந்து குகு எனவாயிற்று.

பழைய அச்சுப்பிரதிகளில் குரு என்றிருப்பதை, இது ஸம்ஸ்கிருதச் சொல் என்று உணராமல் அப்படியே ஜோதிடர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். இது தவறு என்பதை உணர்ந்து குகு என உணர்ந்து கொள்வார்களாக.

குரு - Kuru. இவ்வாறு இந்த சொல்லை எடுத்துக் கொண்டால்,

Name of a country situated in the North of India about the site of the modern Delhi.

வட இந்தியாவில் தற்காலத்தில் அமைந்துள்ள புதிய டெல்லியாகும். இதை சொல்லாக எடுத்துக் கொண்டால் இந்த அமாவாசை தோஷத்திற்கும், குரு க்ஷேத்திரத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

இனி, குரு - Guru இந்தச் சொல் ஆசிரியரையும், தகப்பனாரையும் குறிக்கும். ஆகையால், இந்தச் சொல்லும் குருதோஷம் என்பதற்குப் பொருந்தாது. ஆகவே இது குகு (குஹூ) தோஷம் எனப்படும்.

நட்சத்திரங்களில் அனற்சிகை என்று கூறப்பட்ட நேரங்களில் மின் கருவிகள், எரி பொருள்கள், சமையல் வேலைகள், நெருப்பு உலைகள், ஒன்றுடன் ஒன்றைப் பற்ற வைக்க மின்சாரத்தை உபயோகித்தல் ஆகிய தொழில்களில் வேலை செய்பவர்கள் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அந்த நேரம் அவரவர் ஜன்ம நட்சத்திரமாக இருந்தால் இன்னும் அதிக எச்சரிக்கை தேவை. ஆயுதங்களோடு தொழில்





செய்பவர்கள் வாகனம் ஓட்டுநர்கள் - இவர்களும் இந்த நேரத்தில் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

அப்படியானால், ஜோதிடர்கள் அதிலும் இந்த நேரத்தைத் தினமும் கணக்கிட்டு வைத்திருப்பவர்கள் தானே எச்சரிக்கையாக இருக்க முடியும். மற்றவர் என்ன செய்வது என ஒரு வினா எழலாம். அதற்கு ஒரே வழி. அதாவது நாம் ஏதேனும் ஒரு காரியம் புதிதாகத் தொடங்கு முன், பிரயாணம் செய்யும் முன் சில அறிகுறிகள் நம்மைத் தடுப்பது போல் நமது உள்ளத்தில் சில உணர்வுகள் தோன்றும். அது இந்த அனற்சிகையின் தன்மைகளாகும். இதையுணர்ந்து சிறிது நேரம் அந்தக் காரியத்தையோ, பிரயாணத்தையோ தள்ளி வைப்பது அதற்கு பரிகாரமாகும்.

## நட்சத்திரயோகம், ஏகார்க்களம் ஆகுலம்

வனசன் முதல் முறம், நீர், புள், ஈறு, இரதம், பூசம்
வாவி இவை தொட்டு உதயம் ஆனதினத்து அளவு, ஆ
கினதை எழுவர்க்கு ஈதல் யோகம்; இருத்தை, கேடு
இறல் அமிர்தம், சுபம், சித்தம் பரிகம்; - இரு வினைப்பேர்
தனது உறல் நஞ்சு; - ஒரு வரைநேர் நிறுத்தி அதில் குறுக்காய்ச்
சாற்றும் வரை பதின் மூன்றாய்த் தரித்தல் சிரம் ஆகக்
கனல் முதல் ஊழ்க்கு எதிர் நாளில் யார் உறினும் ஏகார்க்
களம்; இருநாழிகை நாள் ஈறு ஆகுலம் மா தவனே! (15)

இக்கவியில் மூன்று விபரங்கள் அடங்கியுள்ளன. ஒன்று - நட்சத்திர யோகம். இரண்டு - ஏகார்க்களம், மூன்று - ஆகுலம். இதன் விபரம் வருமாறு:

வனசன் முதல் எனத் தொடங்கி தனது உறல் நஞ்சு என்பது வரை கவனிப்போம்.

வனசன்முதல் - ஞாயிற்றுக்கிழமை முதல் சனிக்கிழமை வரை என்று பொருள். கிழமைகளை நாமே வரிசைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அடுத்து முறம் எனத் தொடங்கி வாவி என ஏழு நட்சத்திரங்களைப் பரியாயப் பெயர்களாகக் கூறியுள்ளார். இந் ஏழு நட்சத்திரங்களையும் ஏழு கிழமைகளோடு இணைப்போம்.

ஞாயிற்றுக்கிழமையில் முறம் - விசாகம். திங்களில் நீர் - பூராடம், செவ்வாயில் புள- அவிட்டம், புதனில் ஈறு - ரேவதி, வியாழனில் இரதம் - ரோகிணி, வெள்ளியில் - பூசம், சனியில் வாவி - உத்திரம். ஆகிய இந்த ஏழு நட்சத்திரங்களை ஏழு கிழமைகளுக்கு உரிமையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

இவை தொட்டு உதயமான தினத்து அளவு ஆகினதை எழுவர்க்கு ஈதல் - யோகம்.

அதாவது ஞாயிறுக்கு விசாகம். நாம் ஏதோ ஒரு ஞாயிறன்று என்ன யோகம் என்று பார்க்க வேண்டும். அந்த ஞாயிறு சுவாதி நட்சத்திரம் என்று வைத்துக் கொள்வோம். இதற்கு ஞாயிறுக்குக் கூறிய விசாகத்திலிருந்து சுவாதி வரை எண்ணினால் 27 வருகிறது. இதை ஏழால் பகிர்ந்தால் 3ஏ7121, 27-2Ĩ6. 6 மிச்சம் வருகிறது. இதேபோல் மற்ற கிழமைகளுக்கும் செய்து கொள்ளுங்கள்.

இவ்வாறு வரும் தொகை மிச்சம் ஒன்றுக்கு இருத்தை யோகம் என்றும், இரண்டுக்கு நாசயோகம் என்றும், மூன்றுக்கு மரண யோகம் என்றும், நான்குக்கு அமிர்தயோகம் என்றும், ஐந்துக்கு சுபயோகமென்றும், ஆறுக்கு சித்தயோகம் என்றும் பெயர்.

"இருவினாப்பேர் தனது உறில் நஞ்சு" என்பதன் பொருள் :

சுபம் அசுபம் கூடில் விஷயோகம் என்பதாகும்.

அதாவது ஒரு நாளையில் இரண்டு நட்சத்திரங்கள் வரும்போது மேற்கூறியபடி கணக்கிட்டால் சுபமும் அசுபமும் கலந்து வந்தால் விஷயோகமாகும்.

குறிப்பு : இருத்தை, நாசம், மரணம் இம்மூன்றும் அசுபயோகம். அமிர்தம், சுபம், சித்தம், பரிகம் இந்நான்கும் சுபயோகம்.






அடுத்து ஏகார்க்களம். இது "ஒரு வரை நேர்நிறுத்தி" எனத் தொடங்கி, யார் உறினும் ஏகார்க்களம் என்பது வரை காண்.

அதாவது ஒரு வரையினை நேர்நிறுத்தி, குறுக்காகப் பதின்மூன்று வரை கீறி, உச்சி வரையில் கார்த்திகை முதலாக நட்சத்திரங்களை வைத்து சூரியன் நின்ற நட்சத்திர வரைக்கு எதிர் வரை நட்சத்திரத்தில் கிரகங்கள் நிற்கில் அது ஏகார்க்களம்.

இதுவரை என்பது முடிவைக் குறிப்பது அல்ல. கோடுகளைக் குறிப்பதாகும்.

**ஏகார்க்கள சக்கரம்**



அடுத்து, "இருநாழிகை நாள் ஈறு ஆகும் மாதவனே" என்பது:

நட்சத்திர அந்திய இரண்டு நாழிகை கால அளவு, அதாவது நாற்பத்தெட்டு நிமிஷ நேர அளவு - ஆகுலம் எனப்படும். (ஆகுலம் - கலக்கம், துன்பம்)

ஒரு நட்சத்திரம் 4-ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு, கடைசி இரண்டு நாழிகையில் பிறந்தவர்களுக்கு இது ஆகுலம்.

ஏகார்க்களம் என்பது விவசாயிகளுக்கு ஏர்பூட்ட நாள் குறிக்க உதவும்.

உதாரணமாக, ரோகிணியில் சூரியன் இருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். அதற்கு எதிர் வரையில், இடது கைப்பக்கமாக பரணி இருக்கிறது. ஆகவே, பரணி நட்சத்திரம் ஏர்பூட்ட நல்ல நாளாகும்.

இது, இக்கால Tractor என்னும் இயந்திரக் கலப்பை உபயோகிப்பவர்களுக்கும் பொருந்தும்.

**நட்சத்திர தாத்கால அஜீவார்த்த ஜீவர்ஜீவ ஜீவன் சூலம், மகாசூலம், சலாவேன்தபாலுள்ள நட்சத்திரம், மலடு அல்லது வயிரமுள்ள நட்சத்திரம்.**

தபனன் உறும் நாட்டு இடம் ஒன்று, ஏழ், ஏகம், நான்காய்
சாவது, அரை, சாதல், உயிர், சாற்றுவர்; மற்றவைக்கும்;
சுடர் விது நேர் நாள் சூலம்; பவர்க்கு மகா சூல் பேர்;
சுசிமுதல் நாள் ஏழ்வரை நால் முகத்து இடமேல் தொழில் ஆம்;
உபயவரை கோண் உற மற்று ஐ வரை முன்போல
உறில் அது சலாவேதை இவர்கள் உறில்; உருள், தீ
அபயம் முதல் நாழி முதல் மூன்று, தைநேர் ஆறும்
அறைவது இப்பால்; அப்பால் பன்மூன்றும் மற்று ஆகுதே (16)





இதன் பொருள் : தபனன் - சூரியன், உறுநாட்கு - நின்ற நட்சத்திரத்திற்கு, இடம் - அதாவது சூரியன் நின்ற நட்சத்திரத்திற்கு இடம் வலமாகிய இரு பக்கம்.

ஒன்று - இருபக்கமும் ஒவ்வொன்று, ஏழ் - இரு பக்கமும் எவ்வேழு; ஏகம் - இருபக்கமும் ஒவ்வொன்று; நான்காய் - இரு பக்கமும் நந்நான்கு.

சாவது - மாரணம் (மரணம்) அரை - அர்த்தப் பிராணன் (அரை உயிர்;) சாதல் - மரணம்; உயிர் - முழு ஜீவன். இதை வரிசைப் படுத்தினால் -

ஒன்று - மாரணம்; ஏழ் - அர்த்தப் பிராணன், ஏகம் - மாரணம், நான்கு - முழு ஜீவன்.

இதற்கு எடுத்துக்காட்டாக அசுவினி என்ற முதல் நட்சத்திரத்தை எடுத்துக் கொள்வோம்.

அதாவது சூரியன், அசுவினியில் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்படியானால், அதற்கு இடம் பரணி, வலம், ரேவதி இந்த இரண்டும் மாரணத்தைக் குறிக்கும், அடுத்து இடம் - ஏழு, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிஷம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம் - இந்த ஏழும்.

வலம் ஒழுகு உத்திரட்டாதி, பூரட்டாதி, சதையம், அவிட்டம், திருவோணம், உத்திராடம், பூராடம் ஆகிய இந்த ஏழும் ஆக பதினான்கு நட்சத்திரங்கள் - அர்த்தப் பிராணன் (அரை உயிர்)

அடுத்து இடம் ஒன்று. மகம் வலம் ஒன்று மூலம். இவ்விரண்டும் மாரணம்.

அடுத்து, இடம் நான்கு. பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை வலம் நான்கு. கேட்டை, அனுஷம், விசாகம், சுவாதி ஆகிய இந்த எட்டும் முழுஜீவன் உள்ள நட்சத்திரங்களாகும். இதேபோல் மற்ற நட்சத்திரங்களுக்கும் கணக்கிட்டுக் கொள்க.

குறிப்பு : இக்கவியின் தலைப்பு நட்சத்திர தாத்கால ஜீவா ஜீவன் என்பதாகும். தாத்காலம் என்பது ஸம்ஸ்கிருதம். இது தமிழில் தற்காலம் எனப்படும்.

எப்பொழுது ஒரு காலத்தை - அதாவது நிகழ்காலத்தை எடுத்துக் கொள்கிறோமோ, அக்காலம் ஏதேனும் ஒரு குறித்த காலம்.

ஜீவா ஜீவன் என்பது ஜீவ அஜீவ என்ற இரண்டு சொற்களாகும். ஜீவ என்பது உயிருள்ளது. அஜீவ என்பது உயிர் இல்லாதது.

கவியிலும் உரையிலும் கொடுக்கப்பட்டுள்ள பொருளின்படி பார்த்தால், இந்த ஜீவா ஜீவன் என்ற தலைப்பு சரியில்லை எனத் தோன்றுகிறது. காரணம் சாவது என்பதற்கு அஜீவன் என்றிருக்க வேண்டும். அடுத்து அரை என்பதற்கு அர்த்த ஜீவன் என்று வரவேண்டும். அடுத்து சாதல் என்பதற்கு ஜீவன் என்று இருக்க வேண்டும். இவ்வாறு இந்நான்கையும் வரிசைப்படுத்தி னால் அஜீவ + அர்த்த ஜீவ + அஜீவ - ஜீவன். இதை ஒன்றாக இணைத்தால்,

அஜீவார்த்த ஜீவா ஜீவ ஜீவன் என வரவேண்டும். இது அச்சிடும் காலத்தில் முற்பகுதியை விட்டுவிட்ட குறையாக இருக்கலாம். அறிஞர்கள் சிந்திக்கவும். ஜீவாஜீவன் என்றால் ஜீவ + அஜீவ என்னும் இரண்டு தன்மைகள் தானே வருகின்றன.






இங்கு நான்கு தன்மைகள் குறிக்கப்பட்டுள்ளனவே. அதற்கு, அதாவது மீதமுள்ள இரண்டு சொல் எங்கே?

அடுத்து சூலத்தையும், மகா சூலத்தையும் கவனிப்போம். ஏழ்வரை நால்முகத்து இடகீழ்மேல் ஏழு கோடுகளும் தென்வடல் ஏழு கோடுகளும் இட்டு,

சுசிமுதல் நாள் = கார்த்திகை இடப்பால் உச்ச வரையில் வைத்து ரேவதி முடிய எதிர் வரையில். சுபர் நாள் - சுபர் நிற்கில் சூலம் (சந்திரன் நின்ற நாளுக்கு பாவர் நிற்கில் - மகாசூலம் மதி நின்ற நாளுக்கு மேல் தொழில் ஆம். இதுவே மேற்கூறிய செயலாம்)

**சூலம், மகா சூலம்**




அடுத்து சலாவேதை என்பதைக் கவனிப்போம்.

உபய வரை கோணஉற மற்றுஜ வரை முன்போல உறில்

- அது சலா வேதை இவர்கள் உறில்;

கிழ்மேல் ஐந்து வரையும் தென்வடல் ஐந்து வரையும் கீறி, இடப்பால் உச்ச வரையில் கார்த்திகை முதலாக நட்சத்திரங்களை வைத்து, மதி நின்ற நட்சத்திர வரைக்கு எதிர்வரை நட்சத்திரத்தில் கிரகங்கள் நிற்கில் சலா வேதை எனப்படும்.

## சலா வேதை சக்கரம்






குறிப்பு : இக்கவியில் கூறிய சூலம், மகாசூலம் என்பது கிழமைகளுக்குக் கூறிய நாழிகை வரையுள்ள நேரமாகிய திசைச் சூலமல்ல.

சூலம், மகாசூலத்திற்கும் ஓர் உதாரணம்,

சந்திரன் திருவாதிரையில் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அதற்கு நேர் எதிர் வரை நட்சத்திரம் பூராடம். இந்தப் பூராடத்தில் புதன் குரு சுக்கிரன் இருந்தால் சூலம். சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது இருந்தால் மகாசூலம்.

இதேபோல் மற்றவைக்கும் கணக்கிட்டுக் கொள்க.

சலாவேதைக்கு ஓர் உதாரணம்.

சந்திரன் இதே திருவாதிரையில் இருப்பதாக வைத்துக் கொள்வோம். இதற்கு எதிர் வரையில் பூராடம் இருக்கிறது. இந்தப் பூராடத்தில் சூரியன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது ஆகியவற்றில் எந்தக் கிரகம் இருந்தாலும் அது சலா வேதையாகும்.

இதேபோல் மற்ற நட்சத்திரங்களுக்கும் கணக்கிட்டுக் கொள்க.

### அடுத்து பாலுள்ள நட்சத்திரம்

உருள், தீ, அபயம் முதல் நாழிமுதல் மூன்று, தைநேர் ஆறும் அறைவது இப்பால்.

இதன் பொருள் : உருள் - ரோகிணி, தீ - கார்த்திகை. அபயமுதல் நாழிமுதல் மூன்று இதன் விரிவு. அபயம் முதல் மூன்று, நாழிமுதல் மூன்று என்பதாகும். இங்கு செய்யுளின் எதுகை நோக்கி பயம் என்பது, புறச்சுட்டாக்கி அபயம் எனக் கூறியுள்ளார்.

அபயம் என்பது அடைக்கலம் என்ற பொருளல்ல. அந்த + பயம் அபயம்; அந்த நீர். அதாவது அந்தப் பூராடம், உத்திராடம், திருவோணம் என்பனவாகும்.

நாழி முதல் மூன்று. நாழி = பூரட்டாதி. ஆகையால் பூரட்டாதி முதல் மூன்று. பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி என்பனவாகும்.

தை நேர் ஆறு என்பது தை- பூசம், பூசம் முதல் ஆறு. அதாவது, பூசம், ஆயில்யம், மகம், பூரம், உத்திரம், ஹஸ்தம்.

ஆக, உருள் - தீ - 2, அபயமும் - 3. நாழிமுதல் 3. தைமுதல் ஆறு. மொத்தம் 14 நட்சத்திரங்கள் பாலுள்ள நட்சத்திரங்கள்.

அடுத்து மலடு அல்லது வயிரமுள்ள நட்சத்திரம். "அப்பால் பன்மூன்று ஆகுவதே; அதாவது அதற்கடுத்த பதின்மூன்று நட்சத்திரங்கள் மலடு அல்லது வயிரமுள்ள நட்சத்திரங்கள் என்பதைக் குறிக்கும்.

இனி, அப்பதின் மூன்று நட்சத்திரங்களாவன:

அசுவினி, பரணி, மிருகசீரிஷம், திருவாதிரை, புனர்பூசம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், அவிட்டம், சதையம் என்பனவாகும்.

குறிப்பு : இந்தப் பாலுள்ள நட்சத்திரத்தைக் கண்கூடாக உணர்ந்து கொள்வதற்கு ஒரு வழியுள்ளது. கவி மூன்றில் நட்சத்திரத் தரு என்பதைக் கவனியுங்கள். அதில் பதினான்கு நட்சத்திரங்களுக்குக் கூறப்பட்ட தரு அதாவது மரங்களை சிலவற்றையாவது பார்த்திருப்பீர்கள். அந்த மரங்களின் அடிப்பாகத்தைக் கல்லால் தட்டினால் ஒருவகை நீர்வடியும் இதுவே பால் எனப்படும்.

ஓர் ஆலமரத்தின் அடிப்பாகத்தைக் கல்லால் தட்டிப் பாருங்கள். அதில் ஒருவித நீர் வடியும். அது ஆலம்பால். நாவல் மரத்தில் பிசின் போன்ற நீர் வடியும். வேப்ப மரத்தில் வடியும் நீர் பிசினேயாகும். எருக்கிலையை ஒடித்துப் பாருங்கள். வெண்மையாகப் பால் வடியும். இது எருக்கம்பால் எனப்படும்.

இதேபோல் பாலுள்ள நட்சத்திரத்திற்கு சொல்லப்பட்ட மரங்களைக் கல் கொண்டு தட்டிப் பாருங்கள். உண்மை





விளங்கும். மலடு என்று சொல்லப்பட்ட மரங்களைக் கல் கொண்டு தட்டிப் பாருங்கள். எதுவும் வடியாது.

ஆனந்த போதினியாக இருந்து தற்போது வாசன் என்னும் பெயரோடு கையாளப்பட்டு வரும் பஞ்சாங்கத்தைப் பாருங்கள். அதில் நட்சத்திரக் குறியிட்டு, இவை பாலில்லாத விருட்சங்கள் என்று அச்சிடப்பட்டிருக்கும். இதில் ஒரு விதிவிலக்கு வேம்பு என்பதற்கும் நட்சத்திரக் குறியிடப்பட்டுள்ளது. இதனால், இது பாலில்லாத மரம் என்று பொருள்படுகிறது. அப்படியல்ல. வேம்பு பாலுள்ள மரமே. இதிலிருந்து தான் ஒட்டும் இயற்கைப் பசையாகிய பிசின், அதாவது கோந்து கிடைக்கிறது. இதனால் நான் பஞ்சாங்க ஆசிரியரைக் குறைகூறவில்லை. அச்சுப் பிழையாக இருக்கலாம். அல்லது பால் என்றால் வெண்மையாகத் தானே இருக்க வேண்டும். இது பிசினாக இருக்கிறதே! இது எப்படிப் பால் என்று சொல்வது என்ற கருத்தோடு இதைப் பாலில்லாமரம் என்று கூறியிருக்கலாம். ஜோதிடர்கள் இதை ஆராய்ச்சிக்கும் நடைமுறை அனுபவத்திற்கும் எடுத்துக் கொள்ளுங்கள்.

**<u>கீழ் அல்லது பூமிநிலை நட்சத்திரம், உச்சநிலை நட்சத்திரம், இடைநிலை நட்சத்திரம், ஜல-சுஷ்கநட்சத்திரம் கும்ப பூர்த்தி</u>**

ஆகு அதனின்பால் கோண் ஒன்பதும் மதிக்கோண் மூன்றும்
அல்லதும் நேர்கீழ்மேல் மற்றதும் ஆம்; அம்புலிமால்
வாகனன் கைமுதல் நான்கும் மால் கணுக்கு ஈர் மூன்றும்
ஆக இவை ஈராறும் அறல் எனல்; மற்று அதுஆம்;
கோகனகன் நால்திசைநேர்க் குறித்த வரைக்கு இடையில்
குறுக்கு உயரம் மும்மூன்றாய் குறுக முடிக்கனல் ஈது
ஏம்முதல் திசை நான்கும் இடையில் இரு மூன்றும்
இகழ்தல் இது சால் பூர்த்திப் பெயரது என்பாரே (17)

இதன் பொருள் - ஆகு - பெருச்சாளி, பூரம். அதனின்

பால் - இந்தப் பூரத்தின் இருபக்கங்களிலும், கோண். ஒன்பது; திரிகோண நட்சத்திரங்கள் ஒன்பது.

பூரத்தின் இருபக்கம் மகம் உத்திரம். பூரத்தின் கோண -பரணி, பூரம், பூராடம், மகத்தின் கோண் - அசுவினி, மகம், மூலம். - உத்திரத்தின் கோண = கார்த்திகை, உத்திரம், உத்திராடம் - ஆக ஒன்பது.

மதி - மிருக சீரிஷம் - இதன் கோண்- மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம் ஆக மூன்று. அல்லது மேற்கூறிய பன்னிரண்டு நட்சத்திரங்கள் அல்லாதவை. அவை வருமாறு :

ரோகிணி, அஸ்தம், திருவோணம், பூசம், அனுஷம், உத்திரட்டாதி, திருவாதிரை, சுவாதி, சதையம், ஆயில்யம், கேட்டை, ரேவதி ஆக பதினைந்து.

இவை முறையே - ஒன்பது கீழ்நிலை நட்சத்திரம்.

மூன்று உச்சநிலை நட்சத்திரம். பதினைந்து இடைநிலை நட்சத்திரம். கவியில் கூறியிருப்பதும், கீழ் - மேல் மற்றது என்பதைக் கவனியுங்கள்.

அடுத்து ஜல நட்சத்திரங்கள். அம்புலி (சந்திரன்) மிருகசீரிஷம் மால்வாகனன் (இந்திரன்) கேட்டை (மால் - மேகம்)

கைமுதல் நான்கு - கை - அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், மால் கணுக்கு ஈர் மூன்று - அதாவது மால் முதல் மூன்று, கண்முதல் மூன்று மால் - திருவோணம், அவிட்டம், சதயம், கண் - புனர்பூசம் - பூசம் - ஆயில்யம் ஆக இந்தப் பன்னிரண்டும் ஜல நட்சத்திரம்.

இது கவியில், ஆக இவை ஈராறும் அறல் எனல் என்பதைக் கவனியுங்கள்.

மற்று அதுவாம் என்பது சுஷ்க நட்சத்திரம். அதாவது ஜலம் அல்லாதவை என்று பொருள். (சுஷ்கம் - Dry- வறட்சி) அவை:

அசுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, திருவாதிரை, மகம், பூரம், உத்திரம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி இவை






பதினைந்து நட்சத்திரங்களாகும்.

அடுத்து கும்பபூர்த்தி. இதைக் கவியில் கோகனகன் எனத் தொடங்கி பெயரது என்பாரே முடிய கவனியுங்கள்.

கீழ்மேல் ஒரு வரையும் தென்வடல் ஒரு வரையுமாகக் கீறிகோண் நிலவ ஆறு வரை நேர் குறுக்காகக் கீறி, உச்சி வரையில் கார்த்திகை முதலாக நட்சத்திரங்களை வைத்து, ரவி, நின்ற நட்சத்திரத் திசை வரை நட்சத்திரத்தில் கிரகமிருக்கிற நான்கு திசை நட்சத்திரமும் விளக்கப்படுவன. கோண்வரை ஆறும் உள்ள நட்சத்திரங்களில் ரவியும், கிரகங்களும் கலக்கில் அக்கோண் வரை நட்சத்திரங்கள் ஆறும் விலக்கப்படுவன.

இதுவே கும்பபூர்த்தி.

## கும்ப பூர்த்தி சக்கரம்



உதாரணம் (1)

சூரியன் கார்த்திகையில் இருந்தால், மற்ற மூன்று திசைகளான மகம், அனுஷம், அவிட்டம் ஆக நட்சத்திரங்களும் விளக்கப்படுவனவாகும்.

மாதிரி (2)

சூரியன் ரோகிணியில் இருந்தால், மிருகசீரிஷம், திருவாதிரை, உத்திராடம், அபிஜித்து, திருவோணம் இந்த ஆறும் விளக்கப்படுவன. இதேபோல் மற்றவரை மூன்றுக்கும் கணக்கிட்டுக் கொள்க.

## வேதைக்கயிறு, சுபமங்கள ரஜ்ஜு ஸ்திரீ தீர்க்கப் பொருத்தம்

பரைக்கோண் மாறிக் கீறிக் குறுக்கு ஒரு நான்காய் அப்

பாற்கு இருகோண் நந்நான்காய் பற்றுவரைக்கு இடப்பால்

சிரப்பால் மா வைத்து இருவர் தினமும் ஒரு வரையில்

சேருதல் ஆகாது, இதுவேதைக்கயிறு; சேடன்

அரிக்கோண், தார், நீர்க்கோண், தீப் படிக்கோண் மால் யாழ்க்கோண்

அடி, மருங்குல், அகடு, களம், அம்புலிக்கோண் சிரசாய்ப்

பொருத்து; ஆண்பெண்நாள் ஒரு கோண் உறில் அவம் அச்சனனம்

புகல் - பதின் மூன்று இவள் நாள்மேல் புலல் இவள் தீர்க்கமுமே (18)

வேதைக் கயிற்றின் அமைப்பு முறை :

பரைக்கோண் என ஆரம்பித்து இது வேதைக்கயிறு என்பது முடிய விளக்கம்.

முக்கோணம் முனை மேலாகக்கீறி குறுக்காக நந்நான்கு வரை கீறி, இரு கோணங்களுக்கு மேலாக நான்கு வரை கீறி, இடப்பால் உச்ச வரையில் அசுவினி முதல் நட்சத்திரங்களை வைத்து, ஆண் பெண் நட்சத்திரம் ஒருவரையில் வரில் ஆகாது. இது வேதைக் கயிறு.





அடுத்து சுபமங்கள ரஜ்ஜு என்பதைக் கவனிப்போம்.

சேடன் அரிக்கோண். இது சேடன்கோண் அரிக்கோண் என இரண்டு கோண் என்பதற்குப் பதிலாக ஒரே முறையில் கோண் என செய்யுள் நோக்கி, சுருக்கப்பட்டுள்ளது.

சேடன் (சேஷன்) ஆதிசேஷன். இதுவே ஆயில்யம். இதன் கோண் ஆயில்யம், கேட்டை, ரேவதி

அரிக்கோண் - அரி - அசுவினி இதன் கோண்; அசுவினி மகம், மூலம்.

தார் நீர்க்கோண், தார் - பூசம், இதன் கோண் - பூசம், அனுஷம், உத்திரட்டாதி, நீர் - பூராடம், இதன் கோண் பரணி, பூரம், பூராடம்.

தீபடிக்கோண் - தீ - கார்த்திகை. இதன்கோண் - கார்த்திகை, உத்திரம், உத்திராடம்.

படி - பூரட்டாதி. இதன் கோண்- புனர்பூசம், விசாகம், பூரட்டாதி.

மால் யாழ்க்கோண் - மால் - திருவோணம். இதன் கோண் - ரோகிணி - அஸ்தம் - திருவோணம்.

யாழ் - திருவாதிரை. இதன் கோண் - திருவாதிரை - சுவாதி - சதயம்.

இந்நான்கையும் - அடி, மருங்குல், அகடு, களம் என வரிசைப்படுத்த வேண்டும்.

அடி - பாதம். பாத ரஜ்ஜு. மருங்குல் = தொடை = தொடை ரஜ்ஜு, அகடு - வயிறு. -- வயிற்று ரஜ்ஜு அல்லது உதரஜ்ஜு

களம் - கழுத்து - கழுத்து ரஜ்ஜு அல்லது கண்ட ரஜ்ஜு.

சேடன் அரிக்கோண் - அடி - பாதரஜ்ஜு, தார் நீர்க்கோண் - மருங்குல் - தொடை ரஜ்ஜு, தீ படிக்கோண் - அகடு = உதர ரஜ்ஜு, மால்யாழ்க்கோண் - களம் - கண்ட ரஜ்ஜு, அம்புலிக்கோண் - மிருகசீரிஷம், சித்திரை - அவிட்டம் = சிரோரஜ்ஜு

அடுத்து ஸ்திரீ தீர்க்கம். ஆண்பெண் நாள் ஒரு கோண உறில் அவம், அச்சனனம் புகல் - ஆண பெண நட்சத்திரம் ஒரு கயிற்றில் வரில் ஆகாது.


அடுத்து ஸ்திரீ தீர்க்கப் பொருத்தம். பதின் மூன்று இவள் நாள் மேல் புலல் இவர் தீர்க்கமுமே.

புலல் - புல்லல் என்பதன் இடைக்குறை

பெண் நட்சத்திரத் தொட்டு பதின் மூன்று நட்சத்திரத் துக்கு மேல் புருஷன் நட்சத்திரம் வரில் ஸ்திரீ தீர்க்கம்.

(புலல் - அமைதல்)

## வேதைக்கயிறு சக்கரம்









மாதிரி :

பெண், கார்த்திகை. இதற்கு அனுஷம், எதிர்வரையில் இருக்கிறது. இது ஆகாது.

இதேபோல் மற்ற நட்சத்திரங்களையும் இந்த சக்கரத்தில் கண்டு கொள்ளவும்.

## சுபமங்கள ரஜ்ஜு




## மாகேந்திர நட்சத்திரம், நட்சத்திர மண்டலம், பாவ தினம்

மும்மூன்றாய் அனுசனனத்து ஐந்து தரம் ஏறில்
மொழிவது மாகேந்திரம்; யாழ் மூலம் எமன் முரசு ஈறு
அம்மான் கம்மும், மால் வேய் தேர், புல் அளி, அவசித்து
ஆடியும், மா அகி புள் வெயில் ஆன் சுடர் ஆடையும் நேர்
இம்மூன்று மண்டலம் நீர் மாகேந்தரம் வாயு
என்பது அனல்; மற்றதற்கு ஆம்; இதம் இலருக்கு இடை சேர்
பம்மாம்ச ஊணர் உறும் தினம், மாதம், வருடம்
படுபொழுது ஈறு உபயம் ஐ மூன்று உடுப்பவம் ஆகுவதே (19)

இக்கவியில் மாகேந்திரத்துக்குக் கூறிய முறையை சற்றுக் கூர்ந்து கவனிக்க வேண்டும். உரையில் பெண் நட்சத்திரத்துக்கு மேல் 4-7-10-13-16-19-22-25 எனக் கூறப்பட்டுள்ளது. இதன்படி பார்த்தால் 1-4-7-10-13-16-19-22-25 என இருக்க வேண்டும். இதுவும் மும்மூன்றாய் என்பதற்குப் பொருந்தும்.

அடுத்து அனுசனத்து ஐந்து தரம் ஏறில் எனக் கூறப்பட்டுள்ளதற்கு இங்கு குழப்பம் போல் தோன்றுகிறது. கவனித்தால் குழப்பம் இல்லை. அதாவது ஐந்து தரம் ஏறில் என்று கூறியிருப்பது, மீண்டும் ஒன்றிலிருந்து ஒரு மூன்று உண்டாகிறது. மூன்றும் மூன்றும் ஆறு. ஆக, ஒன்றிலிருந்து 1 + 6 = 7, 7 + 6 = 13, 13 + 6 = 19, 19 + 6 = 25. இதை 1-7-13 + 9-25 எனப் பார்த்தால் ஐந்து தரம் ஏறில் என்பது தெளிவாகப் பொருந்துகிறது. இது ஆசிரியரின் திறமைச் சுருக்கம்.

இனி, நட்சத்திர மண்டலங்களைக் கவனிப்போம். அவை. யாழ் - திருவாதிரை, மூலம், எமன் - சதயம், முரசு - உத்திரட்டாதி, ஈறு - ரேவதி, அம் மான் - மிருகசிரிஷம், கம் - பூராடம், இந்த ஏழு நட்சத்திரங்கள் நீர் - வருணமண்டலம்.

மால் - திருவோணம், வேய் - புனர்பூசம், தேர் - ரோகிணி, புல் - அனுஷம், அளி - கேட்டை, அவசித்து, ஆடி - உத்திராடம், இந்த ஏழு நட்சத்திரங்களும் மாகேந்திர மண்டலம்.

மா - அசுவினி, அகி - ஆயில்யம், புள் - அவிட்டம், வெயில் - அஸ்தம், ஆன் - உத்திரம், சுடர் - சுவாதி, ஆடை - சித்திரை இந்த ஏழு நட்சத்திரங்கள் வாயு.

வாயு மண்டலம்

நேர் இம்மூன்று மண்டலம் நீர் - மாகேந்திரம், வாயு என்பதைக் கவனிக்கவும்.

அனல் மற்றதற்காம்; மூன்று மண்டலங்களிலும் கூறப்படாத பரணி, கார்த்திகை, பூசம், மகம், பூரம், விசாகம், பூரட்டாதி இவை ஏழும் அக்கினி மண்டலம்.

இதன் பெயர்ப்படி பல காரியங்களுக்கு பயன்படுத்தவும்..





அடுத்து பாவதினம் என்பதைக் கவனிப்போம். இதம் இலருக்கு இடை சேர் - பாவர் மத்திய தினம். பம்மாம்ச ஊணர் உறுதினம் - பம் - நட்சத்திரம், மாம்ச ஊணர் - அசுரர் இவர்கள் பாவர். ஆகவே, இவர்கள் (பாவர்கள்) இருக்கிற தினமும்.

மாதம், வருடம், படுபொழுது, ஈறு - மாதம், வருடம் முடியும்போது,

உபயம் - இரண்டு. ஐம் மூன்று - பதினைந்து தினமும்,

உடுப்பவமாகுவதே - பாவதினமாகும். அதாவது, மாதத்தின் இறுதியில் இரண்டு நாட்களும், வருடத்தின் இறுதியில் பதினைந்து நாட்களும் பாவ தினங்களாகும். இங்கு தினம் என்பது நாள் அல்ல. நட்சத்திரம்.

## நட்சத்திர வடிவு, நட்சத்திரத் தொகை நட்சத்திரத் திசைச் சூலம்

மாச்சிரசு, அவ் அடுப்பு, கற்றை, ஊற்றால், தேங்காய்க்கண்,
மன்மணி, ஆவணம், புடல்பூ அம்மி, நுகம், கைம்மான்,
கோச், சுடர், அம்முறம், முடப்புல், ஈட்டி, பொன்காளம் கோல்
குவித்த தவிட்டுக் கூட்டம் கொத்து, ஒடத்து உருஆம்;
மூச்சிலை, முக்குளம், நால்கால்; மற்று அது நேர்-வேய், மா,
முறம், தீ, ஆறு, அல் மதிமால் மூன்று, ஈறாறு அத்தேர்
தேச்சுடர் ஆடைக்கு ஏகம்; வீப்பல், மறை மற்றால்
திசைச்சூல் புள் கோன்மாமால் தேர், தை என்று உத்திரமே (20)

இக்கவியில் "மாச்சிரசு எனத் தொடங்கி ஒடத்து உரு ஆம்" என முடித்துள்ளதைக் கவனிக்கவும். இதில் நட்சத்திரங்களின் வடிவத்தைக் கூறியுள்ளார்.

அடுத்து "மூச்சிலை, முக்குளம் நாற்கால் மற்றது நேர் எனத் தொடங்கி வீப்பல் என்பது வரை நட்சத்திரர் தொகைகளைக் கூறியுள்ளார்.

பிறகு "மறைமற்றால் எனத் தொடங்கி, என்று உத்திரமே" என நட்சத்திரத் திசைச் சூலத்தைக் கூறியுள்ளார்.

முதலில் நட்சத்திரத் தொகையைத் தெரிந்து கொள்வது இக்கவியின் பொருள் புரிய சுலபமாக அமைந்துள்ளது. அதாவது, முச்சிவை என்பது முச்சிவையாகும். செய்யுளின் எதுகை நோக்கி குறில் நெடிலாயிற்று.

முச்சிவை - பூத்திரையம். அதாவது பூரம், பூராடம், பூரட்டாதி.

முக்குளம் - உத்திரத் திரையம், அதாவது உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி.

ஆக இவை ஆறு நட்சத்திரங்களும் கட்டில்கால் என உருவும், நான்கு எண்கொண்ட தொகையும் இதில் அடங்கியிருக்கிறது.

வேய் - புனர்பூசம், மா - அசுவினி, விசாகம், தீ - கார்த்திகை ஆறு இந்த நட்சத்திரங்களின் தொகை ஆறு.

அல் - இரவு. இது காரணப் பெயராகி அடுப்பு, அதாவது பரணி, மதி - மிருக சீரிஷம், மால் - திருவோணம் - மூன்று இந்த மூன்று நட்சத்திரங்களின் தொகை மூன்று.

தே - இது கடவுளைக் குறிக்கும் சொல். அதாவது முழுமுதற் கடவுளைக் குறிப்பது.

முழுமுதற் கடவுள் - சிவபெருமான், உருத்திரன். இதுவே திருவாதிரை. சுடர் - சுவாதி, ஆடை - சித்திரை. இவை ஒரே எண்.

தேர் - ரோகிணி, ஈராறு - 12. ரோகிணியின் தொகை பன்னிரண்டு. வீ - அவிட்டம், பல் - பல இதன் தொகை கணக்கின்றிப் பலவாகும்.

இதை வரிசைப்படுத்தினால் -

ஒரே எண் 3, 4-எண் கொண்டவை 6, 6 எண் கொண்டவை 4. 12 எண் கொண்டது ஒன்று. ஆக 1, 3, 4, 6, 12, பல ஆறுவகை.





மற்றது என்ற ஒரு சொல். மீதியுள்ள பூசம் - 4, ஆயில்யம் - 4, மகம் - 4, அஸ்தம் - 4, அனுஷம் - 4, கேட்டை - 4, சதயம் - 4, பூரட்டாதி - 4, ரேவதி - 4 என ஒன்பது நட்சத்திரங்களின் தொகை 4 எனக் கூறியுள்ளார். ஆக 4 என்ற எண்ணின் தொகை மொத்தம் - 15 மற்றவை பன்னிரண்டு.

இனி நட்சத்திர வடிவு என்பதில் மாச்சிரசு - குதிரைத் தலை. மன்மகன் - இராஜமணி, ஆவணம் - கடைவீதி, கோ - புலிக்கண், சுளகு - முறம், முடப்புல் - முடப்பனை, கைம்மான் - கைத்தலம், கோல் - முழக்கோல், கொத்து - பூங்கோத்து, கோல் - முழங்கோலின் சொற்குறை, கொத்து - பூங்கொத்தின் சொற்குறை.

| எண் | நட்சத்திரம் | வடிவு | தொகை | |
|---|---|---|---|---|
| 1. | அசுவினி | குதிரைத்தலை | 6 | மாச்சிரசு |
| 2. | பரணி | அடுப்பு | 3 | அடுப்பு |
| 3. | கார்த்திகை | கற்றை | 6 | கற்றை |
| 4. | ரோகிணி | ஊற்றால் | 12 | ஊற்றால் |
| 5. | மிருகசீரிஷம் | தேங்காய்க்கண் | 3 | தேங்காய்க்கண் |
| 6. | திருவாதிரை | இராஜமணி | 1 | மன்மணி |
| 7. | புனர்பூசம் | கடைவீதி | 6 | ஆவணம் |
| 8. | பூசம் | புடலம்பூ | 4 | புடல்பூ |
| 9. | ஆயில்யம் | அம்மி | 4 | அம்மி |
| 10. | மகம் | நுகம் | 4 | நுகம் |
| 11. | பூரம் | கட்டிற்கால் | 4 | கட்டிற்கால் |
| 12. | உத்திரம் | கட்டிற்கால் | 4 | கட்டிற்கால் |
| 13. | அஸ்தம் | கைத்தலம் | 4 | கைம்மான் |
| 14. | சித்திரை | புலிக்கண் | 1 | கோ |
| 15. | சுவாதி | தீபம் | 1 | சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 16. | விசாகம் | முறம் | 6 | முறம் |
| 17. | அனுஷம் | முடப்பனை | 4 | முடப்புல் |
| 18. | கேட்டை | ஈட்டி | 4 | ஈட்டி |
| 19. | மூலம் | பொற்காளம் | 4 | பொன்காளம் |
| 20. | பூராடம் | கட்டிற்கால் | 4 | கட்டிற்கால் |
| 21. | உத்திராடம் | கட்டிற்கால் | 4 | கட்டிற்கால் |
| 22. | திருவோணம் | முழக்கோல் | 3 | கோல் |
| 23. | அவிட்டம் | தவிட்டுக்கூட்டம் | பல | குவித்த தவிட்டுக் கூட்டம் |
| 24. | சதயம் | பூங்கொத்து | 4 | கொத்து |
| 25. | பூரட்டாதி | கட்டிற்கால் | 4 | கட்டிற்கால் |
| 26. | உத்திரட்டாதி | கட்டிற்கால் | 4 | கட்டிற்கால் |
| 27. | ரேவதி | ஓடம் | 4 | ஓடத்துஉரு |

## அடுத்து நட்சத்திர திசைச் சூலவிபரம் :

மறைமற்றால் திசைச்சூல் புள்கோன், மாமால், தேர்தை என்று உத்திரமே.

புள், அவிட்டம், கோன் - கேட்டை, இவையிரண்டும் கிழக்குத்திசைச் சூலம்.

மா - அசுவினி, மால் - திருவோணம், இவையிரண்டும் தெற்குத் திசை சூலம்.

தேர் - ரோகிணி, தை - பூசம். இவையிரண்டும் மேற்குத் திசை சூலம்.

என்று - அஸ்தம், உத்திரம் - உத்திரம் இவையிரண்டும் வடக்குத் திசை சூலம்.

குறிப்பு : திசைச்சூலம் என்று தலைப்பு இருப்பதால், கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என்பதை மேற்குறித்த நட்சத்திரங்களோடு வரிசைப்படுத்திக் கொள்ள வேண்டும்.





இதன் பலன் : நட்சத்திர வடிவுகளின் தன்மை ஜாதகரிடம் பிரதிபலிக்கும். இதை பன்னிரண்டு பாவங்களின் மேல் ஏற்றிக் கொள்ளவும்.

தொகை : ஒரு தொழிலுக்கு எத்தனை பேர் இணைத்துக் கொள்ளலாம் என்பதற்குப் பயன்படும்.

தினச்சூல நட்சத்திரத்தன்று குறித்த திசைப் பிரயாணம் தவிர்க்க வேண்டும் என்பதைக் குறிக்கும்.

## ஜென்மாதி நட்சத்திரப் பெயர், அவற்றிற்கு அதிபர்.

### நட்சத்திர குலம்.

என்று, அருகன், பணி, குரு, கேது, இந்து, அசிதன், சிதன், சேய்க்கு

இகத்து உதயம் முதல் சன்மம், சம்ப, விபச், சேமம்,

பின்தரு ப்ரத்யாரம், அச் சாதகம், வதை, மித்திரம், இப்

பேர்ப் பரமம் - இவை நேர்க்கு ஆம்; குலப்பேர்பேசிடில் தீ

ஒன்று, உமைத்தரயமும், தேர், புல், ஓடம், நுகமும், முன்

உம்பர், அவசித்து, இன்னும், தாரொடு உத்னரங்களும், சோ

மன் தினக்கோண் குருகும்; மதிக் கோண்மனும்; மற்றதும் நால்

வர் அசுரர், வேடர், கீழ், மேல் வாரம் மதிப்பதுவே (21)

ஜென்மாதி நட்சத்திரப் பெயர் - அதிபர் என்று - ஆதித்தன், அருகன் - புதன், பணி - ராகு, குரு - வியாழன், கேது - கேது, இந்து - சந்திரன், அசிரன் - சனி, சிதன் - சுக்கிரன், சேய் - செவ்வாய், ஜென்ம நட்சத்திரத்திற்குப் பெயர், ஜென்மம் - அதிபதி - ஆதித்தன் (சூரியன் 2 ஆவதற்கு - சம்பத்து - அதிபதி - புதன்

3 - ஆவதற்கு - விபத்து, அதிபதி - ராகு

4 - ஆவதற்கு - ஷேமம், அதிபதி - வியாழன்

5 - ஆவதற்கு - பிரத்யாரம், அதிபதி - கேது

6 - ஆவதற்கு - சாதகம், அதிபதி - சந்திரன்

7 - ஆவதற்கு - வதை, அதிபதி - சனி

| | | | | |
|---|---|---|---|---|
| 16. | விசாகம் | முறம் | 6 | முறம் |
| 17. | அனுஷம் | முடப்பனை | 4 | முடப்புல் |
| 18. | கேட்டை | ஈட்டி | 4 | ஈட்டி |
| 19. | மூலம் | பொற்காளம் | 4 | பொன்காளம் |
| 20. | பூராடம் | கட்டிற்கால் | 4 | கட்டிற்கால் |
| 21. | உத்திராடம் | கட்டிற்கால் | 4 | கட்டிற்கால் |
| 22. | திருவோணம் | முழக்கோல் | 3 | கோல் |
| 23. | அவிட்டம் | தவிட்டுக்கூட்டம் | பல | குவித்த தவிட்டுக் கூட்டம் |
| 24. | சதயம் | பூங்கொத்து | 4 | கொத்து |
| 25. | பூரட்டாதி | கட்டிற்கால் | 4 | கட்டிற்கால் |
| 26. | உத்திரட்டாதி | கட்டிற்கால் | 4 | கட்டிற்கால் |
| 27. | ரேவதி | ஓடம் | 4 | ஓடத்துஉரு |

### அடுத்து நட்சத்திர திசைச் சூலவிபரம் :

மறைமற்றால் திசைச்சூல் புள்கோன், மாமால், தேர்தை என்று உத்திரமே.

புள், அவிட்டம், கோன் - கேட்டை, இவையிரண்டும் கிழக்குத்திசைச் சூலம்.

மா - அசுவினி, மால் - திருவோணம், இவையிரண்டும் தெற்குத் திசை சூலம்.

தேர் - ரோகிணி, தை - பூசம். இவையிரண்டும் மேற்குத் திசை சூலம்.

என்று - அஸ்தம், உத்திரம் - உத்திரம் இவையிரண்டும் வடக்குத் திசை சூலம்.

குறிப்பு : திசைச்சூலம் என்று தலைப்பு இருப்பதால், கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என்பதை மேற்குறித்த நட்சத்திரங்களோடு வரிசைப்படுத்திக் கொள்ள வேண்டும்.





இதன் பலன் : நட்சத்திர வடிவுகளின் தன்மை ஜாதகரிடம் பிரதிபலிக்கும். இதை பன்னிரண்டு பாவங்களின் மேல் ஏற்றிக் கொள்ளவும்.

தொகை : ஒரு தொழிலுக்கு எத்தனை பேர் இணைத்துக் கொள்ளலாம் என்பதற்குப் பயன்படும்.

தினச்சூல நட்சத்திரத்தன்று குறித்த திசைப் பிரயாணம் தவிர்க்க வேண்டும் என்பதைக் குறிக்கும்.

### ஜென்மாதி நட்சத்திரப் பெயர், அவற்றிற்கு அதிபர். நட்சத்திர குலம்.

என்று, அருகன், பணி, குரு, கேது, இந்து, அசிதன், சிதன், சேய்க்கு
இகத்து உதயம் முதல் சன்மம், சம்ப, விபச், சேமம்,
பின்தரு ப்ரத்யாரம், அச் சாதகம், வதை, மித்திரம், இப்
பேர்ப் பரமம் - இவை நேர்க்கு ஆம்; குலப்பேர்பேசிடில் தீ
ஒன்று, உமைத்தரயமும், தேர், புல், ஓடம், நுகமும், முன்
உம்பர், அவசித்து, இன்னும், தாரொடு உத்னரங்களும், சோ
மன் தினக்கோண் குருகும்; மதிக் கோண்மனும்; மற்றதும் நால்
வர் அசுரர், வேடர், கீழ், மேல் வாரம் மதிப்பதுவே (21)

ஜென்மாதி நட்சத்திரப் பெயர் - அதிபர் என்று - ஆதித்தன், அருகன் - புதன், பணி - ராகு, குரு - வியாழன், கேது - கேது, இந்து - சந்திரன், அசிரன் - சனி, சிதன் - சுக்கிரன், சேய் - செவ்வாய், ஜென்ம நட்சத்திரத்திற்குப் பெயர், ஜென்மம் - அதிபதி - ஆதித்தன் (சூரியன் 2 ஆவதற்கு - சம்பத்து - அதிபதி - புதன்

3 - ஆவதற்கு - விபத்து, அதிபதி - ராகு

4 - ஆவதற்கு - ஷேமம், அதிபதி - வியாழன்

5 - ஆவதற்கு - பிரத்யாரம், அதிபதி - கேது

6 - ஆவதற்கு - சாதகம், அதிபதி - சந்திரன்

7 - ஆவதற்கு - வதை, அதிபதி - சனி

8 - ஆவதற்கு - மைத்திரம், அதிபதி - சுக்கிரன்

9 - ஆவதற்கு, பரமமைத்திரம் - அதிபதி - செவ்வாய்

சம்ப - சம்பத்து என்பதன் கடைக்குறை. விப- விபத்து என்பதன் கடைக்குறை. இதில், 1-3-5-7 ஆவது தசாக்களின் அதிபதி பாவர்கள் என்பதையும், 2-4-6-8 ஆவது அதிபதி சுபர்கள் என்பதையும் கவனிக்கவும்.

9--ஆவது தசாவுக்கு அதிபதி செவ்வாயாக இருந்தாலும் நன்மையே தருவான்.

இதன் பலன் முதல் தசாவுக்கு அதிபதி சூரியன். லக்கினத்திற்கு எந்த பாவத்தில் இருக்கிறதோ, அந்த பாவ காரகப் பலன் நன்மை தராது. சூரியன், பார்த்த பாவகப் பலனும் சிறப்பில்லை.

இதன் பலன் : முதல் தசாவுக்கு அதிபதி சூரியன்.

இதேபோல் ராகு, கேது, சனி, இவர்கள், அவர்கள் இருந்த பாவகப் பலன்களையும், பார்த்த பாவகப் பலன்களையும் கெடுக்கும்.

புதன், குரு, சந்திரன், சுக்கிரன் இருந்த பாவகப் பலன்கள் நன்மை தரும்.

மூன்றாவது தசா காலத்தில், விபத்துகளுக்கு சந்தர்ப்பம் உண்டாகும். எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

ஐந்தாவது தசா காலத்தில் தகாத நண்பர்களின் புத்தியைக் கேட்க வேண்டிவரும். அது நல்லதல்ல.

ஏழாவது தசா உடல் நலத்தைக் கெடுக்கும். உணவு வகையில் ஒழுங்கு தேவை.

இரண்டாவது தசாபுதன் நல்ல இடத்தில் இருந்தால் அறிவு வளர்ச்சியும், கல்வி வளர்ச்சியும் உண்டாகும்.

நான்காவது தசா காலம். குரு நல்ல இடத்தில் இருந்தால் வண்டி வாகனம், வீடு வாசல், தொழில்வளம் முதலியன அமையும்.





ஆறாவது தசா காலம் சந்திரன். நல்ல இடத்தில் இருந்தால் சுலபமாகவே பல காரியங்களை செய்து முடிக்கலாம்.

எட்டாவது தசா காலம் சுக்கிரன் நல்ல இடத்தில் இருந்தால், மக்களிடையே பெரும்புகழ், புத்தக வெளியீடு முதலியன நன்றாக அமையும்.

ஒன்பதாவது தசா காலம் செவ்வாய் கெட்டிருந்தால் பித்தாதிக்க ரோகமும், பலம் பெற்றிருந்தால் உயர்ந்தோர் நட்பும், ஆதரவும் கிடைக்கும்.

அனுதிரி ஜென்ம நட்சத்திரம் என்பது ஒரு நட்சத்திரத்தின் திருகோண நட்சத்திரங்களாகும். அவை:

| | | |
|---|---|---|
| 1. அசுவினி | மகம் | மூலம் |
| 2. பரணி | பூரம் | பூராடம் |
| 3. கார்த்திகை | உத்திரம் | உத்திராடம் |
| 4. ரோகிணி | அஸ்தம் | திருவோணம் |
| 5. மிருகசீரிஷம் | சித்திரை | அவிட்டம் |
| 6. திருவாதிரை | சுவாதி | சதயம் |
| 7. புனர்பூசம் | விசாகம் | பூரட்டாதி |
| 8. பூசம் | அனுஷம் | உத்திரட்டாதி |
| 9. ஆயில் | கேட்டை | ரேவதி |

அந்தந்த நட்சத்திர தசா காலங்கள் நடக்கும்போது, லக்கினத்திலிருந்து நட்சத்திர ராசியின் பாவம் எத்தனையாவது என்று வைத்துக் கொண்டு அந்த நட்சத்திரத்துக்குக் கூறிய தரு, பறவை, கணம், மிருகம், தேவதை, இருப்பிடம், உறுப்பு இவைகளுக்குரிய தன்மைகளை பாவத்தின் மீது ஏற்றிக் கூறுக.

அடுத்த நட்சத்திர குலம் என்பதைக் கவனிப்போம்.

ஆசிரியர், குலத்தை ஏழு வகையாகப் பிரித்துள்ளார். இதைக் கவியின் இறுதியில் நால்வர், அரர், வேடர், கீழ் என ஏழு பிரிவுகளாகும். அவை முறையே :

தீ ஒன்று, உமைத்திரயம்.

தீ - கார்த்திகை. உமைத்திரயம் - பூரம், பூராடம் - பூரட்டாதி ஆகிய நான்கும் பிரம்மகுலம். 1

முன் - அசுவினி, உம்பர் - புனர்பூசம், அவசித்து, இனன் = அஸ்தம் இந்நான்கும் வைசிய குலம். 3

தார் - பூசம், உத்திரத்திரையம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி இந்நான்கும் சூத்திர குலம். 4

தேர் - ரோகிணி, புல் - அனுஷம், ஓடம் - ரேவதி, நுகம் - மகம், இந்நான்கும் - க்ஷத்திரிய குலம். 2

சோமன் - திருவாதிரை. இதன் திரிகோண் - திருவாதிரை - சுவாதி சதையம், குருகு - மூலம். இந்நான்கும் இராட்சச குலம் 5

மதிக்கோண் - மிருகசீரிஷம். சித்திரை, அவிட்டம், மன் = கேட்டை. இந்நான்கும் வேடர் குலம் 6

மற்றது - பரணி, ஆயில்யம், திருவோணம் - விசாகம் இந்நான்கும் நீச குலம் 7

அந்தந்த குலத்திற்கு கூறப்பட்ட குலங்களின் தன்மை, அந்த நட்சத்திரக்காரர்களிடம் இயற்கையாகத் தோன்றும் அல்லது அந்தக் குலத்தோருடைய நட்பு ஏற்படும். அந்த நட்பால் நன்மையா? தீமையா? என்பதை பாவக காரகப்படி பார்த்துக் கொள்ளவும்.

நட்சத்திர சரித்திரப் படலம் இத்துடன் முற்றுப் பெற்றது.

## நட்சத்திர தேவதையும், திதி தேவதையும் ஒரே தேவதையாக வரும் மாதங்கள்

1. அசுவினி நட்சத்திரமும், சுக்கிலபட்ச நவமியும் சரஸ்வதி. இது மார்கழி தை மாதங்களில் வரும்.

2. பரணியும், சுக்கிலப் பிரதமையும் துர்க்கை. இது சித்திரை மாதத்தில் வரும்.





3. கார்த்திகையும், அபர பட்ச திருதியையும், அக்கினி. இது புரட்டாசி மாதத்தில் வரும்.

4. ரோகிணியும், சுக்லபட்ச திரயோதசியும் - பிரம்மா. இது மார்கழி மாதத்தில் வரும்.

5. மிருகசீரிஷமும், சுக்லபட்ச திருதியையும் சந்திரன். இது சித்திரை மாதத்தில் வரும்.

6. திருவாதிரையும், சுக்லபட்ச சதுர்த்தசியும் - உருத்திரன். இது மார்கழி மாதத்தில் வரும்.

7. புனர்பூசமும், அபரபட்ச பஞ்சமியும் - தேவர்கள். இது ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் வரும்.

8. பூசமும் அபர பட்சதசமியும் வியாழன். இது புரட்டாசி மாதத்தில் வரும்.

9. ஆயில்யமும், அபரபட்ச அஷ்டமியும். ஆதிசேஷன். இது ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் வரும்.

10. மகமும், அபரபட்ச துவாதசியும் சுக்கிரன். இது புரட்டாசி மாதத்தில் வரும்.

11. பூரமும் சுக்லபட்ச ஏகாதசியும் பார்வதி. இது சித்திரை மாதத்தில் வரும்.

12. உத்திரம் - திதி தேவையில்லை.

13. அஸ்தமும், சுக்லபட்ச சப்தமியும் சூரியன். இது ஆனி மாதத்தில் வரும்.

14. சித்திரையும், சுக்லபட்ச துதியையும் - விஸ்வகர்மா. இது புரட்டாசி மாதத்தில் வரும்.

15. சுவாதியும், சுக்லபட்ச அஷ்டமியும் லட்சுமி. இது ஆடி மாதத்தில் வரும்.

16. விசாகமும், சுக்லபட்ச சஷ்டியும் சுப்ரமண்யர். இது ஆவணி மாதத்தில் வரும்.

17. அனுஷமும், அபரபட்ச துதியையும் வாயு. இது சித்திரை மாதத்தில் வரும்.

18. கேட்டையும், சுக்லபட்ச பஞ்சமியும் **இந்திரன்.** இது ஐப்பசி மாதத்தில் வரும்.

19. மூலமும், அபரபட்ச சதுர்த்தியும் அசுரர். இது வைகாசி மாதத்தில் வரும். சித்திரையிலும் வரும்.

20. பூராடமும் பௌர்ணமியும் **வருணன்.** இது ஆனி மாதத்தில் வரும்.

21. உத்திராடமும், சுக்லபட்ச சதுர்த்தியும் **விக்னேஸ்வரன்.** இது ஆடி மாதத்தில் வரும்.

22. திருவோணமும் சுக்லபட்ச துவாதசியும் - **விஷ்ணு.** இது ஆவணி, புரட்டாசியில் வரும்.

23. அவிட்டம் திதி தேவையில்லை

24. சதயமும், அபரபட்ச நவமியும் - **எமன்.** இது சித்திரை, வைகாசியில் வரும்.

25. பூரட்டாதியும், அபரபட்சப் பிரதமையும் குபேரன். இது ஆவணியில் வரும்.

26. உத்திரட்டாதி திதிதேவையில்லை.

27. ரேவதி - திதி தேவையில்லை.

## திதிதேவதை - காளகூடயோகம்

திதிக்கு அதிபர் - துர்க்கை, விசுவத்து அதிபன், மதி, மாச்
சிரசினன், தேஇறை குகன், ஊழ், செல்வி, சொல்தாய், சீற்றத்து
உதித்தவன், அம்பிகை, மால், கம், உருத்திரன், நீர், தனதன்
ஊதை, கனல், அவுணர், சரிர், உலகு, உதயன், முனிவோர்
அதித்திருண்மன், நமன், பொன், அசி தன், சிதன், நந்தீசன்,
ஐவர், இல் மற்றவர் பூர்வ பட்சம் முதற்கு அவைநேர்
விதிப்பர் - சுபதினத்து இனன்நேர் பஞ்சமி தொட்டு உடனே
மேவில் இதற்கு ஓதல் கொடு விட கூடப் பெயரே.





சுக்கிலபட்ச தசமி திதிக்குத் தேவதையாகிய வீரபத்திரனுக்கு நட்சத்திர தேவதையில்லை.

அபரபட்ச திரயோதசிக்கு - நந்தீஸ்வரன்

அபரபட்ச சதுர்த்தசிக்கு - மகேஸ்வரன்

அமாவாசைக்கு - சதாசிவன்

இந்த மூன்றுக்கும் நட்சத்திர தேவையில்லை. மொத்தம் நான்கு திதி தேவதைகளுக்கு நட்சத்திர தேவதையில்லை.

### பூர்வபட்சத்து பிரதமை முதல் பௌர்ணமி முடிய திதி தேவதை

| | |
|---|---|
| 1. துர்க்கை | துர்க்கை |
| 2. விசுவத்து அதிபன் | விஸ்வதேவன் |
| 3. மதி | சந்திரன் |
| 4. மாச்சிரசினன் | விக்னேஸ்வரன் |
| 5. தேஇறைவன் | தேவேந்திரன் |
| 6. குகன் | சுப்ரமண்யர் |
| 7. ஊழ் | சூரியன் |
| 8. செல்வி | லட்சுமி |
| 9. சொல்தாய் | சரஸ்வதி |
| 10. சீற்றத்து உதித்தவன் | வீரபத்திரன் |
| 11. அம்பிகை | பார்வதி |
| 12. மால் | விஷ்ணு |
| 13. கம் | பிரம்மா |
| 14. உருத்திரன் | உருத்திரன் |
| 15. நீர் | வருணன் |

**காளகூட யோகம் :**

பஞ்சமியில் - ஞாயிறு - அஸ்தம்

சஷ்டியில் - திங்கள் - திருவோணம்

சப்தமியில் - செவ்வாய் - அசுபதியும்

அஷ்டமியில் - புதன் - அனுஷமும்

நவமியில் - வியாழன் - பூசமும்

தசமியில் - வெள்ளி - ரேவதியும்

ஏகாதசியில் - சனி - ரோகிணியும்

காளகூடயோகம்

## அபரபட்சத்து பிரதமை முதல் அமாவாசை முடிய திதி தேவதை

| | |
|---|---|
| 1. தனதன் | குபேரன் |
| 2. ஊதை | வாயு |
| 3. கனல் | அக்கினி |
| 4. அவுணர் | அசுரர் |
| 5. சுரர் | தேவர்கள் |
| 6. உலகு உதயன் | அங்காரகன் |
| 7. முனிவோர் | முனிவோர் |
| 8. அதித்திருண்மன் | சேஷன் |
| 9. நமன் | நமன் |
| 10. பொன் | வியாழன் |
| 11. அசிதன் | சனி |
| 12. சிதன் | சுக்கிரன் |
| 13. நந்தீஸ்வரன் | நந்தீஸ்வரன் |
| 14. ஐவர் | மகேஸ்வரன் |
| 15. இல்மற்றவர் | சதாசிவன் |

வரில் காளகூடய கேம்

சுபதினத்து இனன் நேர் - என்பதை நட்சத்திரப் படலம் 18 ஆவது கவியில் சுபநட்சத்திரம் என்று சொல்லப்படுவதைக் கவனிக்கவும்.